R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

முகப்பு :

அருள்மிகு
தஞ்சைப் பெருவுடையார் கோயில்

திருக்கோயில்

இந்து சமய அறநிலைய (ஆட்சி)த் துறை வெளியீடு

மாலை: 21 | சித்தார்த்தி ஆண்டு - ஆனித் திங்கள்—ஜூன்-1979 | மணி: 9

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

திருக்கோயில் திங்கள் இதழின் சந்தாதாரர்களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

ஆணையர் அவர்கள்,
அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை — 600 034

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப்பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. 15—00 உடன், இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங்களுக்கு, ஒரு இதழ் ரூ. 1—25 வீதம் சேர்த்துப் பணம் அனுப்பிச் "சந்தாதாரர்" ஆகலாம்.

தனிப்பட்ட 'சந்தாதாரர்கள்' ஒவ்வொருவரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும் பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் [PINCODE] எண்ணுடன் தெரிவிக்குமாறும், கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவு செய்து வரிசைப் படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறையாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற்பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. 9—60 ஆகின்றது. ஆதலால் வெளிநாட்டுச் சந்தா, ரூ. 20—00-ல் இருந்து ரூ. 25—00 ஆக ஜனவரி 1978 முதல் மாற்றி அமைக்கப்பட்டது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப்போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பொருளடக்கம்

சிதம்பரம் அழைத்தது
—திரு டாக்டர் இரத்தினவேல் சுப்பிரமணியம்

பாரத நூற் பண்போவியங்கள்
—கவிஞர் திரு. மனசை ப. கீரன்

கச்சியப்பர் கவிநலம்
—திரு ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ.எல்.

சங்க நூல்களில் முருகன்
—திரு கி. வா. ஜகந்நாதன்

சைவத்தின் உயிர் நாடிகள்
—பேராசிரியர் திரு பெ. திருஞானசம்பந்தன் அவர்கள்

முருகன் பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தங்கள்
—திரு மு. அருணாசலம்

அறிவியலும் சைவமும்
—திரு க. வச்சிரவேல் முதலியார்

சுந்தரர் வழக்கும் சேக்கிழார் வாக்கும்
—நீதிபதி திரு சதாசிவம் இரத்தினவேல்

திருமயிலைத் தல புராணம்

சங்க காலச்சைவம் —திரு அ. மு. பரமசிவானந்தம்

திருவாசகத்தில் பக்திநெறி
—டாக்டர் திரு சோ. ந. கந்தசாமி

தொண்டை நாட்டுத் திருமால் தலங்கள்
—ஆசிரியர்

ஆலய வழிபாட்டின் சிறப்பு
—பேராசிரியர் மு முத்துராமன்

ஆசிரியர் : ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

சிதம்பரம் அழைத்தது

'மருத்துவப் பேரறிஞர்'

திரு. டாக்டர் இரத்தினவேல் சுப்பிரமணியம் அவர்கள்,
B.Sc., M.D., F.R.C.P. (London), F.C.C.P. (U.S.A.), F.A.M.S.

சிதம்பரத்திற்குப் போவதும், அங்கே நடராசப் பெருமானைத் தரிசனம் செய்வதும் என்றால், எனக்கு எந்தக் காலத்திலும் மிகுந்த அவா உண்டு. சிதம்பரம் அருகிலேயோ அல்லது சிதம்பரத்தைத் தாண்டியோ போக வேண்டிய வேலை இருந்தால், அப்போதெல்லாம் சிதம்பரத்தில் தங்கி நடராசப் பெருமானையும், சிவகாமி அம்மையையும் தரிசனம் செய்துவிட்டுத் தான் போவது வழக்கம். அப்படி இருக்கும் போது சிதம்பரம் கோயிலின் திருப்பணிக் குழுவின் சார்பாக, கிழக்கு இராச கோபுரத் திருப்பணியின் துவக்கத்திற்கு வேண்டிய யாகம் வளர்க்கவேண்டி, அதை ஆரம்பம் செய்வதற்கு வரும்படி ஒரு அழைப்பிதழ் வந்தது. அந்த ஆரம்ப யாகம், நவம்பர் 13, 1977, காலையில் 8 மணிக்கு. இந்த அழைப்பிதழ் கண்டவுடன் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். ஆனாலும் அந்தச் சமயத்தில் தமிழ்நாடு முழுவதும் மழை கொட்டோ, கொட்டென்று கொட்டிக் கொண்டிருந்தது. அதோடு அங்கங்கே நெடுஞ்சாலையிலும் நீர் தேங்கியிருந்தது. ரெயில் போக்குவரத்தும் ஓரளவுக்குப் பாதிக்கப்பட்டிருந்தது. அதனால் உடனேயே திருப்பணிக் குழுவின் செயலருக்கு இது மாதிரி இருக்கிறதே, இந்த விழா ஆரம்பத்தைக் கொஞ்ச நாள் தள்ளி வைக்கக் கூடாதா என்று கேட்டுக் கொண்டேன். அதற்கு அவர் இப்பொழுது ஆரம்பித்தால் ஆருத்திரா திருவிழா வரப்போகிறது. அந்தச் சமயத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் வருவார்கள், அவர்கள் திருப்பணி வேலை ஆரம்பித்ததைப் பார்த்து அவசியம் பொருளுதவி கொடுக்க முன்வருவார்கள். இந்தத் திருவிழா முடிந்துவிட்டால், அப்புறம் பணம் அவ்வளவு சுலபமாக வசூலாகாது. ஆகையால் குறிப்பிட்ட தேதியில் ஆரம்பிப்பது நல்லது என்று பதில் எழுதிவிட்டார்கள்.

ஆகையால் நவம்பர் 12ஆந் தேதி ஞாயிற்றுக்கிழமை, சென்னைக் குழுவின் தலைவன் என்ற முறையில் நானும், சென்னைக் குழுவின் செயலராக இருக்கும் டாக்டர் நடராசன் அவர்களும், சென்னையிலிருந்து என் மோட்டார் வண்டியில் புறப்பட்டோம். நடராசன் ஒரு காலத்தில், சென்னை மருத்துவக் கல்லூரியில், என்னுடைய மாணாக்கராய் இருந்தார். அவர் என்னிடம் வருகிறேன் என்று சொன்னவுடன், மகிழ்ச்சியோடு அவரையும் வாருங்கள் என்று அழைத்துக் கொண்டேன். வழியில் பேசுவதற்கு ஒரு துணை இருக்கும் என்றும், அதே சமயத்தில் என்னென்ன செய்யலாம், எப்படி எப்படி தொடரலாம் என்று ஆலோசனை செய்யவும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததே என்றும் நம்பிப் புறப்பட்டவுடனே, அவர் சொன்னார், 'ஐயா, வழி நெடுக வெள்ளமும், தண்ணீர்த் தேக்கமும் இருக்கிறது என்று கேள்விப்பட்டேன். நாம் ஒரு தந்தி அடித்துவிட்டுத் தங்கிவிட்டால் என்ன?' என்று. அதை நான் சிறிதும் காதில் போட்டுக்கொள்ளவில்லை.

சென்னையை விட்டு வண்டி புறப்பட்டவுடனே, நெடுஞ்சாலைக்கு இரு பகுதியிலும் நிறையத் தண்ணீர் தேங்கியிருப்பதைப் பார்த்தோம். அநேக இடங்களில் நெடுஞ்சாலையின் இரு பக்கத்திலும் மட்டுமல்லாமல், சாலையில்கூட தண்ணீர் தேங்கியிருந்தது. ஒவ்வொரு குளமும் ஏரியும் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. ஒருவிதமான துன்பமும் இல்லாமல் மதுராந்தகம் வரைக்கும் போய்ச் சேர்ந்தோம். மதுராந்தகம் சேரும்போது மத்தியானம் சுமார் 3 மணி இருக்கும். மதுராந்தகத்திலேயே, பேருந்துகளும் லாரிகளும் தொழுப்பேடுக்குஅருகில் நின்று கொண்டிருக்கின்றன என்று சொன்னார்கள். அவர்கள் சொல்லியும், நாங்கள் சிதம்பரம் போய்க்கொண்டிருக்கிறோம். எப்படி இருந்தாலும் நடராசர் பார்த்துக்கொள்வார் என்ற தைரியத்தில், அவர்கள் சொன்னதைச் சிறிதும் காதில் போட்டுக்கொள்ளாமல், வண்டியை ஓட்டும்படி டிரைவரிடம் சொல்லிவிட்டு உட்கார்ந்துகொண்டேன்.

அச்சிறுபாக்கம் சேர்ந்தவுடன், சுமார் 300-க்கு மேற்பட்ட லாரிகளும் பேருந்துகளும் நின்று கொண்டிருந்தன. அந்த டிரைவர்களை விசாரித்தபொழுது, அவர்கள் தொழுப்பேடு தாண்டியவுடனே ஒரு காட்டாறு போகிறது. அதிலே இறங்க முடியாது, அதனால் நாங்கள் போகவில்லை யென்று சொன்னார்கள். நான் அதற்கு, அந்த லாரி, பேருந்து டிரைவர்கள் எல்லாம் கோழைகள்! அவர்களைப் பார்த்து நாமும் அதுபோல் இருக்கக்கூடாது, நாம் போகத்தான் வேண்டுமென்று போனோம்.

சாதாரணமாக, தொழுப்பேடு தாண்டியவுடன் ஆற்றில் தண்ணீரே இராது. அங்கே ஒரு பாலத்தை இடித்துவிட்டுக் கட்டிக்கொண்டிருந்தார்கள். பாலத்திற்கு அப்பால் நெடுஞ்சாலை, தண்ணீரிலேயே போகவேண்டும். அந்த

இடத்தில் நெடுஞ்சாலை தண்ணீர் மட்டத்திற்கு இருந்தாலும், எதிர்ப்பக்கத்திலே ஒரு லாரி வந்து நெடுஞ்சாலையில் சிக்கிக்கொண்டு நின்றிருந்தது. அந்த லாரிக்கு இரண்டு பக்கத்திலும் நிறைந்த வெள்ளம். நெடுஞ்சாலை மீது போனால் ஒருவேளை போகமுடியுமே தவிர, இரண்டு பக்கத்திலும் போகமுடியாது. வெள்ளமோ வேகமாக இருந்தது. இந்த லாரி இல்லாமல் இருந்தால் ஒருவேளை தாண்டலாம். அந்த லாரியும் நிறைய மூட்டைகளையும் சாமான்களையும் கொண்டிருந்தது. ஆகையால், அதைத் தாண்டுவது என்பது இயலாத காரியம். வெள்ளமோ வெகு வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. அப்பொழுது என் நண்பரைப் பார்த்து, எனக்கு ஒரு குறுக்கு வழி தோன்றுகிறது. தொழுப்பேட்டிலேயிருந்து சூணாம்பேடுக்கு ஒரு குறுக்கு வழி இருக்கிறது. அந்த வழியாகப் போகலாம் என்று சொல்லி அந்தப் பாலத்திலிருந்து சுமார் ஒரு மைல் பின்னுக்கு வந்தோம். தொழுப்பேட்டிலிருந்து ரெயில் பாதை குறுக்கிடுவதற்கு முன்பாக, ஒரு சிறியபாதை இருக்கிறது. அது சூணாம்பேட்டுக்குப் போகும். அந்தப் பாதையில் கொஞ்ச தூரம் போனோம். சுமார் 2 மைல் போனபிறகு அங்கே ஏரி உடைபட்டு அந்த வெள்ளம், சாலை மேலே வேகமாக ஆறு போல் போய்க் கொண்டிருந்தது. அந்த வெள்ளத்தினுடைய அகலம் சுமார் 200 கெஜம் தான் இருக்கும். வெள்ளத்திற்கு அந்தப் பக்கம் பேருந்துகளும் லாரிகளும் நின்று கொண்டிருந்தன. பொதுமக்களும் இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் கூடி இருந்தனர். நடந்து போகக் கூட மக்கள் பயந்து கொண்டிருந்தார்கள்.

ஊர் மக்கள், ''வெள்ளத்தில் செல்வது அபாயகரமான காரியம், கார் போகாது. போனீர்களானால் உங்கள் காரை அடித்துக் கொண்டு போகும்'', என்றெல்லாம் சொன்னார்கள். அவர்கள் சொன்னது சரிதான்என்று எனக்கும் தோன்றியது. நாங்கள் சென்ற பாதையில் திரும்புவதற்கே கூட கொஞ்சம் இடர்ப்பட்டுத் திரும்பி, மறுபடி தொழுப்பேடு வந்து அச்சிறுபாக்கம் வந்து சேர்ந்தோம். அச்சிறுபாக்கத்திலேயிருந்து செய்யூர் போகும் நெடுஞ்சாலையைப் பார்த்தோம். அந்தநெடுஞ்சாலையிலும் தண்ணீர் ஓரளவுக்குப் போய்க் கொண்டுதான் இருந்தது. ஆனால், அந்தத் தண்ணீர் மட்டம் அதிக உயரம் இல்லை. இருந்தாலும் வண்டி ஓடும்போது சக்கரத்திலேயிருந்து தண்ணீரானது மோட்டார் வண்டியின் இயந்திரத்தின் மீது அடித்துக் கொண்டிருந்தது. கார் ஓட்டும் டிரைவர் இப்படி நாம் தண்ணீரிலேயே போய்க்கொண்டிருந்தால், கார் நின்றுவிடும் என்று பயமுறுத்தினார். அதற்குள் மாலை 4 மணியாகிவிட்டது. ஒவ்வொரு நிமிடமும் இருட்டிக் கொண்டேயிருந்தது. இப்படி 4,5 மைல் போனபிறகு ஓரளவுக்குத் தண்ணீர் குறைந்தது என்றாலும், சாலை என்னமோ ஈரமாகவே இருந்தது.

சென்னையிலேயிருந்து சூணாம்பேடு வழியாகவும், பாண்டிச்சேரி வழியாகவும், கடலூர் போகும் பாதை இருக்கிறது. அந்தப் பாதை சூணாம்பேட்டிலிருந்து 2 மைல் தள்ளிப் போகும். சூணாம்பேடு வந்து சேர்ந்தவுடன் நாங்கள் மகிழ்ச்சியுடன், இனிமேல் தொந்தரவு இராது என்று ஓரளவு நிம்மதி அடைந்தோம். ஆனால், சூணாம்பேடு வந்தவுடன் அங்கே கிராமத்தில் உள்ளவர்கள், ''சூணாம்பேட்டிலிருந்து பாண்டிச்சேரி போகும்வழி வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது; அந்த வழியாகப் போக முடியாது. வண்ணாங்கிப் பேட்டை போய் அங்கேயிருந்து மரக்காணம் போகவேண்டும் ''என்று சொன்னார்கள். உடனே, டிரைவரிடம் வண்ணாங்கிப்பேட்டை போகச் சொன்னேன். வண்ணாங்கிப்பேட்டையிலிருந்து மரக்காணம் போகும் சாலை, மிகவும் மோசமான நிலையில் இருந்தது. கடல் தண்ணீர் நெடுஞ்சாலை வரை வந்துவிட்டது. ஆனால், கிராமவாசிகள் என் வண்டியைத் தள்ளுவதற்கு உற்சாகமாகமுன்வந்தார்கள். டிரைவரும்வண்டியை ஓட்டிக் கொண்டு போனால், இந்தப் பள்ளத்தில் வண்டி நின்றுவிடும் என்று சொன்னார். அவர்கள் ஒத்தாசையோடு சுமார் 2 பர்லாங் தூரம் வண்டியைத் தள்ளிக்கொண்டே மரக்காணம் போய்ச் சேர்ந்தோம். மரக்காணம் வந்தவுடன் கொஞ்சம் தண்ணீர் குறைவாக இருந்தது. மரக்காணத்தில் ஒருவர் சொன்னார். ''நான் இன்று காலையில்தான் கடலூரிலிருந்து வருகிறேன். போவது, வருவது மிகவும் துன்பம் - நிறையத் தண்ணீர் இருக்கிறது. நீங்கள் பாண்டிச்சேரியிலேயே இரவு தங்கிவிடுங்கள்'' என்று சொன்னார். கடலூர் போய்ச் சேர்ந்தாலும் சிதம்பரம் போகமுடியாது என்றார்.

புதுச்சேரி போய்ச் சேர்ந்தவுடன் அங்கேயும் விசாரித்தோம். சுமார் 6 அல்லது 7 மணி இருக்கும், புதுச்சேரி சேரும்போது. அவர்கள் சொன்னார்கள், ''கடலூர்போய்ச் சேரலாம், ஆனால் அதைத் தாண்டிப்போக முடியாது, வெள்ளம் அதிகமாக இருக்கிறது'' என்றார்கள். மீண்டும் எனது நண்பர் ''ஐயா, ஏன் அவ்வளவு சிரமப்பட்டுப் போகவேண்டும். திரும்பிப் போய் விடலாம்'' என்று சொன்னார். வந்த வழியாகத் திரும்பி விடலாம் என்று சொன்னார். இவ்வளவு தூரம் சிரமப்பட்டு வந்தும், உங்களுக்கு நடராசர்மீது நம்பிக்கை யில்லாமல் இருப்பது பெரிய தவறு என்று சொன்னேன். அதற்கு அவர் நம்பிக்கை இருப்பது ஓரளவுக்கு நல்லதுதான். ஆனால், நம்மைச் சுற்றிலும் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை தண்ணீர் இருக்கும்போது, நம்பிக்கை நம்பிக்கை என்று சொல்லிப் போனால் எப்படி? என்று கேட்டார். மரக்காணத்தில் அவருக்கு ஆசிரியர் என்ற முறையிலும், அவரைவிட வயதானவர் என்ற முறையிலும், அவர் சொன்னதைத் தட்டிவிட்டு, கடலூர் போய்ப் பார்க்கலாம் என்று மோட்டாரைக் கடலூருக்கு ஓட்டச் சொன்னேன். கடலூர் வரை ஒருவிதமான துன்பமும் இல்லாமல் வந்து சேர்ந்தோம்.

கடலூர் பழைய ஊரிலிருந்து ரெயில் பாதை 10 மைல் தூரத்தில் குறுக்கிடுகிறது. அதுவரையில் துன்பம் இல்லை. ரெயில் பாதை குறுக்கிட்டவுடன் 100 கெஜத்திற்கு எல்லாம் நெடுஞ்சாலை வெகு ஆழமாகப் போகிறது.

ஆனால் ,அந்த இடத்தில் கிராமவாசிகள் நின்று கொண்டிருந்தார்கள். இம்மாதிரி வண்டிகள் வரும், அதைத் தள்ளினால் அதற்கு ஏதாவது பண ஒத்தாசை செய்வார்கள் என்றே, அவர்கள் அங்கே நின்று கொண்டிருந்தார்கள். வண்டி அந்த இடத்திற்கு வந்தவுடனே அவர்களே முன்வந்து நாங்கள் தள்ளுகிறோம் என்று தள்ளினார்கள். அப்படியும் அடிக்கடி நெடுஞ்சாலையில் தண்ணீர் கடல் போலிருந்தது. அரை பர்லாங், 1 பர்லாங் என்று தள்ளவேண்டி வந்தது. தண்ணீர் கொஞ்சம் இறங்கியிருக்கிற வரையிலும் வந்தவுடனே, அல்லது சக்கரம் மட்டும் தண்ணீரில் இருக்கும்படியான நிலை வந்தவுடனே காரை ஓட்டிக்கொண்டு போவதும், வெள்ளம் வந்த இடங்களில் ஆளை விட்டுத் தள்ளச் செய்வதுமாக, இரவு சுமார் 9 மணிக்குச் சிதம்பரம் போய்ச் சேர்ந்தோம்.

சிதம்பரம் போய்ச் சேர்ந்தவுடனே அங்கே எங்களைப் பார்த்தவர்களுக்கெல்லாம் ஒரே ஆச்சரியம். ஏனென்றால் வழி நெடுகத் தண்ணீர் நிற்கிறது, வண்டிகள் நிற்கின்றன என்று கேள்விப்பட்டார்கள். ஆகவே, அவர்களே காலையில் தந்தி அடித்திருக்கிறார்கள், வரவேண்டாம். வழிநெடுக வெள்ளம். வேறு ஒருநாள் குறிப்பிடுகிறோம் என்று. அந்தத்தந்தி எனக்கு வரவில்லை. மேலும் தொலைபேசியும் வேலை செய்யவில்லை. அன்று சிதம்பரம் ஓரளவுக்கு ஒரு தீவாக ஆகிவிட்டது. இருந்தாலும் அடுத்த நாள் காலையிலே யாகத்திற்காக வேண்டிய எல்லாவிதமான பொருள்களும் சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தன.

காரியதரிசி அவர்கள் விழாவை வைத்துக் கொள்ளலாமா, எல்லாம் தயாராக இருக்கிறது என்றார். வைத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டு, எவ்வளவு சீக்கிரம்முடியுமோ அவ்வளவு சீக்கிரம் நடராசர் கோயிலுக்குப் போய், நடராசப் பெருமானைத் தரிசனம் செய்தோம்.

நான் அதுவரை கண்டிராத ஒரு காட்சியைக் கண்டேன் அன்றைக்கு. நடராசரைச் சுற்றித் தண்ணீர் நின்றது. ஒரு அகழியில் நடராசப் பெருமான் நின்று கொண்டிருப்பது போல் காணப்பட்டார். சாதாரணமாக, நடராசருக்கு அபிஷேகம் செய்தாலும், அதைச் சுற்றிலும் உள்ள பிராகாரத்தில் தண்ணீர் வடிவதற்கு வாய்க்கால் இருக்கிறது. அது சிவகங்கைக் குளத்தில் போய்ச் சேரும். ஆனால், சிவகங்கைக் குளத்திலிருந்த தண்ணீர், பிராகாரத்தின் மட்டத்திலுள்ளதைவிட அதிகமாக இருந்ததால், தண்ணீர் திரும்பவும் நடராசர் பிராகாரத்திற்கே வந்து கொண்டிருந்தது. அதே காரணத்தால் தவளைகள், மீன்கள் எல்லாம்கூட, நீரோட்டத்தோடு நீந்திக் கொண்டிருந்தன. இருந்தாலும் நடராசப் பெருமானைப் பார்த்தபொழுது, அவர் எப்பொழுதும் போல் சிரித்த முகத்துடன் காணப்பட்டார்.

நானும் சுமார் 60 ஆண்டுகளாக நடராசப் பெருமானைத் தரிசனம் செய்துகொண்டு தான் இருக்கிறேன். ஆனால், அன்று கண்ட காட்சி மிக மிக அதிசயமாக இருந்தது. அவருடைய குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயும், குமிழ் சிரிப்பும் பார்த்து, 'உனக்குச் சிறிதும் கவலை இல்லையா, மக்கள் எல்லாரும் அவதிப் படுகிறார்கள். வழி நெடுக வெள்ளம். இப்படி இருந்தும் மனதிலே என்ன நினைத்துக்கொண்டு ஆனந்தமாக இருக்கிறீர்கள்' என்று என் மனதில் கேட்டுக்கொண்டு, அவரையும் நிந்தித்தேன். நிந்தித்தேனே தவிர, அவரைப் பார்த்து மட்டிலா மகிழ்ச்சியும் அடைந்தேன்.

சாதாரணமாக, சென்னையிலிருந்து சிதம்பரம் போவதென்றால் 4 மணிநேரத்தில், அல்லது மிஞ்சினால் 5 மணிநேரத்தில் போய்ச் சேரலாம். ஆனால், அன்றையதினம் 9 மணி நேரத்திற்கு மேலாயிற்று. என்றாலும் அன்றையதினம் அவரைத் தரிசிக்கும் பாக்கியம் கிடைத்ததற்காக, மிகுந்த மகிழ்ச்சி அடைந்தேன்.

அடுத்த நாள் விழாவை ரத்து செய்ததன் காரணமாக, அந்த நகரவாசிகளுக்கு அடுத்த நாள் காலையில் விழா வைத்துக் கொண்டோம் என்று சொல்வதற்கு அவகாசம் இல்லை. மறுநாள் காலை 8 மணிக்கு நான் கோயிலுக்குச் சென்றபொழுது கூட்டம் அவ்வளவாக இல்லை. இருந்தாலும், நாழி ஆக ஆகக், கொஞ்சங் கொஞ்சமாக மக்கள் வந்து சேர்ந்தார்கள். 8 மணிக்கு விழா ஆரம்பிக்கும்போது 150 அல்லது அதிகமாக இருந்தால் 200 பேருக்கு மேல் இருக்காது. திருப்பணிக்குச் சென்னைக் குழுவின் தலைவன் என்ற காரணத்தினாலும், கிழக்குக் கோபுரத்துத் திருப்பணிகளை நான் ஒப்புக் கொண்டதன் காரணமாகவும், என்னையே முன்னோடியாக வைத்து யாகம் ஆரம்பிக்கப் பட்டது. அதில் முக்கியமாக நடராசரை வேண்டிக் கொண்டு அவர் கோயில் திருப்பணி நல்ல முறையில் நடக்க வேண்டு மென்றும், அதற்கு இடையூறு எதுவும் இல்லாமல் இருக்க வேண்டும் என்றும் பிரார்த்தித்து, யாகத்தை ஆரம்பித்தோம். அதோடு அவருடைய திருப்பணியை ஆரம்பிக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் பொருள் சேகரித்துப் பணியை முடிக்க முடியும் என்பது எங்களது கருத்து. யாகம் முடிந்தவுடன் பந்தக்காலை என் கையில் கொடுத்து, அதைக் கிழக்குக் கோபுர வாசலுக்கு அருகில் நடும்படி செய்தார்கள். இந்தப் பந்தக்காலைச் சுற்றித்தான் மற்றைய கால்கள் நடப்படுகின்றன.

விழா நடந்து கொண்டிருக்கும்போது, பொதுப் பணித் துறைப் பொறியாளர் ஒருவர் வந்து, பெருமாள் ஏரி உடைப்பெடுத்துக் கொண்டது. அதனால் ஆலப்பாக்கத்துக்கு அருகில் தண்ணீர் இடுப்புக்குமேல் போகிறது. நீங்கள் இன்றைக்குச் சென்னைக்குப் போகமுடியாது என்று என்னிடத்தில் சொன்னார். அவரையே வேறு ஏதாவது வழி இருக்கிறதா, சென்னைக்குப் போக என்று கேட்டேன். அதற்கு அவர், சிதம்பரம் இப்பொழுது தற்காலிகமாக ஒரு தீவாக இருக்கிறது; 24 மணி நேரத்திலிருந்து 48 மணி நேரம் ஆகும் தண்ணீர் வடிய. பிறகுதான், கார் எல்லாம் போக முடியும் என்றார். கோயில் விழா 11 மணி அளவில் முடிந்

தது. மறுபடி ஒருமுறை நடராசரைத் தரிசனம் செய்து விட்டு, எவ்வளவு சீக்கிரமாக முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக எனது நண்பர் டாக்டர் அரங்கசாமி வீட்டிற்குப் போனேன். போய் அவர் இல்லக் கிழத்தியாரைச் சீக்கிரம் சாப்பாடு போடுங்கள், வெளிச்சம் இருக்கும்போதே நாங்கள் பட்டணம் போய்ச் சேர வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். வெளிச்சம் இருக்கும்போதே பட்டணத்திற்காவது அல்லது பட்டணத்திற்கு அருகிலாவது போய்ச் சேர வேண்டுமென்று கேட்டதற்கு அவர்களும் அவசர அவசரமாகச் சமையலை முடித்துச் சாப்பாடு போட்டார்கள்.

அங்கிருந்து 11 மணி அளவில் புறப்பட்டோம். அப்போது அங்கிருந்து சிதம்பரத்திற்குப் போகும்போது இருந்ததைவிட, தண்ணீர் அதிகமாக இருந்தது. சிதம்பரத்தை விட்டு 5 மைல் தொலைவில் புவனகிரி வந்து சேர்ந்தோம். புவனகிரி ஆறு மத்தியில் போகிறது. ரோடு வளைந்துபோய் ஒரு பாலத்தைத் தாண்டி மறுபடியும் எந்த வழியாகப் போக வேண்டுமோ அதற்குநேர் எதிர் வழியே போகும். அதனால் 6 மைல் தூரம் அனாவசியமாகச் சுற்ற வேண்டியிருக்கிறது. சாதாரணமாக, ஆற்றின் இரு பக்கங்களிலும் ரோடுக்கும் ஆற்றுக்கும் மத்தியில் 1 பர்லாங் முதல் 2 பர்லாங் வரையில் நிலப் பரப்பு உண்டு. ஆனால், அன்றைக்கு நான் கண்ட காட்சி ஒரு ரோடிலிருந்து இன்னொரு ரோடு வரைக்கும் ஒரே தண்ணீராகவும், புவனகிரி ஆறு கிட்டத்தட்ட கங்கை நதி போலும் காணப்பட்டது. முந்தைய இராத்திரி கூட இப்படித்தான் இருந்திருக்க வேண்டும். இருந்தாலும் இருட்டில் அது தெரியவில்லை. இதைக் கண்ட எனது நண்பர் டாக்டர் நடராசன் நாம் திரும்பிவிடலாம் என்று கேட்டுக் கொண்டார். இன்னொரு 5 மைல் கார் ஓட்டிக் கொண்டு வந்தோம்.

பருத்திப்பட்டு என்ற கிராமம் வந்தவுடன் அங்குப் பேருந்துகளும் லாரிகளும் கார்களும் நின்று கொண்டிருந்தன. ஏனென்றால், அந்த ஊரை விட்டு பர்லாங் தூரத்திலிருந்து தண்ணீர் நின்று கொண்டிருந்தது. அவர்கள் எல்லோரும் இந்த வெள்ளத்தில் போக முடியாது; ஓரிடத்தில் நீரினுடைய ஆழம் இடுப்பிற்கு மேற்பட்டு இருக்கிறது என்று சொன்னார்கள். நானும் தயங்கிக் கொண்டுதான் நின்று கொண்டிருந்தேன். ஆனாலும், நான் நின்று கொண்டிருக்கும்போது எதிர்ப் பக்கத்திலிருந்து மக்கள் வந்து கொண்டிருந்தார்கள். வண்டிகள் ஓடவில்லையே தவிர, மக்கள் நடந்து வந்து கொண்டுதான் இருந்தார்கள். தலையிலே சாமான்களை வைத்துக் கொண்டு, இடுப்பில் மட்டும் ஒரு துண்டையோ வேட்டியையோ கட்டிக்கொண்டு வந்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது, அந்த மக்களோடு பெண்களும் வந்தார்கள். அந்தப் பெண்மணிகள் இப்படி வரமுடியும் என்றால், என் கார் ஏன் இந்த வெள்ளத்தில் போகமுடியாது என்று நினைத்து என் காரைத் தள்ளுவார்களா என்று கேட்டேன். அதற்கு அவர்கள் இசைந்தார்கள். ஆனால், அவர்கள், போகப் போக தண்ணீரின் ஓட்டம் அதிகமாக இருக்கிறது என்றார்கள். நாங்கள் தள்ளுவோம், இருந்தாலும் உங்களுக்கு உத்தரவாதமாக அந்தப் பக்கம் கொண்டு போய்ச் சேர்த்து விடுவோம் என்று சொல்ல முடியாது என்று சொன்னார்கள். என் நண்பர் டாக்டர் நடராசன் வண்டியை விட்டு இறங்கி விட்டார். போகப் போக ஆழமாக இருக்கிறது, இதில் நீங்கள் போவது நல்லதல்ல, உங்களுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டால் எனக்கு மன நிம்மதி இருக்காது. தயவுசெய்து இறங்கிவிடுங்கள், சிதம்பரத்திற்குப் போய்த் தங்கிவிடலாம் என்று மிகவும் கெஞ்சிக் கேட்டுக்கொண்டார். நான் அவரிடம், ''நடராசர் வேலையாகப் போய் வருகிறோம். ஆகவே, அவர் எல்லாம் பார்த்துக் கொள்வார்'' என்று சொன்னேன். நண்பர் அதற்கெல்லாம் ஒன்றும் அசையவில்லை. வண்டியிலே ஏற மறுத்துவிட்டார். வண்டி பக்கத்திலேயே நடந்து வந்தார். இப்படி 2, 3 மைல் தூரம் வந்தோம். அங்கே, மேட்டுப்பாளையம் என்ற ஒரு ஊர் வருகிறது. அந்த ஊர்க் கிராமத் தலைவர் என்னிடம்வந்து, இப்படிப் போகப் போக தண்ணீர் ஆழமாகப் போகிறது. இங்கேயே தங்கிவிட்டுப் போங்கள் என்றார். எதிரிலே வரும் மக்களும் என்னைப் பார்த்து உங்கள் வண்டி போகாது. இன்னும் கொஞ்ச தூரம் போனால் இடுப்பளவு ஆழத்திற்குத் தண்ணீர் இருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். முதலிலே நானும் அவர்கள் சொல்வதற்கு ஆகட்டும், பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்லிக் கொண்டே வந்தேன். ஆனால், இப்படி சொல்பவர்கள் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே வந்தது. ஆகையினால், எனக்குக் கொஞ்சம் கோபம் வந்தது. நீங்கள் எல்லாம் நடக்கும்போது, என் கார் ஏன் போகாது என்று கேட்டேன். அவர்கள், நாங்கள் நடக்கிறோம், உங்கள் காருக்குள்ளே தண்ணீர் போகுமே என்று என்னைக் கொஞ்சம் பயப்படுத்தினார்கள்.

மேட்டுப்பாளையத்துக் கிராமத் தலைவரிடம் டாக்டர் நடராசன் பேச ஆரம்பித்தார். டாக்டர் நடராசரிடம் இருந்து, நான் ஒரு டாக்டர் என்றும், சாதாரணமாக அவர் வைத்தியம் செய்துகொள்ளும் டாக்டர் அரங்கசாமியினுடைய குரு நான் என்றும், அவர் தெரிந்து கொண்டார். பிறகு அவரே என்னிடம் வந்து நீங்கள் தான் என்னுடைய டாக்டருடைய குரு என்று அறிகிறேன். ஆகவே, உங்கள் நலன் என் பொறுப்பாகிவிட்டது. ''யாரோ ஒருவர் சொல்லியும் கேட்காமல் போகிறார், அதனால் எனக்கென்ன என்று இல்லாமல் ஆகிவிட்டது. எனக்குக் காசு, பணம் தேவையில்லை, கிராமத்திலேயிருந்து நான் ஆட்களைக் கொண்டு வருகிறேன். உங்களைப் பாதுகாப்பாக அந்தப் பக்கம் கொண்டு போய்விடுவதுதான் என் நோக்கம் என்று சொன்னார். அவர் சொன்ன இடத்தில் சுமார் முழங்கால் அளவுதான் தண்ணீர் போய்க் கொண்டிருந்தது. அங்கிருந்து அவர் சொன்னபடி 15 ஆட்களைக் கொண்டு வந்தார்.

அவருக்கு இதுபோன்ற வெள்ளத்தில் கொண்டுபோய் விடும் வழக்கம் இருந்தது.

ஆகையால் அவர் என்ன பண்ணினார் என்றால், கார் முன்பாக இரண்டு பேரை நடக்கச் சொன்னார். ஏனென்றால், ரோடு எங்கே இருக்கிறது; ரோடு தாண்டி வயல், பள்ளம் எங்கே இருக்கிறது என்று தெரியாத அளவு வெள்ளம் போய்க் கொண்டிருந்தது. முன்னே ஆட்கள் போவதைப் பார்த்து டிரைவர் வண்டியைஓட்ட ஆரம்பித்தார். வெள்ளத்திற்கு எதிர்ப்பக்கமாக 10 ஆட்களைப் போட்டார். பின்னிருந்து காரைத் தள்ளுவதற்கு 2 ஆட்கள் போதும் என்று சொன்னார். தண்ணீரில் கார் போவதால் அதிகச் சிரமம் இராது. 2 ஆள் அல்லது 3 ஆள் போதும் என்றார். ஏற்கெனவே, பருத்திப்பட்டியிலிருந்து வந்த ஆட்கள் வேறு இருந்தார்கள்.

இதற்கு முன்னால் நான் தண்ணீரில் காரில் பலமுறை போயிருக்கிறேன். ஆனால், அந்த முறைதான் அதிக அளவு தண்ணீரில் நான் காரில் போனேன். டிரைவரும் நானும் தான் காரில் இருந்தோம். கொஞ்சங்கொஞ்சமாகத் தண்ணீர் கார் உள்ளே வர ஆரம்பித்தது. ஓரிடத்தில் கார் பானட் வரைக்கும் தண்ணீர் உள்ளே போய்விட்டது. என் மார்பு வரை தண்ணீர் இருந்தது. காரினுடைய 4 சக்கரங்களும் தண்ணீர் மட்டத்திற்குக் கீழே போகும்போது, கார் டயரில் உள்ள காற்றின் அழுத்தத்தினால் காரை அப்படியே ரோடை விட்டு மேலே தூக்கியது வெள்ளம். அப்பொழுது ஸ்டியரிங் பயன் இல்லாமல் போய்விடுகிறது. சக்கரம் தரையிலே பதிந்தால்தான், ஸ்டியரிங் வேலை செய்கிறது. கார் மிதக்க ஆரம்பித்தவுடன் டிரைவர் பயந்துவிட்டார். என்னுடைய கால்சட்டை, கோட்டு எல்லாம் நனைந்துவிட்டது. நான் எப்பொழுதும் என் கைப்பெட்டியில் ஸ்டெத்தாஸ்கோப், எனக்கு வேண்டிய சாமான்கள் எல்லாம் வைத்துக்கொள்வது வழக்கம். இப்பொழுது அந்தப் பெட்டியினுள்ளே எல்லாம் தண்ணீர் வந்துவிட்டது. மார்பு அளவு தண்ணீர் வந்தவுடன், நானும் சற்றுத் தயங்கினேன்.

நான் தண்ணீரில் போவதைப் பார்த்து, அரை பர்லாங் தூரத்தில் டூரிஸ்ட் பஸ் மாத்திரம் என் பின் வந்தது. ஆனால் அந்தப் பஸ்ஸில் இன்ஜினும் படிகளும் உயரத்தில் இருந்ததால் அதற்கு ஒன்றும் சேதம் ஆகவில்லை. தண்ணீர் என் மார்பு அளவுக்கு வந்தவுடன் எனக்கும் பயம் வந்துவிட்டது. அதற்குப்பிறகு நடராசர் பெயரைக் கொஞ்சம் அதிகமாகச் சொல்ல ஆரம்பித்துவிட்டேன்.

கொஞ்ச தூரத்திலிருந்து என்னைப் பார்த்த மக்கள் எனக்குப் புத்தி சுவாதீனம் இல்லையென்றே நினைத்துவிட்டார்கள். புது வண்டியில் யாரோ ஒரு சேட் ''வெள்ளம் அடித்துக்கொண்டு போகிறதே என்றுகூட இல்லாமல் போகிறாரே, இவருக்கென்ன உயிர்மேல் இலட்சியம் இல்லை போலிருக்கிறது'' என்றெல்லாம் பேசிக் கொண்டார்கள். இதெல்லாம் எனக்குக் காதில் விழுந்து கொண்டுதானிருந்தது. அந்த வெள்ளம் மார்பு வரையில் வந்தது. ஒரு சிறிது நேரத்திற்கெல்லாம் கார் கீழே சென்றது. தண்ணீர் மட்டம் குறைய ஆரம்பித்தது. கொஞ்சம் கொஞ்சமாக மேடு வந்தது. அப்பொழுது அதிக ஆழமிருந்த இடத்தில் ஒரு பக்கம் பஸ்ஸும் இன்னொரு பக்கம் ஒரு அம்பாசிடர் வண்டியும் அமுந்திக் கிடந்தன. அதையெல்லாம் பார்த்த பொழுது நமக்கும் இப்படி ஆகுமோ என்ற பயம் தோன்றியது. நடராசா, நடராசா என்று மனதிலேயே தியானித்துக் கொண்டே இருந்தேன்.

சிறிது நேரத்திற்கெல்லாம் ரோடு மேடாகிக் கொண்டே வந்தது. தண்ணீர் சிறிதும் இல்லாமல் ரெயில் பாதையும் குறுக்கிட்டது. ரெயில் பாதையினைத் தாண்டி அந்தப் பக்கம் வந்தவுடன் மக்கள் காத்துக் கொண்டிருந்தார்கள். தீயணைப்பு அதிகாரிகள் கொஞ்சம் பேர் அங்கே காத்திருந்தார்கள். அவர்கள் சொன்னார்கள், உங்கள் கார் தண்ணீரில் வந்ததால் நாங்கள் கொஞ்சம் ஒத்தாசை செய்கிறோம் என்று. ஆனால், என் (முட்டாள்) டிரைவர் உங்கள் வேலையைப் பாருங்கள் என்றார். அவர்களும் அதுதான் சாக்கு என்று போய் விட்டார்கள். டிரைவர் வண்டியை என்னென்னவோ பண்ணிப் பார்த்தார். அது ஒன்றும் அசையவில்லை. அதுவரைக்கும் வண்டியைத் தள்ளிவந்த கிராமவாசிகள் கொஞ்ச நேரம் பொறுத்தால், தண்ணீர் வடிந்தால், உங்கள் வண்டி புறப்படும் என்று சொன்னதால், ஆரம்பத்தில் ரூ. 30- கேட்டவர்கள், ரூ. 100- வாங்கிக்கொண்டு போய்விட்டார்கள். ரூ. 100- கொடுத்தாலும் அதை ஒன்றும் பிரமாதமாக நான் கருதவில்லை. ஏனென்றால், அவர்கள் கிட்டத்தட்ட 10 மைல் தூரம் தள்ளி வந்தார்கள். அதுவும் கடைசியாக, மார்பு அளவுக்கு அவர்கள் தண்ணீரில் வர வேண்டியிருந்தது.

பிறகு, வண்டி புறப்படவில்லையென்று பானட்டைத் திறந்து பார்த்தால் எல்லா இடத்திலும் தண்ணீர் இருந்தது. கொஞ்சம் தள்ளினால் புறப்படும் என்று டிரைவர் சொன்னார். உடனே கிராமவாசிகளைத் தள்ளச் சொன்னோம்; 1 மைல் தூரம் வரையில் அவர்களும் தள்ளிப் பார்த்தார்கள். அதற்குள் மணி 6 ஆகிவிட்டது. அதாவது 21 மைல் வருவதற்கு 5 மணி நேரம் ஆகிவிட்டது. இன்னும் 130 மைல் போக வேண்டும், பட்டணம் போய்ச் சேருவதற்கு. இதேமாதிரி போனால் இன்னும் 2 நாள் ஆகும் என்று கணக்குப் போட்டேன்.

அதிர்ஷ்டவசமாக, கார் மெக்கானிக் ஒருவர் அந்தக் கிராமத்திலே இருந்தார். அவர், உங்கள் வண்டியின் கார்பரேட்டர் நிறையத்தண்ணீர் இருக்கும். அதை எடுத்துத் துடைத்துக் கொடுக்கிறேன். அதோடு வண்டி ஓடும்என்று சொல்லிக் கார்பரேட்டரைக் கழற்றி அதில் தண்ணீர் இருப்பதைக் காட்டிக் கொஞ்சம் மண்ணெண்ணெய் விட்டுக் கழுவிச் சுத்தம் செய்து போட்டு அனுப்பிவிட்டார். ஆனாலும் அவர், இன்ஜின் முழுவதும்கூட தண்ணீர் சேர்ந்திருக்கும். அடுத்த பெட்ரோல் பங்கிலே காரை நிறுத்தி, எண்ணெயை மாற்றிக் கொண்டு போங்கள். இப்பொழுது நான் செய்திருக்கிற ரிப்பேர் வேலை போதாது, அதை நம்பிக்

கொண்டு போகாதீர்கள், காரும் வேகமாகப் போகாது என்று எனக்கு எச்சரிக்கை செய்து அனுப்பி வைத்தார்கள்.

அங்கிருந்து 7 மைல் தூரத்தில் கடலூர். அவர் சொன்னபடி இன்ஜின் வேலை செய்ய ஆரம்பித்தது. குறைந்த வேகத்திலேதான் போனோம். அரை மணி நேரத்தில் பெட்ரோல் பங்க் வந்து சேர்ந்தோம். அங்கே என் நண்பர் டாக்டர் நடராசன், பங்க் மானேஜரைப் பார்த்து, உங்கள் பங்க் சொந்தக்காரரின் சிநேகித டாக்டர் வந்திருக்கிறார் என்று என் பெயரைச் சொன்னார். அப்பொழுது கிட்டத்தட்ட 7 மணியிருக்கும். அங்கேயிருந்த வேலை ஆட்கள் எல்லாம் வேலையை முடித்துவிட்டுப் போவதற்குத் தயாராக இருந்தார்கள். என்றாலும் மானேஜர் அவர்களைக் கூப்பிட்டு, 'நம்ப முதலாளிக்கு வேண்டிய சிநேகிதராம். அவர் வண்டியைக் கொஞ்சம் சுத்தம்செய்து கொடுத்து விட்டுப் போங்கள்'' என்றார். முதலாளிக்கு வேண்டியவர் என்றுசொன்னதைக் கேட்டு அவர்களும் முணுமுணுத்துக் கொண்டே வந்து வேலை செய்ய ஆரம்பித்தார்கள்.

அதில், முதல்வராயிருந்த மெக்கானிக், காரைப் பார்த்துவிட்டு ஒரே ஆச்சரியப்பட்டார். எப்படி சார், எண்ணெயே இல்லாமல் 6 மைல் தூரம் ஓட்டி வந்திருக்கிறீர்கள் என்று கேட்டுவிட்டு, அவரே சொன்னார், ''தெய்வத்தை நம்பி வந்ததால்தான் ஓடியிருக்கிறது, யாராவது எண்ணெயே இல்லாமல் வண்டி 6, 7 மைல் ஓடியிருக்கிறது என்று சொன்னால் நம்பியிருக்க மாட்டேன்'' என்று சொல்லி 3, 4 பேர்கள் சேர்ந்து வேலை செய்து, ஒரு மணி நேரத்தில், காரை ஓட்டலாம் என்று கொடுத்தார்கள்.

அவர் வண்டியைக் கொடுத்தவுடன் வண்டியும் புறப்பட்டது. நாங்கள் ஒருவேளை பாண்டிச்சேரியில் தங்கிப் போகவேண்டியிருக்கும் என்று நினைத்துக் கொண்டிருந்தோம். பாண்டிச்சேரி வந்து சேர்ந்தவுடன் திண்டிவனம் போய்ச் செஞ்சி, காஞ்சிபுரம், அங்கிருந்து பட்டணம் போகலாம் என்று சொன்னார்கள். ஆனால், நாங்கள் பாண்டிச்சேரி போய்ச்சேர்ந்தவுடன் அங்கே இருக்கிற பொதுப் பணித் துறைப் பணியாளர், லாரியை எடுத்து விட்டார்கள். ஆகவே, வழக்கமாகப் போகும் சாலை மூலமாகப் போகலாம் என்று சொன்னார்கள். அதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்து, திண்டிவனம் வந்தவுடன் டிரைவரைச் சாப்பிடச்சொல்லி, டீயைக் குடிக்கச் சொல்லிப் புறப்பட்டோம். அங்கேயிருந்து எங்கேயும் தண்ணீர் தரைமட்டத்திற்கு அதிகமாக இல்லை. அதனால் வேகம் குறைவாக இருந்தாலும நேராகப் பட்டணம் வந்து சேர்ந்தோம், இராத்திரி 3 மணிக்கு.

கடலூரிலேயிருந்து பட்டணம் வர 6 மணியாயிற்று. சாதாரணமாக, 4 மணி நேரத்தில் வரலாம். 3 மணிக்கு என் சிநேகிதர் டாக்டர் நடராசனை, அவருடைய வீட்டிலே இறக்கிவிட்டேன். வண்டியிலிருந்து இறங்கிய அவர், ஐயா, இந்த மாதிரியாக நான் பிரயாணம் செய்திருக்கவே மாட்டேன். உங்களுக்குள்ள நம்பிக்கை எனக்குக் கிடையாது என்று சொல்லிவிட்டு, வணக்கம் செலுத்தி விடைபெற்றுக் கொண்டார். அவர் வீட்டிற்கும், என் வீட்டிற்கும் சுமார் 3 பர்லாங் தூரம்தான் இருக்கும். இருந்தாலும், அவர் என்னிடம் விடைபெற்றுச் சென்றபிறகு, நானும் டிரைவரும் தனியாக இருந்தபொழுதுதான், கடந்த 38 மணி நேரம் நடந்த சம்பவங்கள் எல்லாம் என்மனத்தில் திரைப் படம் பார்ப்பது போல் வந்தன.

நடராசப் பெருமான் பெயர் மனதிலே இருந்து கொண்டேதான் இருந்தது. அப்பொழுதுதான் எனக்குத் தோன்றிற்று, நாம் உலகத்தில் வெற்றி பெறாமல் போகிறோம் என்றால், தெய்வத்திடம் நம்பிக்கை வைக்காததுதான். தெய்வத்திடம் நம்பிக்கை வைத்தால் அவர் நம்மைக் கைவிடுவதில்லை. அதனால்தான் நம் முன்னோர் ''கடவுளை நம்பினோர் கைவிடப்படார்''. என்று சொன்னார்கள். நாம், எல்லாம் நம்மால் முடியும் என்று வீம்பு பேசினால், அவனும் ஒதுங்கி இருந்து வேடிக்கை பார்க்கிறான். அப்பொழுதுதான் நாம் சிறுபிள்ளைகளைப் போல ஒன்றும் செய்யமுடியாமல் தவிக்கிறோம். நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கிறது என்று சொல்கிறோம்.

நான் சிதம்பரம்போய் வந்ததை, யாரேனும் நெருங்கிய நண்பர்களிடமோ பந்துக்களிடமோ சொன்னால், அவர்கள் நடந்ததைப் பற்றி மகிழ்ச்சி அடையாமல், இது என்ன முட்டாள்தனம்? இதுமாதிரி வெள்ளத்திலா போவீர்கள் என்று சொல்லி, எப்படி அவர்களுக்குத் தெரிந்தவர்கள், வெள்ளத்தில் அடித்துக்கொண்டு செல்லப்பட்டார்கள். உயிர்ச் சேதமாகிவிட்டது என்றெல்லாம் சொல்வார்கள். அதோடு ஒருநாள், இரண்டு நாள் தங்கி இருந்தால் என்னவாம் என்றும் சொல்வார்கள். அப்படி உயிருக்கு ஆபத்து வரும்படி பட்டணம் வந்து சேர்ந்தாயே என்றெல்லாம் சொல்வார்கள்.

ஒன்று மட்டும் நான் நிச்சயமாக அவர்களுக்குச் சொல்வேன். நான் நடராசரை அத்தனை முறை மனத்திலே அழைத்திருக்க மாட்டேன், அத்தனை முறை அவருடைய துணையையும் அறிந்திருக்கமாட்டேன். மற்றவர்கள் என்ன சொன்னாலும், இப்படி நான் போனது பற்றியோ அல்லது வெள்ளத்தில் திரும்ப வந்தது பற்றியோ, எனக்கு எந்தவிதமான வருத்தமும் கிடையாது.

குந்தி தேவியின் பிரார்த்தனை கிருஷ்ண பகவானிடம், ''எனக்கு அடிக்கடி துன்பம் கொடு; துன்பம் வரும்போதுதான் உன் தரிசனம் கிடைக்கும்'' என்பது. ஆனால், என்னுடைய பிரார்த்தனை, ''நடராசப் பெருமானே! துன்பம் கொடுக்காதே, துன்பம் கொடுக்காமல் உன் தரிசனத்தைக் கொடுத்தருள்'' என்பது.

***

பாரத நூற் பண்போவியங்கள்

கவிஞர் திரு. மனசை. ப. கீரன், B.A.,B.T.,

குருட்சேத்திரத்தில் பாண்டவருக்கும் கௌரவருக்கும் நிகழ்ந்த பாரதப் போர் முடிந்து விட்டது. பாண்டவர்களின் எதிரிகள் எல்லோரும் வீழ்ந்து விட்டார்கள். தருமருக்கு முடிசூட்டினார்கள். எல்லோருக்கும் மகிழ்ச்சி. பாண்டவர்களே அரசர்களுக்கெல்லாம் அரசர் என்று நிலைநாட்ட அசுவமேத யாகம் நடத்த முடிவு செய்தனர். எல்லா நாடுகளுக்கும் அறிவித்தார்கள். அசுவமேத யாகத்திற்கு எல்லா அரசர்களும் வந்திருந்தார்கள். தருமரே அரசர்க்கு அரசர், என்று அனைவரும்ஏற்றுக் கொண்டு பாராட்டிச் சிறப்புகள் செய்தார்கள். ஏழைகளுக்கும் ஆதரவற்றவர்களுக்கும் தானங்களை அளித்தார்கள்.

தகாத வழியில் பாண்டவர்களின் நாடு பறிக்கப்பட்டு, திரௌபதியும் அவமதிக்கப் பட்டு, 13 ஆண்டுக்காலம் தொல்லைகளையெல்லாம் அடைந்தவர்கள், மீண்டும், அரசர்கள் ஆன நிலையில், அரண்மனை மண்டபத்தில் எல்லோரும், பார்வை இழந்தவன் மீண்டும் பார்வையைப் பெற்றால் மகிழ்ச்சியடைவதைப்போலப் பேரின்பத்தில் மூழ்கியிருந்தார்கள்.

அப்பொழுது, ''நீங்கள் தான் யாகத்தைச் சிறப்பாக நடத்திவிட்டதாக நினைத்துக்கொண்டிருக்கிறீர்களா? அதுதான் இல்லை'' என்று ஒரு குரல் எங்கிருந்தோ கேட்டது. அரண்மனை மண்டபத்தில் இப்படி ஏளனக்குரல் கொடுத்தது யார்? என்று எல்லோரும் வியப்பாகப் பார்த்தார்கள். அசரீரி ஏதாவது பேசுகிறதோ என்று கற்பனை செய்தார்கள்.

குரல் வந்த திசையில் கீரிப்பிள்ளை ஒன்று ''குருட்சேத்திரத்தில் எளியவர் ஒருவர் ஒரு படி மாவு தானம் செய்தார். அவர் செய்த தானத்தின் முன்னால் நீங்கள் எல்லா நாட்டோரும் கூடிச் செய்த இந்தப் பெரிய அசுவமேதயாகம் ஒன்றுமில்லை. ஏதோ பெரிய யாகம் செய்ததாகப் பெருமையடித்துக்கொள்கிறீர்களே!'' என்று சொல்லிவிட்டு அக்கீரியானது தன்வயிறு குலுங்கச் சிரித்தது. இதில் ஏதோ சூதிருக்கிறது என்று, மன்னர்களில் சிலர் உடைவாளை உருவிக்கொண்டு, அந்தக் கீரிப்பிள்ளையை வெட்டி வீழ்த்த நெருங்கினார்கள். ''நில்லுங்கள், நில்லுங்கள்'' என்று தருமர் துள்ளிக் குதித்து அவர்களைத் தடுத்துக் கீரிப்பிள்ளையை நோக்கிக் குனிந்து, கீரியின் மேல் வாள்படாமல் தடுத்தார்.

கீரிப்பிள்ளாய்! பெரியவர் செய்த பிடி மாவுத் தானம், இந்த அசுவமேத யாகத்தை விட எப்படிச் சிறந்தது, சொல் என்று கீரியை ஆவலுடன் பார்த்தார் தருமர். எல்லோரும் கீரி என்ன சொல்லப்போகிறதோ, என்று கீரியையே பார்த்தார்கள். அப்போதுதான் கீரி அபூர்வமானது, என்று தெரிந்தது. கீரிப் பிள்ளையின் உடம்பில் ஒருபக்கம் பொன்மயமாகப் பிரகாசித்தது. மற்ற பக்கம் பிற கீரிப் பிள்ளைகளைப் போலவே, சாம்பல் நிறத்தில் இருந்தது. அது தன் கூரிய சிறு வாயைத் திறந்து பேசியது:

'' குருட் சேத்திரத்தில் பாரதப்போர் தொடங்குமுன் எளியவர் ஒருவர் இருந்தார். அவரும், அவரது மனைவி, ஒரே ஒரு மகன், மருமகள் ஆகிய நால்வரும், நோன்பு ஒன்றை அனுசரித்தார்கள்''

'' அது என்ன?'' என்ற கேள்விக்குறி அரண்மனை மண்டபத்தில் குழுமி இருந்த அனைவரின் முகத்திலும் படிந்தது.

கீரி தொடர்ந்தது: ''அந்த எளியவரும் அவரது குடும்பத்தினரும் நாள்தோறும் கீழே உதிர்ந்து கிடக்கும் தானியங்களைப் பொறுக்கி எடுப்பார்கள். கிடைத்த தானியத்தைச் சேர்த்து, ஒவ்வொரு நாளும் பிற் பகலில் சமைத்து, நால்வரும் பகிர்ந்துகொண்டு சாப்பிடுவார்கள். சில நாட்களில் தானியம் கிடைக்காமல் போகும். அன்று சாப்பிடமாட்டார்கள். அடுத்தநாள் குறிப்பிட்ட நேரத்தில் கிடைக்கும் தானியத்தைத்தான் சமைத்து நால்வரும் பகிர்ந்துண்பார்கள். இப்படி ஒரு வேளை சாப்பிடும் நோன்பை ஆண்டாண்டு காலமாக அனுசரித்து வந்தார்கள்''.

''இவ்வளவுதானா'' என்று தருமரின் நெருங்கிய நண்பரான மன்னர் ஒருவர், ஏளனமாகக் கீரிப்பிள்ளையைப் பார்த்தார். அவரைப் பார்த்துப் பதிலுக்குப் புன்னகை செய்துவிட்டுக் கீரிப்பிள்ளை தொடர்ந்து பேசியது;

''ஒரு சமயம் பல நாட்கள் உணவுப் பொருள்கள் கிடைக்கவில்லை. ஒருநாள் பசியோடு வெயிலிலும் அலைந்த பிறகு ஒருபடி சோளம் கிடைத்தது. அதை முறைப்படி பிற் பகலில் மாவாக்கிச் சமைத்து நால்வரும் சாப்பிட அமர்ந்தார்கள். அப்பொழுது செவிடான

ஏழையொருவன் மிகுந்த பசியோடு வந்தான். தகுந்த நேரத்தில் வந்தாரே, என்று மகிழ்ச்சியுடன் வரவேற்று, அமரச் செய்து தனக்கிருந்த உணவை அவருக்குப் படைத்தார். அதை அந்த ஏழை அவசர அவசரமாகச் சாப்பிட்டு விட்டுப் பரிவோடு பார்த்தார். ''இதையும் சாப்பிடுங்கள்'' என்று மனைவி தன் பங்கைப் பரிமாறினார். ''அன்பானவளே! நீ பலநாள் பசியால் எலும்பும் தோலுமாக இருக்கிறாய். விலங்குகளும் புழுபூச்சிகளும் பெண்ணைக்காக் கின்றன. உன் பசியை நான் பார்த்துக்கொண்டிருக்க நேர்கிறதே'' என்றான், அந்த வீட்டுத் தலைவன்.

பரவாயில்லை என்று முகமலர்ச்சியுடன் கூற முயன்றாள், மனைவி. வந்தவன் குனிந்த தலை நிமிராமல் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். சாப்பிட்டு முடிந்ததும் மீண்டும் சாப்பாடு எங்கே இருக்கிறது? என்பது போலச் சுற்றிலும் பார்த்தான். அந்த வீட்டுப் பிள்ளை தன் பங்கையும் எடுத்துப் பறிமாறினான். வந்தவன் சாப்பிட ஆரம்பித்துவிட்டான். தந்தை ''வயதானவர்கள் பசியைப் பொறுத்துக் கொள்ளலாம். வயதுப்பிள்ளையான உன்னால் முடியாதே'' என்று கூறி வருந்தினான். தந்தை செய்த பணியைத் தொடர்ந்து செய்வது பிள்ளையின் கடமை அல்லவா? என்று கூறிச் சிரிக்க முயன்றான் பிள்ளை. இதற்குள் வந்தவன், போட்டதைச் சாப்பிட்டு முடித்து விட்டான். இலையைச் சுற்றுமுற்றும் பார்த்தான்.

வீட்டு மருமகள் தன் பங்கையும் இலையில் பரிமாறினாள். என்ன காரியம் செய்தாய்? நீயும் பசித்திருக்க வேண்டியதுதானா? என்றார்? மாமனார். கணவன் வழி செல்ல வேண்டியதுதானே என் கடமை என்று சாதுரியமாகப் பேசிச் சமாதானப்படுத்த முயன்றாள். மருமகள் போட்ட உணவையும் சாப்பிட்டு முடித்தான் வந்தவன். அப்போதுதான் அவன் முகத்தில் மகிழ்ச்சியும் நிறைவும் தெரிந்தது. நீங்கள் நீடூழி வாழ்வீர்கள். சொர்க்கத்திற்குப் போவீர்கள்'' என்று வாழ்த்திவிட்டுச் சென்றான். ''அந்தச் சோற்று வாசனையை முகந்ததாலேயே என் மூக்கு பொன்னானது. சிந்திய மாவில் புரண்டதால் உடலில் ஒருபகுதி தங்க மயமானது. இங்கே வந்தால் உடலின் மற்ற பகுதியும் தங்கமாகும் என்று நினைத்தேன். ஆனால் அப்படி எனக்கு ஆகவில்லை. அதனால் அசுவமேத யாகத்தைவிட அந்தத் தானமே சிறந்தது'' என்றது கீரிப்பிள்ளை.

போரிட்டு வெற்றிகொண்டு அசுவமேத யாகம் செய்வதைவிடப் பல நாட்கள் பட்டினி இருந்தாலும் மற்றவர்களுக்கு உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்ததோரே. அவர்களின் உள்ளம்தான் தங்கமானது, என்று இதிலிருந்து தெரிகிறதல்லவா?

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

என்ன குறை வேண்டும் இனி :

கண்ணபிரான், பகவத் கீதையையும், அதன் சாரமான சரம சுலோகத்தையும் உபதேசம் செய்து, அருச்சுனனை முன் காத்தருளினான். புண்ணியத்தலங்கள் பலவற்றிற்குச் சென்று வழிபடுதலும், புண்ணிய தீர்த்தங்களில் நீராடுதலும் ஆகிய முயற்சிகள், கண்ணபிரானின் கடைக் கண்ணோக்கம் பெறுவதற்கு முன்னம் ஏற்கும் அத்தனை. துவாரகாபுரி நாதனாகிய கண்ணபிரான் அடிமைச் செல்வத்தை நமக்கு அருளிச் செய்த பிறகு, இனி நமக்கு என்ன குறை உள்ளது? தலங்களுக்குச் செல்லவும், தீர்த்தங்கள் ஆடவும், தவம் புரியவும் வேண்டாமலே, நாம் எல்லா நலங்களையும் பெற்றுவிட்டோம்.

தீர்த்தமுயன் றுடுவதும், செய்தவங்கள் செய்தனவும்,
பார்த்தனைமுன் காத்தபிரான் பார்ப்பதன்முன்;—சீர்த்துவரை
மன்னன்அடி யோம் என்னும் வாழ்வுநமக் கீந்ததற்பின்,
என்னகுறை வேண்டும் இனி?

—ஞானசாரம்.

[தீர்த்தம்—புண்ணிய நதிகள். பார்த்தன்—அருச்சுனன், துவரை மன்னன்—துவாரகை என்னும் நகர்க்கு அரசனாகிய கண்ணபிரான்.]

—ஆசிரியர்.

கச்சியப்பர் கவிநலம்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

முன்னுரை :

ஒரு பெரிய நகரம் அல்லது தலத்திற்குச் சென்றால், அங்கு அதுகுறித்து நமக்குப் பல வகையான எண்ணங்களும் நினைவுகளும் எழுதல் இயல்பு. சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருக்கோலக்கா என்னும் தலத்திற்குச் சென்றார். சென்றதும், இங்கு அன்றோ இறைவன் நமது திருஞானசம்பந்தப் பெருமானுக்குப் பொற்றாளம் அளித்தருளினார் என்று நினைவு கூர்ந்தார். ''நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தனுக்கு உலகவர்முன் தாளம் ஈந்து அவன் பாடலுக்கு இரங்கும் தன்மையாளன்'' என்று இறைவனைப் புகழ்ந்து பாடினார். திருவீழிமிழலைக்குச் சென்றபோது, இங்கு அன்றோ சிவபெருமான் திருநாவுக்கரசருக்கும் திருஞானசம்பந்தருக்கும் நித்தலும் படிக்காசு கொடுத்தருளினார் என்று நினைவு கூர்ந்தார். 'இருந்து நீர் தமிழோடு இசைகேட்கும் இச்சையாற் காசு நித்தல் நல்கினீர், அருந்தண் வீழி கொண்டீர் அடியேற்கும் அருளுதிரே'' என்று துதித்து வேண்டிக் கொண்டார். திருவாரூர்க்குச் சென்றபோது, அங்கே திருஞானசம்பந்தப் பெருமான் ''எந்தை தான் எனை ஏன்று கொளும் கொலோ?'' எனப் பாடியதனை நினைவு கூர்ந்து, அதனைப் பின்பற்றித் தாமும், ''எந்தை இருப்பதும் ஆரூர், அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர்'' என்று அருளிச் செய்தார்.

இவ்வாறே, திருநாவுக்கரசர் திருவாவடுதுறைக்குச் சென்றபோது, இங்கு அன்றோ திருக்கழுமலம் என்னும் தலத்தில் தோன்றியருளிய திருஞானசம்பந்தருக்குச் சிவபிரான் அம்பொன் ஆயிரம் கொடுத்தருளினார் என நினைந்து வியந்து, ''காயிரும் பொழில்கள் சூழ்ந்த கழுமல ஊரர்க்கு அம்பொன் ஆயிரம் கொடுப்பர் போலும் ஆவடுதுறையனாரே'' என்று அருளிச் செய்தார்.

இங்ஙனமே திருஞானசம்பந்தப்பெருமானும், தாம் திருவாலங்காடு என்னும் தலத்திற்குச் சென்றபோது, தமக்கு முன்னே வாழ்ந்திருந்த காரைக்கால் அம்மையாரை நினைவு கூர்ந்து, ''அம்மை திருத்தலையாலே நடந்து போற்றும் அம்மையப்பர் திருவாலங்காடாம்'' என்று, அதனை மிதிக்க அஞ்சி, அப்பதியின் பால் ஒரு செழும்பதியில் அன்று இரவு பள்ளி சேர்ந்தார். இன்னோரனைய நிகழ்ச்சிகளால் நாம் ஒரு தலம் அல்லது நகரத்திற்குச் சென்றால், அங்கு வாழ்ந்திருந்த பெரியோர்களை நினைத்தும் மதித்தும் வணங்கிப் போற்றுதல் வேண்டும் என்பது பெறப்படும்.

காஞ்சிபுரம் :

இம் முறைமைக்கு ஏற்ப, நாம் காஞ்சிபுரத்தை நினைக்கும்போது, நமக்கு எத்தனையோ பல எண்ணங்களும், எண்ணற்ற பல பெரியோர்களின் நினைவுகளும், இயல்பாக எழாநிற்கும். அந்நினைவுகளும், எண்ணங்களும் அவரவர் தம் இயல்புக்கு ஏற்ப அமையும். ஒரேயொரு பொருளையே, பலரும் பலவகைக் கோணங்களில், அவரவரும் தத்தம் மனநிலைக்கும் பண்பாட்டிற்கும் ஏற்பக் கருதிக் கண்டு மகிழ்வர்*. அம்முறைமைக்கு ஏற்பக், காஞ்சிபுரத்தை நினைப்பின், நமக்குப் பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் பலரின் நினைவு ஏற்படுதல் இயல்பு. ஆழ்வார்கள், நாயன்மார்கள், ஆசாரியர்கள் முதலிய பற்பலருள், உலகளந்த பெருமாள் கோயிலில் பட்டராக விளங்கித் திருக்குறளுக்கு ஒப்புயர்வற்ற அரும்பெறல் உரையை எழுதியளித்த பரிமேலழகர் பற்றியும், சொன்னவண்ணம் செய்த பெருமாள் (யதோக்தகாரி) கோயிலில் தங்கியிருந்து ஓராண்டு காலம் இராமானுசர் அருளிய ஸ்ரீ பாஷ்யம் என்னும் நூலின் விளக்கச் சொற்பொழிவை நிகழ்த்திய மணவாள மாமுனிகள் பற்றியும், திருத்தண்கா அல்லது தீபப்பிரகாசர் சந்நிதி என்னும் விளக்கொளி கோயிலின் சூழலில் தோன்றியருளிய வேதாந்த தேசிகர் பற்றியும்; குமரகோட்டம் என்னும் முருகன் கோயிலில் முப்போதும் திருமேனி தீண்டி வழிபடும் பேறுடையவராகத் திகழ்ந்திருந்த கச்சியப்ப சிவாசாரியர் பற்றியும்; மற்றும் எத்தனையோ

---

*"Seven men went through a field, one after another. One was a farmer, he saw only, the grass; the next an astronomer, he saw the horizon and the stars; the physician noticed the standing water and suspected miasma; he was followed by a soldier, who glanced over the ground, found it easy to hold, and saw in a moment how the troops could be disposed, then came the geologist who noticed the boulders and the sandy loam, after him came the real-estate broker, who bethought himself how the line of the house lots should run, where would be the driveway, and the stables. The poet admired the shadows coast by same trees, and still more the music of some thrushes and a meadow lark"

—Ralph Waldo Emerson.

பல பெரியோர்களைப் பற்றியும், தமிழ்பயின்ற ஆர்வலர் அனைவரும் நினைவுகூர்ந்து இன்புறுவர் என்று சொல்லுதலும் வேண்டுமோ?

கச்சியப்ப சிவாசாரியர் :

கச்சியப்பர் இற்றைக்குச் சுமார் 800 ஆண்டுகளுக்கு முற்பட்டுச் சேக்கிழாருக்குச் சிறிது பின்னரும், கம்பருக்குச் சிறிது முன்னரும் ஆகக் காஞ்சிபுரத்தில் வாழ்ந்திருந்தவர். குமரகோட்டம் என்னும் புகழ்மிக்க காஞ்சிபுரத்துக் கோயிலில் சிவாசாரியராக விளங்கியிருந்தவர். கந்தபுராணம் என்னும் செந்தமிழ்ப் பெருங் காப்பிய நூலைப் பாடியிருளியவர். அவர்தம் அருமை பெருமைகள் அளவிடற்பாலன அல்ல. முருகப்பெருமான் எழுந்தருளியிருத்தல் சிறப்புடைத்தே யாயினும், குமரகோட்டத்திற்கு அதனினும் மிக்க பெருஞ்சிறப்பை விளைவித்திருப்பது, அக்கோயிலில் கந்தபுராணம் இயற்றியருளிய கச்சியப்ப சிவாசாரியர் வாழ்ந்திருந்தார் என்பதேயாகும். தமிழக மக்கள் அனைவருமே கச்சியப்பரை நினைந்து பெருமை கொள்ளலாம் எனினும், காஞ்சி மாநகர மக்கள் அனைவரும் அவரை நினைந்து தனிச் சிறப்பான பெருமிதங் கொண்டு மகிழலாம். கச்சியப்பரை நினைந்து போற்றி நலங்கொள்வது, காஞ்சிபுரத்து மக்களுக்கெல்லாம் தலையாய கடமையாகும்.

''அணிசெய் காவியம்
ஆயிரம் கற்கினும்
ஆழ்ந்தினிது இருக்கும்
கவியுளம் காண்கிலார்''

எனப் பாரதியார் பாடுவதுபோல, நம்மிற் பலரும் கந்தபுராணத்தை அறிந்திருப்போம். ஆயினும், கச்சியப்ப சிவாசாரியருடைய கவியுள்ளத்தின் சிறப்பினைப் பெரும்பாலும் அறிய முயல்வதில்லை. அதனை ஒரு சிறிது அறிய முயலுவதே இங்கு நமது நோக்கம் ஆகும்.

கச்சியப்பரும் நக்கீரரும்:

நமது தமிழ்நாட்டில் முருகனடியார்கள், பல கோடிக்கணக்கில், பண்டும் இன்றும் என்றும் இருந்து வருகின்றனர். அவர்களுளெல்லாம் தலைசிறந்தவர் கச்சியப்பசிவாசாரியார். பல்லாயிரக்கணக்கான பாடல்களால் முருகனின் வரலாற்றையும், மாட்சிமைகளையும் எடுத்து விளக்கிப் பாடி, நம்மையெல்லாம் முருகப்பெருமானிடத்தில் அன்பு கொள்ளுமாறு செய்து, ஆற்றுப்படுத்தி வருபவர் கச்சியப்பரேயாவர். திருப்புகழ் பாடிய அருணகிரிநாதப் பெருமானுக்குச், சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்திருந்து, அவராற் பெரிதும் புகழ்ந்து போற்றப்பெற்றுள்ள முருகன் அடியாராகிய கச்சியப்பர், தமக்கும் முற்பட்டிருந்த சங்க காலப் புலவர் பெருந்தகையாகிய நக்கீரர் பெருமானைத் தலைசிறந்த முருகன் அடியவராகவும், தமக்குரிய வழிகாட்டியாகவும் கொண்டிருந்தார் என்பது, அவர்தம் நூலாற் புலனாகின்றது. கந்தபுராணம் பாடிய கச்சியப்பருக்கு, நக்கீரர் பாடியருளிய திருமுருகாற்றுப்படை, நித்திய பாராயண நூலாக விளங்கியிருந்தமைக்குச் சான்றுகள் பல, தெளிவாகக் காணப்படுகின்றன. நக்கீரர்பால் அவர் கொண்டிருந்த பேரன்பும் பெருமதிப்பும், பின்வரும் கருத்தமைய அவர் பாடியுள்ள அவையடக்கச் செய்யுளால் வெளிப்படுகின்றன.

''இவ்வுலகத்தைப் படைத்த பிரமதேவன் இங்கே சிவபெருமானைப் பூசித்து வழிபட்டான். அதனாலேயே இந்நகரத்திற்குக் காஞ்சிபுரம் (க—அஞ்சி. க-பிரமன்: அஞ்சி-அஞ்சித்தது, வழிபட்டது) எனக் காரணப் பெயரமைந்தது என்பது தலபுராணம். திருமால் இங்கே கச்சபம் என்னும் ஆமை வடிவில் சிவபிரானைப் பூசித்தார். அதுவே கச்சபேசம் என்னும் கோயிலாக அமைந்துள்ளது. உமாதேவியார் மணலால் இலிங்கம் அமைத்து இங்கு வழிபட்டார். அதுவே திருவேகம்பம் என்னும் கோயிலாகத் திகழ்கின்றது. இவ்வாறு பிரமன், திருமால் உமாதேவியார் என்பவர்களின் வழிபாட்டை ஏற்றுக் கொண்டருளிய சிவபெருமான், அவற்றை மட்டுமேயன்றி, இவ்வுலகத்தில் வாழுகின்ற இழிந்த எளிய மக்களாகிய நம்மனோரின் வழிபாட்டையும் கூட மறாது, மகிழ்ந்து ஏற்றுக் கொள்ளுகின்றான்; அதுபோலப் பொய்யடிமையில்லாத புலவர் பெருந்தகையாகிய நக்கீரர் பெருமான், முதலிய பலராலும் புகழ்ந்து துதிக்கப்பெற்ற முருகப்பெருமான், என்னுடைய சிறுசொல்லையும்கூட, இகழாது இசைந்து ஏற்று மகிழ்ச்சி கொள்ளுவான் என்பதில் ஐயமில்லை'' என்கின்றார் கச்சியப்பர்.

''பொய்யற்ற கீரன் முதலாம்
புலவோர் புகழ்ந்த
ஐயற்கு எனது சிறுசொல்லும்
ஒப்பாகும்; இப்பார்
செய்யுற்றவன், மால், உமை
பூசைகொள் தேவ தேவன்,
வையத்தவர் செய் வழிபாடும்
மகிழும் அன்றே''

இதன்கண் நக்கீரரைப் ''பொய்யற்ற கீரன்'' என்றும்; இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே திருமுருகாற்றுப்படை பாடிய முருகன் அடியாராகிய நக்கீரர் பெருந்தகையே, பின்னர் வழி வழியே வாழையடி வாழையாக வந்து தோன்றிய பல்லாயிரக்கணக்கான முருகன் அடியார்களுக்கெல்லாம் தலைசிறந்த முதல்வராதலின், ''கீரன் முதலாம்புலவோர்'' என்றும்; அவர் பாடிய நூல் ''பெருஞ்சொல்'' அதனை நோக்க யான்பாடும் இந்நூலோ ''சிறுசொல்'' என்றும், கச்சியப்பர் விதந்து குறிப்பிட்டருளிய திறம், நினைந்து நினைந்து மகிழ்தற்குரியதாகும்.

ஆறுபடை வீடுகள்:

ஏனைய பிற கடவுளர் எழுந்தருளி விளங்கும் இடங்களையெல்லாம் தலங்கள் என்றும், சேத்திரங்கள் என்றும், திவ்விய தேசங்கள் என்றும் குறிப்பிடுவர். ஆனால் நம் முருகன் எழுந்தருளி வீற்றிருக்கும் இடங்களை மட்டும், ''படைவீடுகள்'' என்று தனிச் சிறப்பாகக்

குறிப்பிடும் வழக்கம் இருந்து வருகின்றது. முருகன் 'வீரர்களுக்கெல்லாம் ஒரு பெருவீரன்'. ஆதலின், அச் சிறப்பைத் தனித்து இனிது எடுத்து உணர்த்துதற் பொருட்டே, 'படைவீடுகள்' என்னும் பரவலான வழக்கம் நிலவி வருகின்றது எனலாம். முருகன் எண்ணில்லாத எத்தனையோ பல தலங்களில் இருக்கின்றானாயினும், மிக்க பழமையும் பெருமையும் சிறப்பும் உடையனவாகப் போற்றப்பெறும் தலங்கள் ஆறு அவனுக்கு உண்டு. அவற்றையே பெரியோர்கள் ''ஆறுபடை வீடுகள்'' என வழங்கி வருகின்றனர். அவைகள் முறையே திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை என்பனவாகும்.

ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முன்னர், சங்ககாலத் தலைமைப் பெரும் புலவராகிய நக்கீரர் பெருந்தகை, முதன்முதலாகப் பாடிய திருமுருகாற்றுப்படையைத் தழுவியே, ஆறு படைவீடுகள் பற்றிய வழக்காறும், வரிசை முறையும் ஏற்படுவன ஆயின. அவ்வழக்காற்றையும், வரிசை முறையினையும், அங்ஙனமே பிறழாது பின்பற்றித் தழுவிப் போற்றியே, கச்சியப்பர் கந்தபுராணத்தில், கடவுள்வாழ்த்துப் பகுதியில் பாடியிருக்கின்றார். ஆறுபடை வீட்டின் பெயர்களை, முறையே ஒவ்வொரு பாடலின் ஈற்றடியாகிய நான்காம் அடியில் வைத்து, அதற்கு ஏற்ப மேலைய மூன்று அடிகளிலும் பொருத்தமும் திருத்தமும் மிக்க எதுகைத் தொடர்களைச் செவ்விதிற் சிறப்புற அமைத்து, கவிதைநலம் கவினவும், கருத்தமைதியும் கலைநலமும் செறியவும், அவர் பாடியிருக்கும் திறம் மிக்க அருமைப்பாடு உடையது; அறிஞர்களுக்கு ஆராப் பெருவிருந்து ஆவது எனலாம்.

இருப்பரங் குறைத்திடும் எஃக வேலுடைப்
பொருப்பரங் குணர்வுறப் புதல்வி தன்மிசை
விருப்பரங் கமரிடை விளங்கக் காட்டிய
திருப்பரங்குன்று அமர்சேயைப் போற்றுவாம் (1)

சூரலை வாயிடைத் தொலைத்து மார்புகீண்டு
ஈரலை வாயிடும் எஃகம் ஏந்தியே
வேரலை வாய்தரு வெள்ளி வெற்பொரீஇச்
சீரலை வாய்வரு சேயைப் போற்றுவாம் (2)

காவினன் குடிஆறு காமர் பொன்னகர்
மேவினன் குடிவர விளியச் சூர்முதல்
பூவினன் குடிலையம் பொருட்கு மாஉற
ஆவினன் குடிவரும் அமலற் போற்றுவாம் (3)

நீரகத் தேதனை நினையும் அன்பினோர்
பேரகத் தலமரும் பிறவி நீத்திடும்
தாரகத் துருவமாந் தலைமை எய்திய
ஏரகத் தறுமுகன் அடிகள் ஏத்துவாம் (4)

ஒன்றுதொ றாடலை ஒருவி, ஆவிமெய்
துன்றுதொ றாடலைத் தொடங்கி, ஐவகை
மன்றுதொ றாடிய வள்ளல் காமுறக்
குன்றுதொ றாடிய குமரற் போற்றுவாம் (5)

எழமுதி ரைப்புனத்து இறைவி முன்புதன்
கிழமுதிர் இளநலம் கிடைப்ப முன்னவன்
மழமுதிர் களிறென வருதல் வேண்டிய
பழமுதிர் சோலையம் பகவற் போற்றுவாம் (6)

குமரகோட்டம்:

குமரகோட்டத்தில் அருச்சகராகப் பணிபுரிந்து வந்த கச்சியப்பர், அந்த ஆறு படைவீடுகளைப் போலவே, குமரகோட்டமும் மிகப் பெரிய கோயில் அமைப்புகளுடையதாகவும், தெய்விகத் திருவருட் சிறப்புடையதாகவும் மிளிர்தல் வேண்டும் எனப் பெரிதும் ஆர்வங் கொண்டிருந்தார் போலும்! அவர் காலத்தில் அதாவது இற்றைக்குச் சுமார் 800 ஆண்டுகளுக்கு முன்னர், குமரகோட்டம் இப்பொழுதுள்ள அள்வுகூட இல்லாமல், மிகச் சிறிய கோயிலாகவே இருந்திருத்தல் கூடும். எனினும், கச்சியப்பரின் அன்புகெழுமிய ஆர்வம் மிக்க கவியியல் உள்ளம், மிகப் பெரிய கோயிலாக அது வளர்ந்தோங்கி விளங்குதல் வேண்டும் எனப் பெரிதும் விரும்பியிருத்தல் கூடும். அத்தகைய ஆர்வம்மிக்க பெரு விருப்பத்தால், ஆறுபடை வீடுகளையும் பிறவற்றையும் பின்வரும் ஒரே செய்யுளில் தொகுத்துக் குறிப்பிட்டு, அங்கெல்லாம் வைகும் முருகனே குமரகோட்டத்திலும் சிறப்புற எழுந்தருளி விளங்குகின்றான் எனக் கூறி முடிக்கின்றார், கச்சியப்பர்.

''மேவரும் கூடல் மேலை
வெற்பினில், அலைவாய், தன்னில்,
ஆவினன் குடியில், நல் ஏரகம்
தன்னில், தணிகை ஆதிப்
பூவுல குள்ள வெற்பில்,
பொற்புறும் ஏனை வைப்பில்,
கோயில்கொண் டருளி வைகும்
குமரகோட் டத்து மேயோன்''

இச்செய்யுளால், அவர்தம் இனிய சிறந்த கவியியல் உள்ளமும், எல்லையற்ற பக்தியும், இணையிலாப் பெருவிருப்பும் (Wishful Thinking) பிறவும் புலனாதல் காணலாம்.

குமரகோட்டத்து முருகன்:

கச்சியப்பர் தாம் பாடிய கந்தபுராணத்தில் முருகனின் வரலாற்றை மட்டும் பாடிச் சென்றார் அல்லர். தாம் புறத்தே மட்டும் அன்றித் தமது அகத்தேயும் நிலைநிறுத்தி அன்புடன் வழிபட்டு வந்த குமரகோட்டத்து முருகனின் திருவுருவ அமைப்பின் சிறப்பினையும், அவர் நம்பொருட்டுத் தம் கந்தபுராணத்தில் அழகிய சொற்களில், அழியா நிலையில் வண்ண ஓவியமாகத் தீட்டிக் காட்டியருள்கின்றார். பல கோயில்களில் முருகப்பெருமான் ஆறுமுகமும், பன்னிரண்டு கைகளும் உடையவனாகக் காட்சியளிப்பான். ஆனால் குமரகோட்டத்திலோ ஒருமுகமும் நான்கு திருக்கைகளுமாகக் காட்சி தருவான். அவனது ஒரு கையில் செபமாலையும், மற்றொரு கையில் கமண்டலமும் விளங்கும்; ஏனைய இருகைகளில் அபய வரத முத்திரைகள் அமைந்திருக்கும். பிரமதேவன் பிரணவத்திற்குப் பொருள்கூற அறியாமல் விழித்து நின்றபோது ''சிட்டித் தொழிலதனைச் செய்வது எங்ஙன்?'' என்று சினந்துவினவி, அவனைத் தலையிற்குட்டிச் சிறையிடுவித்து, அவனுக்குரிய சிருட்டித் தொழிலை மேற்கொண்டருளிய நிலையில் அமைந்ததே, குமரகோட்டத்தி

லுள்ள முருகனின் திருவுருவமாகும். சிற்ப நூல்கள் இதனைப் பிரமசாத்தர் எனக் குறிப்பிடும். தாம் நாள்தோறும் முப்போதும் தீண்டி வழிபட்டு மகிழ்ந்து வந்த, அத் திருவுருவத்தின் இயல்பைக் கந்தபுராணத்தில் கச்சியப்பர் பின் வருமாறு தீட்டிக் காட்டியிருத்தல் அறிந்து இன்புறற்பாலது.

''கொண்டலை அளக்கும் நொச்சிக்
குமரகோட் டத்துச் செவ்வேள்
கண்டிகை வடமும், தூநீர்க்
கரகமும் கரத்தில் ஏந்திப்
பண்டையில் அயனை மாற்றிப்
படைத்தருள் வேடம் தாங்கி,
அண்டர்கள் எவரும் போற்ற
அருள்புரிந்து அமர்ந்தான் அன்றே''

கோயிலின் அமைப்பு :

கச்சியப்ப சிவாசாரியர் குமர கோட்டத்து முருகனை நாளும் அருச்சித்து வந்தவராயினும், காஞ்சியிலுள்ள திருவேகம்பப் பெருமானிடத்தும், காமாட்சியம்மையினிடத்தும் அளவில்லாத பெரும் பக்தியைக் கொண்டவர். குமர கோட்டம் கோயில், காமாட்சியம்மை கோயிலுக்கும், திருவேகம்பர் கோயிலுக்கும் இடை நடுவே, சோமாஸ்கந்த மூர்த்தம் என்னும் நிலைக்கு ஏற்றவகையில், அமைந்திருத்தலின் சிறப்பை, அவர் எண்ணி எண்ணி மகிழ்ந்து இன்புற்றனர் போலும்! தம் உள்ளத்திற் கிளர்ந்து எழுந்து ஓங்குகின்ற அக்களிபெரும் மகிழ்ச்சிப் பெருமிதத்தினைப் பின்வரும் பாடலில், அவர் அழகொழுக எழுதிக் காட்டுகின்றார்.

''ஏல வார்குழல் இறைவிக்கும்
எம்பிரான் தனக்கும்,
பாலன் ஆகிய குமரவேள்
நடுவுறும் பான்மை,
ஞால மேலுறும் இரவொடு
பகலுக்கும் நடுவே,
மாலை யானதொன் றழிவின்றி
வைகுமாற தொக்கும்''

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

கச்சிநகர்ப் பற்று :

ஒவ்வொரு மனிதனுக்கும் தான் பிறந்த நாட்டின்மீதும் நகரத்தின்மீதும் உள்ளார்ந்த ஒருவகைப் பற்று இருத்தல் வேண்டும். தன்னுடைய நாடு, தன்னுடைய ஊர், தன்னுடைய மொழி என்ற பற்றில்லாதவன் மனிதனல்லன். அவன் நெட்டுயிர்ப்புடைய சவத்திற்கும், நடைப் பிணத்திற்குமே சமமாவான்.*

''தான் பிறந்த நாட்டின்கண்
தனிப்பற்றும் உணர்வும்இலான்
ஏன்பிறந்தான் விண்கொடியன்
எனும்இழிவே எய்துகிறபான்;
தேன்சிறந்த நம்தமிழும்
செழும்சமயம் கலைகளுமே
வான்சிறந்த மாட்சியஎன்
றுணராதான் மடவோனே''

—ந. ரா. மு.

இதனாலேயே ஞானத்தின் திருவுருவாய் விளங்கிய ஞானசம்பந்தப் பெருமானும்கூட, தாம் பாடிய ஒவ்வொரு பதிகத்தின் ஈற்றிலும், தாம் உதித்தருளிய சீர்காழி மாநகரம் பற்றிப் பற்பல வகைகளில் சிறப்பித்து ஓதக் காண்கின்றோம். அம்முறைமைக்கு ஏற்பக் கச்சியப்ப சிவாசாரியரும், தாம் பிறந்த காஞ்சிபுரத்தின் பால் எல்லையற்ற அன்பும் பற்றும் ஈடுபாடும் கொண்டிருந்தார். சீர்காழிக்குப் போலக் கச்சி யம்பதிக்கும் பன்னிரு திருப்பெயர்கள் உண்டு எனக்குறிப்பிட்டு, முறையே அப்பெயர்களுக் குரிய காரணங்களையும் பின்வருமாறு விளக்கிப் பெருமிதம் கொள்ளுகின்றார்.

பெயர்க் காரணங்கள் :

(1) காஞ்சிபுரம், பொன்மயமான காஞ்சி மரங்களையுடையது. (2) பிரளய சித்து, பிரளயலும் அழியாமல் வென்று, நிலைத்திருப்பது. (3) சிவபுரம், அம்பிகை தவஞ்செய்து தழுவச் சிவபிரான் குழைந்து அருள் புரிந்தது. (4) விண்டுபுரம், ஐராவதம் புண்ணியகோடி விமானமாகத் தாங்கப், பிரமன் இயற்றிய வேள்விக்கு விட்டுணு வெளிப்பட்டருளியது. (5) திரிமூர்த்திவாசம், பிரமன் திருமால் உருத்திரன் என்னும் மும் மூர்த்திகளும் நிலையாகத் தங்கி வசிப்பது. (6) பிரமபுரம், தனது மனம் புனிதமாகப் பிரமன் வழிபட்டது. (7) காமபீடம், வீடும் போகமும் அவரவர் விரும்பியபடி, தருவது. (8) தபோமயம், அம்பிகை பிரமன், திருமால் முதலினோர் தவம் புரிந்து அருள்பெற்றது. (9) சகற்சாரம், உலகப் பெரு நவரங்களுள் தருமத்தின் சாரம் ஆகிய அகறப் பயனை மிகுதியாக்கித் தருவது.(10) சகலசித்தி) எல்லாவகையான சித்திகளையும் அளிக்க வல்லது. (11) கன்னிகாப்பு, துர்க்கை என்னும் கொற்றவை காவல்புரிவது. (12) துண்டீர புரம், கயிலையிற் சிவகணத் தலைவர்களுள் ஒருவன் ஆகிய துண்டீரன் என்பவன் மாலதி என்பவளைக் காதலித்ததனால் வந்து பிறந்து ஆட்சிபுரிந்தது.

மூவுலகத்தும் நேர் உளதோ?

சேயாற்றுக்கும் பாலியாற்றுக்கும் நடுவே யுள்ள சமவெளியாகிய காஞ்சிபுரம், கங்கையாற்றுக்கும் யமுனையாற்றுக்கும் நடுவேயுள்ள சமவெளியாகிய காசியினும் மேலானது என்று கட்டுரைக்கின்றார், கச்சியப்பர். ''கங்கை காளிந்தி இடைப்படும் தலத்தில் முற்படும் காஞ்சிமா நகரம்'' என்பது அவர்தம் கூற்று. அம்மட்டோ! ''நகரேஷு காஞ்சி'' எனக் காளிதாசர் புகழ்ந்தபடி, ஏழு நகரங்களுள்ளும் சிறந்தது காஞ்சியே என்றும், இதற்கு நிகரான வேறொரு சிறந்த நகரம் மூவுலகத்திலும் இல்லை என்றும், திட்டவட்டமாகத் தெளிவுறுத்துகின்றார் அவர்.

"Breathes there the man,
With soul so dead,
Who never to himself heath said,
'This is my own, my native land"
—Sir Walter Scott.

''அழகிய அயோத்தி மதுரையே மாயை
அவந்திகை காசி நற்காஞ்சி
விழுமிய துவரை எனப்புவி தன்னில்
மேலவாய் வீடருள் கின்ற
எழுநக ரத்துட் சிறந்தது காஞ்சி
என்று, முன் எம்பிரான் உமைக்கு
மொழிதரு நகர்அந் நகர்எனில், அதற்கு
மூவுல கத்தும்நேர் உளதோ?''

அற்புதப்பொருள்கள் :

காஞ்சிபுரத்தின் பால் தமக்குள்ள எல்லை யற்ற அன்பும் பற்றும் காரணமாக அங்குப் பின்வரும் பலவகை அற்புதப் பொருள்கள் பொற்புற அமைந்து விளங்குவதாகக் கச்சியப் பர் கவின்மிகப் பாடுகின்றார். (1) காமகோடி பீடத்தினுள் உள்ள தூண்டாவிளக்கு ஒன்று. (2) இறைவன் இருக்கும் இறவாத்தானம், பிற வாத்தனம் ஆகிய இடங்கள்இரண்டு. (3) உணவு நல்குவது, கேட்பதைக் கொடுப்பது, ஊமையைப் பேசுவிப்பது ஆகிய தெற்றிகள் மூன்று. (4) கிழக்கிற் கடலும், தெற்கில் பெண்ணையாறும், மேற்கிற் பவளமலையும், வடக்கில் வேங்கடமலையும் ஆகிய அரண்கள் நான்கு. (5) வேதங்களின் வடிவாய்ப் பொன் னிறம் உடைய மாமரம், அரும்பு மலர் காய் என்பன இன்றிப் பழங்கள் தந்து சித்திகள் நல்கும் எகினமரம், நறுமணப்பூக்கள் பலவும் மலரும் மதூகமரம், விண்ணினை நோக்கும் அத்திமரம், நறுநிழல் பிரியாத காஞ்சி மரம் ஆகிய தருக்கள் ஐந்து. (6) தேவர் உணவு அளிக்கும் சாதகப் பறவை, அணிகலன்கள் நல் கும் அன்னப்பறவை, நூற்பொருள் விளக்கும் கிளி, அலகுசொல் ஆந்தை, குறைபெறில் கூவாத கோழி, பாவம் போக்கும் சக்கரவாகம் என்னும் பறவைகள் ஆறு. (7) கம்பை பம்பை மஞ்சள் பிச்சி கலிச்சி மண்ணி வெஃகா என்னும் நதிகள் ஏழு. (8) புனல் உதவித்திரியும் கூவலம் பொது, குறுமுயல் யானையை வெல் லும் பொது, ஏழிசை ஒலிக்கும் பொது, மால் கண்துயின்றிடும் பொது, வேறு ஓர் உருவமாக் கும் பொது, புற்றில் முழவு ஒலித்திடும் பொது, திசைமயக்கம் செய் பொது, அம்மை தவம் செய்பொது என்னும் பொதுக்கள் (மன்றங்கள்) எட்டு. (9) பிணிகள் மாற்றுவது, நாட்டு முதல் வர்கள் முடிவுறுங்கால் செந்நிறமாவது, முக்கால மும் தெரிவிப்பது, சிவபிரான் திருவடி காட்டுவது, வேண்டியன நல்குவது, ஞானம் கொடுப்பது பொன்னிறம் விளைவிப்பது, செல்வம் அளிப் பது, வசீகரம் வழங்குவது ஆகிய பொய்கை கள் ஒன்பது. (10) விடம் அகற்றுவது, பிணி தீர்ப்பது, தேவராக்குவது, வெட்டுண்டவற்றை ஒட்டுவது, பகைவர்களை ஓட்டுவது, இறந் தோரை எழுப்புவது, வழக்குத் தீர்ப்பது, பாவங்களை நீக்குவது, அரசர்களுக்குப் புகலி டம் தருவது ஆகிய கற்கள் பத்து. (1) அயல் மனைச் சென்றோர்-கணவனைப் பிழைத்தோர்- ஆசிரியரை இகழ்ந்தோர் ஆகியவர்களை ஊமை களாகச் செய்வது, திருடர் முன் சுழல்வது- பலபல நிறங்களாகத் தோன்றுவது, வித்தை கள் வழங்குவது, பொழுதும் திசையும் அறி விப்பது, நாகர் ஊர் உய்ப்பது, நவமணிகள் நல்குவது, வடிவினை மறைப்பது, மழைபொழி விப்பது, பகலை இரவாக்குவது, இரவைப் பக லாக்குவது ஆகிய மன்றங்கள் பதினொன்று. இன்னோரனைய அதிசயங்கள் பற்பல அளவி லாது உடையது, காஞ்சிமா நகரம் எனப் பாடு கிறார் கச்சியப்பர்.

அருங்கற்பனை :

சிலப்பதிகாரம் புகார்க் காண்டத்தில், இந் திரவிழாக் காதையில், ஆசிரியர் இளங்கோவடி கள், புகார் நகரத்தில் வெள்ளிடைமன்றம், இலஞ்சிமன்றம், நடுகல்மன்றம், பாவை மன் றம், பூதசதுக்கம் என்பன இருந்ததாகப் பாடி யிருத்தல் போல்வது, இப்பகுதி. இவை கற் பனையே எனினும், வெறும் கற்பனையன்றி அருங்கற்பனை எனலாம். ''நலமே நிறை நாடு'' (Utopia) என்னும் நூலை எழுதிய சர் தாமஸ்மூர் (Sir Thomas Moore) என்பவருக்கும், ''எரிவோன் அல்லது எங்குமில்லாதது'' (Erewhon or Nowhere) என்னும் நூலை இயற்றிய சாமுவேல் பட்லர் (Samuel Butler) என்பவருக்கும், மிக மிக முற்பட்ட முன்னோடி யாகக் கச்சியப்பர், அற்புதக் கற்பனைக் கவின் மிக்க இப்பாடல்களினாற் காட்சி தருகின்றார்.

எந்நகருக்கு உள்ளது? :

காஞ்சிபுரத்தில் எழும் இசையெல்லாம் மறைமுழக்கம்; புனல் எல்லாம் கங்கை; சிலை யெல்லாம் இலிங்கம்; வாழ்பவரெல்லாம் தேவர்; மரம் எலாம் கற்பகம்; துய்ப்பவெலாம் இன்பம்; செயலெலாம் பூசை; உரையெலாம் செபம், நினைவெலாம் தியானம்; நடத்தலும் வலம்; தவறி விழுதலும் இறையடி வணக்கம் என அமையும் என்பது கச்சியப்பரின் உள்ளார்ந்த உட்கோள்! அவர்க்குக் காஞ்சியின்பால் இருந்த வாஞ்சைதான் என்னே!

''அரியபல்இசையும் மறை; புனல் கங்கை;
அருஞ்சிலை இலிங்கம்; அங்குறைவோர்
சுரர்; தரு அனைத்தும் கற்பகம்; இன்பம்
துய்ப்பது! வேள்வியூண் பூசை;
உரை செபம்; நடத்தல் வலம்வருந் தன்மை;
உள்ளலே தியானம், வீழ்ந் திடுதல்
பரன்அடி வணக்கம் ஆவது காஞ்சிப்
பதிக்கலால் எந்நகர்க் குளதே?''

கருமாறிப் பாய்தல் :

கச்சியப்பர், காஞ்சிபுரத்தைப் பற்றிய பலவகைச் செய்திகளையும் அறிந்துணர்ந்த வர் ஆதலின், தமது நூலின்கண் காஞ்சிபுரத் திற் பண்டைக்காலத்தில் நிகழ்ந்து வந்த ஒரு பழக்க வழக்கச் செய்தியையும் குறிப்பிடுகின் றார். சங்க காலத்தில் 'வடக்கிருத்தல்' என்னும் ஒரு முறை கடைப்பிடித்து, ஏதேனும் ஒரு நோக்கம் பற்றி உயிர்துறத்தல் என்னும் பழக் கம் சான்றோர்களிடம் இருந்து வந்தது. அதனைப் புறநானூறு என்னும் பண்டைச் சங்ககால இலக்கியத்திற் காணலாம். அது போல, ஏதேனும் ஒரு பொதுநலம் கருதியோ

ஒரு சிறந்த குறிக்கோள் பற்றியோ, காஞ்சி புரத்தில், காமாட்சியம்மை கோயிலின்கண் உள்ள சக்கரதீர்த்தம் என்னும் உலகாணித் தீர்த்தத்தில் அதன் கிழக்குக் கரையில் உள்ள ஓர் உயரிய படிநிலையில் இருந்து, தலைகீழாக வும், கால்மேலாகவும் பாய்ந்து விழுந்து உயிர் துறக்கும் புனிதப் பழக்கம் ஒன்று, நிலவியிருந் தது. ''கருமாறிப் பாய்தல்'' என இப்பழக்கம் சுட்டப்பெறும். சிங்கமுகாசுரன் போர்க்களத் தில் மாண்டுபோன செய்தியை, ஒற்றர்கள் வந்து சொல்லியது கேட்ட சூரபதுமன், மிகவும் அதிர்ச்சியடைந்து, தனது ஓங்கியுயர்ந்த அரிய ணையின்மேல் இருந்து தலைகீழாகத் தரையில் வீழ்ந்தான், புரண்டு கதறிப் புலம்பினான். இச் செய்தியைக் கூறுங்கால்

''வண்ணச் சிகரம் வழுவுற்றுக்
கீழ்த் தலத்திற்
கண்ணிற் பொழிநீர்க் கடலிடை
வீழ்ந்தனனால்;
ஒண்ணுற்ற காஞ்சி உமையவள்
கோட்டத்தி னின்றும்
தண்ணுற்ற நேரித் தடத்திடையே
வீழ்பவர் போல''

என்று, இந்தப் பண்டைநாட் பழக்கத்தினைக் கச்சியப்பர், கந்தபுராணத்தில், பொருத்தம் மிக்க தக்கதோர் இடத்தில் குறிப்பிட்டிருத்தல், அறிந்து இன்புறற்பாலது. இலக்கியங்களின்வாயி லாக, ஒரு நாட்டின்கண் அவ்வக்காலத்தின் பழக்க வழக்கப் பண்பாடுகள், வரலாற்று நிகழ்ச் சிகள் முதலியவற்றை அறிந்து கொள்ளலாம் என்பதற்கு, இஃது ஒரு நல்ல சான்றாகும்.

சைவநலச் சால்புள்ளம்:

கச்சியப்பரின் இன்னோரனைய நலங்கள் பலப்பல. அவர்தம் உள்ளம், சைவநலச் சால்பு நிறைந்தது. சேக்கிழாருக்குச் சிறிது பின்னர்த் தோன்றிய கச்சியப்பர், சைவநாயன் மார்களின் வரலாற்றிலும், வாழ்க்கையிலும் பெரிதும் ஈடுபாடு உடையவர். இவ்வியல்பு அவர்தம் பாடல்கள் பலவற்றிற் புலனாகின் றது. (1) மேகங்கள் தம் வாயினாற் கடலிடை முகந்த நீரை நந்தி மலையின்மேல் மழையாகப் பொழிதல், கண்ணப்பராகிய காளத்திவேடர் தம் வாயினாற் பொன்முகலியாற்றில் முகந்த நீரைத் திருக்காளத்தி மலையின்மேல் உள்ள குடுமித் தேவர் மீது உமிழ்ந்து திருமுழுக்காட்டு தல் போல உள்ளது என்றும்: (1) பாலாற்றில் மீன்கள் எதிர்ந்தேறிச் செல்லுதல், திருஞான சம்பந்தப்பெருமான் ''வாழ்க அந்தணர் வான வர் ஆனினம்'' என்னும் திருப்பாசுரத்தினை எழுதி விடுத்த தேவார ஏடு வைகையாற்றின் வெள்ளத்தில் எதிர்ந்தேறிச் சென்றதுபோல உள்ளது என்றும்; (3) தொண்டைநாட்டுக் குளங்கள்தோறும் செங்குவளை மலர்கள் அழ குறத் தோன்றி மலர்ந்திருக்கும் காட்சி, திரு வாரூர்ப் பூங்கோயிலில் அறநெறியப்பர் சந்நிதி யில் நமிநந்தியடிகள் என்னும் நாயனார் நீர் பெய்து ஏற்றிவைத்து எரிவித்ததிருவிளக்குகள் போலத் திகழ்கின்றன என்றும்; அழகிய கற்பனை அமையப் பாடியுள்ள பான்மையால் பளிங்கென விளங்குகின்றது.

பூட்டு கார்முகம் தன்னொடும்
தோன்றிய புயல்வாய்
ஊட்டு தண்புனல் நந்தியங்
கிரிமிசை உகுத்தல்,
வேட்டு வக்குலத் திண்ணனார்
மஞ்சனம் விமலற்கு
ஆட்டு கின்றதோர் தனிச்செயல்
போன்றுள தன்றே! (1)

உதிரு கின்றசிற் றுண்டிகொண்டு
ஒலிபுனற் சடைமேல்
மதுரை நாயகன் மண்சுமந்
திட்டமா நதியில்,
முதிரும் முத்தமிழ் விரகன்றன்
ஏடென மொய்ம்மீன்
எதிர்பு குந்திடப் போவது
பாலியாம் யாறு! (2)

பாட்டியல் அளிமுரல் பதுமக் கோயிலில்
நாட்டிய நிமலன்முன் நந்தி நீரிடை
மாட்டிய பல்பெருஞ் சுடரை மானுமால்
கோட்டுயர் தடம்தொறும் குவளை பூத்தவே (3)

கச்சியப்பர் நூற்சிறப்பு:

இத்தகைய பற்பல பெருஞ் சிறப்புகளு டைய தமிழ்க் கவிஞராகிய கச்சியப்பர், இயற் றியருளிய கந்தபுராணக் காப்பிய நலங்களின் மாட்சிமை, நம்மனோர் அறிவால் ஆய்ந் துணர்ந்து அளவிடற்பாலன அல்ல. தமிழிலக்கி யத் தொகுதிகளின் வரிசையில் கந்தபுராணத் திற்குத் தனிப்பெரும் சிறப்பிடம் உண்டு என் பது திண்ணம். சூரபதுமனால் சுவர்க்க வாழ்க்கை இன்பத்தினை இழந்து நின்ற தேவர் கள், பின்னர் முருகப்பெருமான் திருவருளால் அதனைப் பெற்று மகிழ்ந்து இன்பமிக வாழ்ந்த னர் என்பதே, கந்தபுராணக் கதையின் சாரம். ஆதலின், ஜான்மில்ட்டன் (John Milton) என்னும் ஆங்கிலப் பெருங் கவிஞர் பாடிய ''சுவர்க்க இழப்பு-சுவர்க்க மீட்பும்,'' (Paradise Lost & Paradise Regained) என்னும் நூலோடு, ஒருபுடைஒப்புமையுடையது கந்தபுராணம் என, அதன் பெருமையை ஒருவாறு சுருங்கக் கூறலாம். இரண்டிற்கும் காப்பியத் தலைமகன், கடவுளே யாவர். கதைநிகழ்களனோ, மீதலம் பாதலம் பூதலம் என்பனவாகும். காப்பியப் பொருளோ, அறிவுடைய நன்மக்கட்கெல்லாம் பொதுவான தாகும்.

''காதை நாயகன் கடவுளே;
கதைநிகழ் களனோ,
மீத லத்தொடு பாதலம்
பூதலம்; விடயம்
போத மாந்தர்கட் குரியதாம்;
கந்தவேள் புராணம்,
தீதில் சுவர்க்கத்தின் இழப்பொடு
மீட்புமாச் சிறக்கும்''

—ந. ரா. மு.

கவிநலம்:

கந்தபுராணத்தின் கவிநலனும், காப்பியப் பொருள் நலனும், கற்றோர் உள்ளத்தையும், மற்றோர் உள்ளத்தையும் கொள்ளை கொண்டு கவர வல்லனவாகும். ''சிறந்ததொரு கவிதை

யானது திருத்தம் மிக்கதாய், கலைநலம் செறிந்ததாய், நுண்மாண் நுழைபுலம் சான்றதாய், ஆற்றொழுக்கு நடையில் அமைந்ததாய், கற்பவர்க்கெல்லாம் உள்ளக் கிளர்ச்சியும் உவகைப் பெருக்கமும் விளைவிப்பதாய் இருத்தல் வேண்டும்'' என இலக்கியத் திறனாய்வாளர்கள் யாவரும் இயம்புவர். *அத்தகைய நலங்கள் அனைத்தும் அழகுற அமைந்து விளங்குவது கந்தபுராணம் என்பது, தமிழறிஞர் அனைவரும் ஒப்ப முடிந்ததொன்று.

மனிதகுலப் புராணம்:

உண்மையில் ஆய்ந்துணரின், ''கந்தபுராணம் நமது மனித குலத்தின் சொந்த புராணமேயாகும்.'' தேவர்களைச் சூரபதுமன் சிங்கமுகன் தாரகன் ஆகிய அசுரர்கள் சிறையில் இட்டுத் துன்புறுத்த, முருகப்பெருமான் தோன்றித் தன்னுடைய வேற்படையால் அசுரர்களை அழித்துத், தேவர்களைச் சிறையினின்று விடுவித்துக் காத்தருளினான் என்பது, தத்துவ நுணுக்கங்கள் அமைந்த சிறந்த உருவக அமைப்புடையதாகும்†

தத்துவ விளக்கம்:

தேவர்கள் என்போர் உயிர்களாகிய நாமே. சூரபதுமன் சிங்கமுகன் தாரகன் ஆகிய மூவரும், நம்மைப் பலவகைகளில் அலைக்கழிக்கும் ஆணவம் மாயை கன்மம் என்னும் மும்மலங்களேயாம். உயிர்களாகிய நம்மை, அசுரர்கள் போற் கொடிய மும்மலங்களின் பிடியினின்று விடுவித்துக் காத்தருளும் ஒப்புயர்வற்ற இறைவனே, முருகப்பெருமான். அஞ்ஞானத்தை ஞானமே வெல்லும். சூரபதுமன் முதலிய அசுரர்களைப் போன்ற மும்மலங்களால் விளையும் அஞ்ஞானத்தை, மெய்ஞ்ஞானமாகிய வேலே வென்றொழித்தது. அருளாசிரியர் நல்கும் ஞானத்தாலேயே உயிர்கள் வீடுபேறு எய்தும். அதுபோல முருகனது வேற்படையின் துணையினாலேயே, தேவர்கள் சிறையினின்று விடுபட்டுச் சுவர்க்கலோக வாழ்வின்பம் பெற்று மகிழ்ந்தனர். நாம் நம் பகைவர்களை வெறுத்தலும் அழித்தலும் செய்யாமல், அவர்களின் மனத்தை மாற்றித் திருத்தி உய்வித்தல் வேண்டும். நாம் தீமையை வெறுக்கலாமேயன்றித் தீயவர்களை வெறுக்கலாகாது (Hate the Sin, but not the Sinner) பகைவரிடமும் அன்பு காட்டி நலம்பல புரிந்து, பகைவர்களையும் நண்பர்களாகச் செய்துகொள்ள வல்ல பண்புடைமையே, தலைசிறந்த சான்றாண்மையாகும். அதுவே வெற்றிகளுக்கெல்லாம் மேலான சிறந்த பெரு வெற்றியாகும்.

கொடியவனாகிய சூரபதுமனை அழித்தொழிக்காமல், அவனது மனத்தினை மாற்றித் திருத்தி, அவனைத் தனது சிறந்த அடியவர்களுள் ஒருவனாக முருகப்பெருமான் ஏற்றுக்கொண்டருளினான். இது தான் முருகனின் ஈடுஇணையற்ற அருட்பெருஞ் சிறப்பியல்பாகும். *

''தீயவை புரிந்தா ரேனும்
குமரவேள் திருமுன் உற்றால்,
தூயவர் ஆகி மேலைத்
தொல்கதி அடைவர் என்கை,
ஆயவும் வேண்டும் கொல்லோ?
அடுசமர் அந்நாட் செய்த
மாயையின் மகனும் அன்றோ
வரம்பிலா அருள்பெற் றுய்ந்தான்!''

—கந்தபுராணம்

இத்தகைய எத்தனையோ பல தத்துவ நுட்பங்களைத் தகவுற விளக்குவதே கந்தபுராணம் எனின், அதனை இயற்றியருளிய கச்சியப்பர் கவிநலத்தின் சிறப்பினை யாம் என்னென்போம்! ''கரையற்ற தொன்றைக் கரை காணல் ஆகுமோ?'' ''கடல் கண்டோம் என்பார் யாவரே முடிவுறக் கண்டார்?''

முடிவுரை:

தமிழகப் பெருங் கவிஞர்கள் பலருள் தலைசிறந்த ஒருவராகிய நம் கச்சியப்பரை, நாம் ஒரு மேகத்திற்கு ஒப்பிடலாம். மேகம் கடலிற் படியும்; அதன் புனலை அருந்தும்; உலகம் உய்யும்படியும், வெப்பம் தணியும்படியும், மலைமுகட்டில் ஏறி, இனிய மழையைப் பொழியும். அதுபோல அருள்மேகம் ஆகிய கச்சியப்பரும், சூதமுனிவர் அருளிய மாபெருங் காந்தம் என்னும் கடலிற் படிந்தார். முருகனின் பெரும் புகழாகிய புனலை அருந்தினார்; உலக மக்கள் உய்யவும், பிறவி வெப்பம் தணியவும், காஞ்சிபுரமாகிய மலைமுகட்டில் ஏறி, அமிழ்தம் போன்று இனிய செந்தமிழ்க் கவிதை மழையினைப் பொழிந்தார். அத்தகைய கச்சியப்பரைத் தமிழ் மக்களாகிய நாம் அனைவரும் தக்காங்கு போற்றித் தமிழ்நலம் பேணி, வாழ்வாங்கு வாழ்ந்து மகிழ்வோமாக.

---

* "After all, poetry should not only be elegant, artistic, and ingenious, but flowing, stimulating and pleasant to the readers".

—Prof. A.C. Bradley

† "Every time you find in our books a tale, the reality of which seems impossible, a story which may seem so repugnant to both reason and common sense, then be sure that the tale contains a profound allegory veiling a deeply mysterious truth; and the greater the absurdity of the letter, the deeper the wisdom of the spirit."

—Geoffrey Hodson,
Christianity and the Modern World, p.21
(The Hidden Wisdom in the Holy Bible)

*"There is a temptation to look upon our opponents as inhuman monsters, infernal fiends plotting in dark cellars who require to be destroyed for the safety and health of the world. But we should try to change the mind of our opponents, without resorting to force. If we disagree with our opponent, it is not a justification for destroying him. If he is blind we should help him to see, we must awaken the sense of justice in him. We should never weary in our effort to help him cast off his error. Then what is good in him will unite with what is good in us and we will all march unitedly towards the goal."

—Dr. S. Radhakrishnan,
Religion and Culture, p.

சங்க நூல்களில் முருகன்

'வாகீச கலாநிதி'
திரு கி. வா. ஜகந்நாதன் அவர்கள்

(முற்றொடர்ச்சி)

முருகனுக்கு எல்லா இடங்களும் உரியன வானாலும், முக்கியமாக ஆறு இடங்களைச் சிறப்பாகக் கொள்வது வழக்கம். அவற்றை ஆறுபடை வீடுகள் என்று சொல்லும் மரபு நெடுங்காலமாக இருந்து வருகிறது. அந்த மரபுக்கு மூலமாக இருப்பது திருமுருகாற்றுப் படை.

பழைய நூல்களைப் பத்துப் பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு என்று மூன்று வரிசையாகப் பிரிப்பார்கள். இவற்றின் முன் இரண்டு வரிசைகளும் மிகப் பழமை யானவை. அவற்றைச் சங்க நூல்கள் என்பார்கள். பத்துப்பாட்டு என்பது பத்து நீண்ட பாடல்கள் அடங்கிய தொகுதி. தனிப்பாடல் திரட்டைப் போலப் பல புலவர்கள் பாடிய பாடல்களைத் தொகுத்து எட்டு நூல்களாகப் பிரித்து வைத்திருக்கிறார்கள். அவைகளே எட்டுத் தொகை.

பத்துப் பாடலில் முதலில் நிற்பது திருமுருகாற்றுப்படை. அதை இயற்றியவர் நக்கீரர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய அந்த நூல், இன்றும் பாராயண நூலாகப் பயன்பட்டு வருகிறது. சைவத் திருமுறைகளில் பதினோராந் திருமுறையில் கோக்கப்பெற்ற நூல்களில் ஒன்றாகவும் திகழ்கிறது. பத்துப்பாட்டில் பல புலவர்கள் இயற்றிய பாடல்கள் இருக்கின்றன. அவற்றைக் கால அடைவாக வைத்துத் தொடுக்கவில்லை. நக்கீரருக்கு முந்தி இருந்த கபிலருடைய நூலாகிய குறிஞ்சிப்பாட்டு, எட்டாவதாக இருக்கிறது. நக்கீரருடைய புலமைச் சிறப்பை எண்ணி அதனை முதலில் வைத்தார்கள் என்று சொல்வதற்கும் இல்லை. அவர் பாடிய மற்றொரு பாட்டாகிய நெடுநல்வாடை ஏழாவதாக நிற்கிறது. முருகனுடைய புகழைச் சொல்வதனால் திருமுருகாற்றுப்படையை முதற்பாட்டாக வைத்துக் கோத்தார்கள் என்று சொல்வதுதான் பொருந்தும். எதிலும் முருகனுக்கு முதலிடம் கொடுக்கும் தமிழர்கள் அவனைப் பாடும் நூலுக்கு முதலிடம் கொடுத்தது பொருத்தம் அல்லவா?

சங்க நூல்களில் முருகனுடைய புகழை விரிவாகக் கூறுபவை இரண்டு. ஒன்று திருமுருகாற்றுப்படை, மற்றது பரிபாடல். திருமுருகாற்றுப்படை விரிவாகத் திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர் சோலை என்பனவற்றைப் பற்றிக் கூறுகிறது. முருகனுடைய புகழையும் பலவகையில் பேசுகிறது.

நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் நமக்குக் காட்டும் முருகன் பேரழகனாகவும் பெரு வீரனாகவும் பெருங் கருணை வள்ளலாகவும் இருக்கின்றான். குறிஞ்சித் திணைக்கு உரிய தெய்வம் என்ற வரையறை இருந்தாலும், அவன் உலக முழுவதும் நிரம்பி யிருக்கிறான். உருவம் கொண்டும் அருவமாகவும் இருக்கிறான். இயங்கும் பொருளிலும் இயங்காப் பொருளிலும் இருக்கிறான். ஆறுதலங்கள் மாத்திரமா அவன் உறையும் இடங்கள்? பலப்பல இடங்களில் பலப்பல உருவங்களில் பலப்பல செயல்களை நிகழ்த்திக் கொண்டு விளங்குகிறான். பலப்பல இயல்புள்ள மக்கள் அவனைத் தம்தம் இயல்புக்கு ஏற்ற முறைகளிலே வழிபடுகிறார்கள். அவர்களுக்கு இரங்கி அவர்கள் வேண்டியவற்றை அருள் செய்கிறான் முருகன்.

அவன் திருவுருவம் ஒன்று அல்ல; பல. பேரொளிப் பிழம்பாக, சூரியனைப் போல நிற்பது ஒருருவம். சிறிய கழல் புனைந்த திருவடியும் கலிங்கம் அணிந்த திருவிடையும், கடம்ப மாலை புனைந்த திருத்தோளும், காந்தளங் கண்ணி அணிந்த திருமுடியும் கொண்டு அருகே தேவயானையோடு எழுந்தருளியிருப்பது ஒரு கோலம். அழகான கிரீடத்தை அணிந்து கொண்டு, இரண்டு காதுகளிலும் நட்சத்திரத்தைப்போலக் குழைகள் விளங்க, பிணிமுகம் என்னும் யானையின் மேல் ஏறி, ஒரு கையால் அங்குசத்தைப்பற்றிக் கொண்டு, மற்றொரு கையைத் துடையின்மேல் வைத்து, அன்பர்களுக்கு அருள்செய்யும் பொருட்டு வருவது ஒரு கோலம். மயில்மேல் வருவது ஒருகோலம். ஆட்டுக் கிடாயின்மேல் வருவது ஒரு கோலம்.

உலகத்து இருளை ஓட்டும் பேரொளி படைத்த திருமுகமும், இடையில் ஒரு கரமும், சூரியனைப் பாதுகாக்கும் முனிவர்களுக்கு அரணாகத் தூக்கிய மற்றொரு கரமும் கொண்டு நிற்பது ஒரு கோலம். கையில் கேடயத்தையும், வேலையும் தாங்கிக்கொண்டு அந்தணர் வேள்வியைப் பாதுகாக்க நிற்பது ஒரு திறம். சின்முத்திரை காட்டும் திருக்கரமும் மாலை

யைப் பற்றிய திருக்கரமும் தோன்ற உபதேசம் செய்யும் குருபரனாக வீற்றிருப்பது ஒரு திறம். போர்க்களத்தில் வெற்றி பெற்றுக் களவேள்வி செய்கையில் ஒருகை மணியை அசைக்க மற்றொரு கை ஆணையிட்டுச் சுழல வீரனாக நிற்பது ஒரு திறம். வள்ளிநாயகியோடு அமர்ந்து இன்பம் மிக்கு உலகில் மழைபொழிய ஆணையிடும் ஒரு கரமும், தேவமகளிர் கணவன் மாரோடு வாழும்படி மணமாலை வழங்கும் ஒரு கரமும் படைத்து எழுந்தருளியிருப்பது ஒரு திறம். ஒவ்வொரு திறத்தினரும் அன்போடே வழிபட்டால் அவர்களுக்கேற்ற வண்ணம் அருள்வழங்கும் வள்ளல் முருகன்.

மலையில் வாழும் வேலன் என்னும் பூசாரி, மாலை கட்டி ஆட்டை அறுத்து வெறியாடி வழிபடுகிறான். குறவர்கள் கள்ளைக் குடித்துச் சந்தனம் அணிந்து தொண்டகப் பறையை முழக்கிக் குரவைக்கூத்து ஆடி வழிபடுகிறார்கள். குறமகளாகிய தேவராட்டி கோழிக் கொடியை நட்டு, நெய்யும் அரைத்த வெள்ளைக் கடுகும் அப்பி, மலரையும், பொரியையும் இரத்தத்தோடு கலந்த அரிசியையும் தூவி, ஆட்டை அறுத்து, கூடைகள் நிறையத் தானியங்களை வைத்து, தூபங்காட்டி, குறிஞ்சிப் பண்ணை உரக்கப்பாடிப்பூசிக்கிறாள். அவர்கள் வழிபாட்டை முருகன் ஏற்று அருள்கிறான். ஒவ்வொரு ஊரிலும் தினையும் மலரும் கலந்து ஆட்டை அறுத்து மக்கள் விழாக் கொண்டாடுகிறார்கள். அங்கே ஊர்காக்கும் தெய்வமாக விளங்குகிறான். பக்தர்கள் துதித்துப் போற்றுகிறார்கள். பெரியோர் ''பெரிய கடவுளே'' என்று ஏத்துகிறார்கள். வேறு பலரும் புகழ் பாடுகிறார்கள். மனத்திலே ஆறுமுகத்தையும் தியானம் செய்கிறார்கள் சில அன்பர்கள். அவர்களுக்கும் அருள் செய்கிறான்.

ஆறு தொழிலும் முத்திச் செல்வமும் இரு பிறப்பும் உடைய அந்தணர் ,ஈர ஆடையோடு கைகளை உச்சிமேல் கூப்பிக்கொண்டு ஆறெழுத்து மந்திரத்தைச் செபித்தும் வேத மந்திரத்தை ஓதியும் வழிபடுகிறார்கள். முனிவர்கள் விரதம் இருந்து முருகனைத் தரிசிக்கிறார்கள். அவர்களுக்கும் அவன் திருவருள் புரிகிறான். அவனை அறம் கருதியும், பொருள் கருதியும், இன்பம் கருதியும், வீடுகருதியும் பல துறைகளிலும் ஈடுபட்ட மக்கள் வணங்குகிறார்கள். பேய் மகள்கூடத் தனக்குப் பசி அடங்க உணவு கிடைத்த மனநிறைவால் அவனைப்பாடி, வாழ்த்தித் துணங்கை என்னும் கூத்தை ஆடுகிறாள்.

தேவ சாதியினரில் அவனை வணங்காதார் யார்? அவனைப்பாடி மலைச் சாரற் சோலையிலே ஆடும் தெய்வ லோகத்துப் பெண்கள், அவனுக்குப் பக்தர்கள். கந்தர்வரும், அவர் மாதரும் தம்முடைய இனிய இசையினால் அவன் திருவுள்ளத்துக்கு உவப்பை உண்டாக்குகிறார்கள். இந்திரனும், திருமாலும், சிவபிரானும் அவனிடம் தம் குறையைத் தீர்த்துக் கொள்ள வருகிறார்கள். முப்பத்து மூன்று தேவர்களும் பதினெண்கணத்தினரும் தமக்குரிய காரியங்களை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு அவனை வழிபடுகிறார்கள்.

மணிமாலையிலே சிறியதும் .பெரியதும், அரியதும், செவ்வியதும், பச்சையானதும், மஞ்சளானதும் ஆகிய பலவகை மணிகளிடையே ஊடுருவிச் சென்று அவற்றை மாலையாகக் கோத்து நிற்கும் தங்கக் கம்பியைப்போலக் குறவரும், பேய்மகளும், அந்தணரும், முனிவரும், தேவரும் மும்மூர்த்திகளும் பாராட்ட அவர்கள் குறைதீர்க்கும் தெய்வமாய் வீரமும், காதலும், எழிலும் குணமும், அன்பும், அருளும், வழங்கும் தெய்வமாய் எல்லாவற்றிற்கும் ஆதாரமாய் விளங்கி நிற்கும் பெரும்பெயர் இயவுளாய் இலங்குபவன் முருகன்.

அவனைப் பேய் மகளைப்போலப் பசி தீர வாழ்த்துவாரும், தேவமகளிரைப் போல் அழகும் இன்பமும் பெற வாழ்த்துவாரும், தேவர்களைப்போலப் பகை நீங்கவும், பதவி பெறவும் வாழ்த்துவாரும், முனிவரைப்போல உபதேசம் பெற வாழ்த்துவாரும், ஞானியரைப்போலப் பெறலரும் பரிசிலாகிய முக்தியைப்பெற வாழ்த்துவாரும் ஆக, வேண்டுவோர் வேண்டியவரை வாழ்த்துவார்கள்.

இவ்வாறு முருகனை வைத்துக் காட்டும் நக்கீரர் தம் காலத்தில் வழங்கி வந்த புராண வரலாறுகள் சிலவற்றை அங்கங்கே குறித்துச் சொல்கிறார். முருகன் அக்கினியால் தாங்கப் பெற்றவன்: 'அறுவர் பயந்த ஆலமர் செல்வன்', சரவணப் பொய்கையில் தவழ்ந்தவன், நான்முகனைத் தண்டித்தவன், சூரனைச் சங்காரம் செய்தவன். மாமரத்தைத் தடிந்தவன்! மலைமகள் மகன், தேவர் படைத் தலைவன்; இந்தச் செய்திகளைத் திருமுருகாற்றுப் படையில் காணலாம்.

முருகனுடைய இயல்புகளை நக்கீரர்வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு வகையாகச் சொல்கிறார். அவன் வீரத்தைப் பலபடியாகப் பாராட்டுவார்; கருணைத் திறத்தைப் புலப்படுத்துவார்; அழகை வருணிப்பார்; ஒளியைப் புகழ்வார்: இன்ப நிலையை எடுத்தோதுவார்; வள்ளன்மையை வாழ்த்துவார்; தலைமையைச் சாதிப்பார்: கூத்தைக் குறிப்பார்; புலமையையும் ,இளமையையும், எல்லையில்லாப் பெருமையையும், அன்புடைமொழியையும், குறிப்பிட்டுச் செல்வார்.

நக்கீரர் காட்டும் முருகனுக்குக் கழலும் தொடியும், குழையும், முடியும் ஆபரணங்கள். கலிங்கமும், துகிலும் கச்சும், ஆடைகள். கடம்பும் முத்தாரமும் மாலைகள். காந்தளும் வெட்சியும் அவனுக்குரிய மலர்கள். வேலும் வில்லும், அங்குசமும், கேடகமும் ஆயுதங்கள். சேவலும் மயிலும் கொடிகள். பிணிமுகம் என்னும் யானையும், மயிலும், ஆட்டுக் கிடாயும் வாகனங்கள். வள்ளியும், தெய்வயானையும் மனைவியர்.

அருச்சனை செய்வதற்கு ஏற்றபடி பல திருநாமங்களை நக்கீரர் கூறியிருக்கிறார். அவற்றுள் ''அரும்பெறல் மரபிற் பெரும் பெயர் முருகன்'' என்பது ஒன்று. அரியனவாக வுள்ள இலக்கணங்களை உடைய பெரிய பெயராகிய முருகன் என்னும் திருநாமத்தை உடையவன் என்பது அதன் பொருள். முருகன் என்பதற்கு முருகை உடையவன் என்பது பொருள். முருகு என்ற சொல்லுக்குப் பல பொருள்கள் உண்டு. அவற்றில் நான்கைச் சிறப்பாக எடுத்து அவற்றை உடையவன் முருகன் என்பதைக் குறிப்பாக உணர்ந்து கொள்ளும்படி ஓரிடத்தில் சொல்லுகிறார் நக்கீரர். ''மணங்கமழ் தெய்வத்து இளநலம் காட்டி'' என்ற அடி, மணமும், தெய்வத் தன்மையாகிய அருளும், இளமையும், அழகும் உடையவன் முருகன் என்பது தோன்றும்படி அமைந்துள்ளது. அதனால் முருகன் வாசனா மலத்தைப் போக்கும் ஞானமணமும், சிறந்த அருளும், என்றும் மாறா இளமையும், மங்காத அழகும் உடையவன் என்று தெரியவரும்.

இனி பரிபாடலில் வரும் முருகனைப் பார்க்கலாம். ஏழு பாடல்கள் அவன் புகழைக் கூறுவன. அவன் பிணிமுகம் என்னும் யானையின்மேல் எழுந்தருளுபவன். ஆறு திருமுடிகளை உடையவன். ஆறு தலையுடனும், பன்னிரண்டு தோள்களுடனும், சூரியனுடைய எழுச்சி போன்ற வண்ண எழிலுடையவன். கார்த்திகை மாதர் அறுவரும் சரவணப் பொய்கையில், தாமரைப் பூவில் அவனுக்குப் பால் கொடுத்து வளர்த்தனர். இந்திரனோடு போரிட்டுப் பிறகு ஆறு திருவுருவமும் ஒன்றாக இணைந்து நின்றவன். முருகனே சேனைத் தலைவன் என்று இந்திரன் வேண்ட அவ்வாறே ஆனான்.

அக்கினித் தேவன் கோழியையும், இந்திரன் மயிலையும். யமன் வெள்ளாட்டு மறியையும் தந்தனர். மற்றைத் தேவர்கள், வில்லும், மானும், வாளும், ஈட்டியும், கோடரியும், மழுவும், கனலியும், மாலையும் மணியும் வழங்கினர். அவற்றைப் பன்னிரண்டு திருக் கரங்களிலும் ஏந்திக் கொண்டான் முருகன்.

வேலாயுதத்தால் சூரபன்மனாகிய மா மரத்தைத் தடிந்து, கிரவுஞ்ச மலையையூடறுத்தான். இவ்வாறு கடுவன் இளஎயினனார் என்னும் புலவர் பாடி, இறுதியில் ''நின்னை யாம் இரந்து வேண்டுவன நுகர் பொருள்களும் அவற்றைப்பெறுதற்குக் காரணமாகிய பொன்னும் ,அவ்விரண்டாலும் நுகரும் நுகர்ச்சியும் அல்ல, எமக்கு வீடுபயக்கும் நின் அருளும், அதனைப் பெற நின்னிடத்தே செய்யும் அன்பும், அவ்விரண்டாலும் வரும் அறமுமாகிய இம் மூன்றையுமே வேண்டுகின்றோம். அருள் புரிவாயாக'' என்று வேண்டுகோள் விடுக்கிறார்.

நல்லந்துவனார் என்னும் புலவரும் பரிபாடலில் முருகனைப் பாடுகிறார். அதில் திருப் பரங்குன்றத்தைப் பற்றிய வருணனை வருகிறது. தேவர்களும், முனிவர்களும் முருகனைத் தரிசிக்கத் திருப்பரங்குன்றத்துக்கு வருகிறார்கள்! மதுரையிலுள்ள மக்களும் கூட்டம் கூட்டமாக வருகிறார்கள். மலர் தூவி, நிவேதனம் செய்து, இசைப் பாட்டைப் பாடி வழிபடுகிறார்கள். முருகனிடம் பலவகையான வேண்டுகோளைச் செய்து கொள்கின்றனர்.

குன்றம் பூதனார் பாடிய பரிபாடலில் முருகன் நீலகண்டப்பெருமானுடைய புதல்வன் என்ற செய்தி வருகிறது. அவன் வள்ளி நாயகியைக் களவுக் காதல் செய்து மணம் புணர்ந்தவன். தேவயானையின் கணவன். தேவயானையின் ஊடலைத் தீர்க்க அவளை முருகன் வணங்குகிறான். கொடிய சூரபன்மனாகிய மாமரத்தைத் தடிந்தவன். நாள் தோறும் ''உன் திருவடிக்கண் தங்கும் அன்பு மாறாமல் இருக்கவேண்டும்'' என்று புலவர் வேண்டுகிறார்.

கேசவனார் என்னும் புலவர் முருகனைப் பாடுகிறார். முருகன் சூரசங்காரன், இசையை விரும்புகிறவன்; அந்தணர்களின் அறத்தை வழிபட்டுக்கொண்டே இருக்கவேண்டும் என்பது அப்புலவரது வேண்டுகோள்.

நல்லழகியார் என்ற புலவரும் முருகனைப் பாடியிருக்கிறார். முருகன் கடம்ப மரத்தின் கீழ் எழுந்தருளியிருக்கிறவன். திருப்பரங்குன்றத்தின் பெருமையை அப்புலவர் விரித்திருக்கிறார். அங்கே கோயில் கொண்ட முருகன் உலகில் அங்கங்கே நடைபெறும் பூசையை ஏற்றுக் கொள்கிறான். மயிலையும், கோழிக் கொடியையும் உடையவன் அவன். பிறவித் துன்பம் நீங்கி இன்பம்பெற வேண்டுமென்று புலவர் வேண்டுகிறார்.

குன்றம்பூதனார், முருகன் தேவலோகத்தில் எழுந்தருளியிருப்பதைப் போலத் திருப் பரங்குன்றத்தில் எழுந்தருளியிருப்பதைச் சொல்கிறார். முருகன் தேவர்கள் அடையும் இன்பத்தை உலக மக்களும் அடையும்படி அருள் புரிவான். முருகன் தேவலோகத்தில் தேவயானையை மணந்தது போல இவ்வுலகத்தில் வள்ளியை மணந்தவன். அறிவெல்லைக் குள் அகப்படாதவன்.

அவன் யானையின்மேல் ஊர்ந்து வருகிறான். பாண்டியமன்னன் தன் அமைச்சரோடும் வந்து அவனை வழிபடுகிறான். அவனுடன் செல்கிறவர்கள் இசைபாடி முருகனை வழிபடுகிறார்கள். திருப்பரங்குன்றத்தில் சித்திரச் சாலை ஒன்று உண்டு. அங்குள்ள ஓவியங்களைக் கண்டு ஆடவரும் மகளிரும் மகிழ்ச்சியடைகிறார்கள். அவனுடைய யானையைப் பூசிக்கின்றனர். மணம்புரிந்த மகளிரும் கன்னிப் பெண்களும் அதைப் பூசிக்கின்றனர். அது உண்ட கவளத்தின் மிச்சத்தை உண்கின்றனர். அதனால் மணங்கொண்ட மகளிர் தம் கணவருடைய அன்பைப் பெறலாமென்றும், கன்னிப் பெண்கள் நல்ல கணவன்மாரை அடையலாமென்றும் நம்பினர்.

முருகனுடைய ஆடை சிவப்பு; அவன் மாலை சிவப்பு, வேற்படையும் பவளத்தைப்

போலச் சிவப்பாக இருக்கிறது. அவன் வடிவம் தீயைப் போலச் சிவப்பும் ஒளியும் கொண்டு விளங்குகிறது. அவன் திருவுருவம் இள ஞாயிற்றைப்போல ஒளிவிடும்.

நல்லச்சுதனார் என்னும் புலவரும் பாடுகிறார். முருகன் யானை வாகனம் உடையவன். திருவடியில் மயிற்பீலியால் ஆன செருப்பை அணிந்திருக்கிறான். கையில் வேலைப் பிடித்திருக்கிறான்; அது சூர்மாவையும், கிரவுஞ்ச கிரியையும் துளைத்தது. அவன் அணிந்தகடம்ப மாலையில் இடையிடையே வன்னிப்பூவும் இருக்கிறது. அவன் விரும்பித் தங்கும் இடம் திருப்பரங்குன்றம்.

செவ்வேள் பன்னிரு தோகளுடையவன்; ஆறு திருமுகம் கொண்டவன்; ''சுற்றத்தோடு நின் அடிக்கண் உறையும் பேறு இன்றுபோல என்றும் எங்களுக்குக் கிடைக்கும்படி திருவருள் புரிவாயாக'' என்ற வேண்டுகோளோடு பாட்டை முடிக்கிறார் புலவர்.

இவ்வாறு பரிபாடலில் புகழப்பெறும் முருகனைப் பற்றிய பல செய்திகளை மற்ற சங்க நூல்களினிடையிலும் காணலாம். கோழிச் சேவலைக் கொண்ட முருகன் காப்பதனால் இந்த உலகம் இன்பமான நாட்களை அடைகின்றது, என்று குறுந்தொகையில் உள்ள கடவுள் வாழ்த்து இயம்புகிறது.

முதலில் விளையும் தானியங்களையும் பிறவற்றையும் நிவேதனமாக அவன் பெறுகிறான். அதனால் கடியுண் கடவுள் என்று பெயர் பெறுகிறான். (கடி-புதுமை). கலித்தொகையிலும் அவனுடைய பெருமை வருகிறது. அசுரர்களை அழிப்பதற்கு அவன் கொண்ட சீற்றத்தைப் புறநானூறு புகழ்கிறது.

இவ்வாறு முருகனுடைய அழகையும், வீரத்தையும், அருளையும், பராக்கிரமத்தையும் பாடிய சங்க காலப் புலவர்கள் பலர். அவர்கள் கூறியவற்றையெல்லாம் விரித்துரைத்தால் மிக மிக விரியும். **

(முள்மேல் இருப்பு)

சிவபிரானை நோக்கித் தவம் புரிந்து, அவன்பால் முக்கோடி வாழ்நாளும் வாட்படையும் பெற்று, அந்தச் செருக்கினால் அல்லும் பகலும் அநவரதமும் அனைத்துயிர்களையும் வருத்தி நலிந்துகொண்டிருந்தான் இராவணன். அவ்விராவணனது பத்துத் தலைகளையும், இருபது தோள்களையும், இராமபிரானாய் வெட்டித் தள்ளி அழித்து ஒழித்த திருமாலின் திருவடிகளில், பொருந்திய உள்ளத்தராய் இருந்து வழிபட்டு மகிழ்பவர் அடியவர்கள்! அங்ஙனம் அத்திருவடிகளிற் பொருந்தாத உள்ளத்தினராய் இருப்பவர், கொடியவர்கள். அங்குஇங்கு எனாதபடி எங்கும் நிறைந்திருப்பவன், இறைவன். இறைவனுக்குரிய குணநலங்களில், எங்கும் நீக்கமற நிறைந்து விளங்குதல் ஆகிய வியாபகத்துவம் என்பதும் ஒன்று. எனவே, அவ்வியாபகத் தன்மை காரணமாக, அடியவர்களின் உள்ளத்தில் மட்டும் அன்றிக் கொடியவர்களின் உள்ளத்திலும்கூட, இறைவன் பொருந்தியிருப்பான். எனினும், அங்கு அவன் முள்ளின்மேல் இருப்பது போலவே, வேண்டா வெறுப்பாய் இருப்பான்.

நாளும் உலகை நலிகின்ற வாள்அரக்கன்
தோளும் முடியும் துணித்தவன்றன்—தாளில்
பொருந்தாதார் உள்ளத்தில், பூமடந்தை கேள்வன்
இருந்தாலும், முள்மேல் இருப்பு.

—ஞானசாரம்.

[நாளும்—நாள்தோறும், இடைவிடாமல். நலிகின்ற—வருத்திக் கொடுமை புரிகின்ற. வாள் அரக்கன்—இராவணன். தோளும் முடியும் துணித்தவன்—இராமபிரான், திருமால். பூமடந்தை—திருமகள், இலக்குமி. பொருந்தாதார்—சேராதவர், பொருந்துதல் அற்ற பாவிகள்.]

—ஆசிரியர்.

(விண்ணாட்டிற் சால விரும்பும்)

திருமால், தனது குற்றமற்ற கருணையினால் எல்லா உலகங்களையும் உயிர்களையும் காத்தருள்பவன். நறுமணம் கமழும் தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளுக்குக் கொழுநனாகத் திகழ்பவன் அவன். அத்தகைய திருமால், தன்னைத் தவிர்த்து வேறு எதனையும் எண்ணாத உண்மையடியவர்களின் உள்ளத்தில் தங்கி உறைவதை, திருநாடு என்னும் வைகுண்டவுலகில் வசிப்பதையும்விட, மிக மிகச் சிறந்ததாகக் கொண்டு மகிழ்வான்.

ஆசில் அருளால் அனைத்துலகும் காத்தளிக்கும்
வாச மலராள் மணவாளன்,—தேசுபொலி
விண்ணாட்டிற் சால விரும்புமே, வேறொன்றை
எண்ணாதார் நெஞ்சத்து இருப்பு.

—ஞானசாரம்.

[ஆசு இல் அருள்—குற்றம் இல்லாத அருள். அருளுக்குக் குற்றமாவது, ஏதேனும் ஒரு காரணம் பற்றி நிகழ்தல். எனவே குற்றம் இல்லாத அருளாவது, எத்தகைய காரணமும் இன்றி இயல்பாக நிகழும் அருள் (நிர்ஹேதுக கிருபை). மலராள்-திருமகள். தேசுபொலி—ஒளி விளங்குகின்ற. விண்ணாட்டில்-திருநாடு ஆகிய சிறந்த வைகுண்டத்தைவிட. இருப்பு—இருத்தல்.]

—ஆசிரியர்.

சைவத்தின் உயிர் நாடிகள்

'மும்மொழிக் கொண்டல்'

பேராசிரியர் திரு. பெ. திருஞானசம்பந்தன் அவர்கள், M.A., L.T.

சைவ சமயம்:

பொதுவாகச் சமயம் என்பது நம்மை யார் என உணர வைக்கிறது. நமக்குள்ள துன்பங்கள் யாவை என்பதைப் புலப்படுத்துகிறது; அத் துன்பங்கள் ஏன் நேர்கின்றன என்பதைச் சுட்டுகிறது; அவற்றைக் களைவதற்கு வழிகள் யாவை என்றும் கூறுகிறது: அவ்வழியிலே இட்டுச் செல்லும் குருவை அடைவிக்கிறது; அவ்வழியிலே நம்மைச் செலுத்துகிறது; முடிவில் முடிவிலா இன்பத்தில் ஆழ்த்துகிறது. இத்தகைய ஒரு சமயம் சைவ சமயம். வேதாகமங்கள் பொதுவாகவும் சிறப்பாகவும் கூறும் எல்லாப் பொருள்களையும் தன்னகத்தே உடையதே சைவ சமயமாகும். சமயக் கருத்துக்களை நேர்முகமாகக் கூறும் நூல்கள் சமய சாத்திரங்கள். அவற்றை அநுபவ வாயிலாகத் தெளிவிக்கும் நூல்கள் தோத்திரங்கள்.

சித்தாந்த சாத்திரங்கள்:

உலகில் எல்லோரும் துன்பத்தைத் தவிர்க்கவும் இன்பத்தைப் பெறவும் முயல்கின்றனர். ஆனால் உலகியல் இன்பத்தைக் காட்டிலும் மேலான பேரின்பம் ஒன்று உண்டு என்று சாத்திரம் கூறும்; அநுபூதிமான்களும் கூறுவர். அந்த மெய்யான இன்பவாழ்வு பெறுதற்காக நம்முடைய இயல்பும், அதனைப் பெறுவிக்கின்ற பெருமான் இயல்பும், அதனை இதுவரை நாம் பெறாமலிருப்பதற்குத் தடையாயிருக்கும் பொருளின் இயல்பும், அத்தடையை நீக்கி அப்பேற்றைப் பெறுவிக்கும் சாதனத்தின் இயல்பும், அச்சாதனத்தைப் பெறும் வழியும், சாதிக்கும் முறையும், சாதித்ததனால் வரும் இன்பத்தின் இயல்பும் யாவை எனக் கூறுவது நமது சித்தாந்த சாத்திரம். இதை உணர்வதற்கு இந்த மானிட உடல் அருளப்பெற்றது. இது எந்த நேரத்தில் அழியும் என்பது நம்மால் அறிய இயலாத ஒன்று. ஆதலின் பதி-பசு-பாசம் என்னும் முப்பொருள் உண்மையை அறிந்து, சிவஞானபோதக் கேள்வி, சிந்தனை முதலியவை செய்யத்தக்கன.

சுருங்கக் கூறுமிடத்து, இவற்றுள் உலகம் மாறிக் கொண்டே இருக்கும். உலகம் உளதாகிய அறிவற்ற பொருள். உயிர் அறியாமை கலந்த அறிவு உளதாகிய பொருள் . கடவுள் அறியாமையே இல்லாத பேரறிவு உளதாகிய பொருள். எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் கடவுளின் வேறாக, உலகும் உயிரும் தனித்து இயங்கும் ஆற்றல் பெற்றவை அல்ல. உலகைக் கொண்டே கடவுள் உயிருக்கு நலனைச்செய்து பக்குவப்படுத்தித் தன் எண் குணங்களையும் பதியவைக்கிறான். அந்த நிலையே முத்தி நிலை அல்லது இன்ப அநுபவம் என்றுசொல்லப்படுகிறது.

சிவன் எந்நாட்டவர்க்கும் இறைவன்:

சைவ சமயத்தில் பதிப்பொருளுக்குக் கடவுள் என்ற பெயர் உண்டு. எல்லாப் பொருள்களையும் தன்னுள் அடக்கி யாவற்றையும் கடந்திருப்பது கடவுளுடைய ஒரு தன்மை. புறத்தே விரிந்திருப்பதோடன்றி எல்லாப் பொருள்களின் உள்ளேயும் உறைந்திருத்தலால் கடந்திருத்தல் - உள்ளிருத்தல் என்ற இரண்டும் கடவுளின் இயல்புகள். சைவ சமயத்தில் முழுமுதற்கடவுள் அழித்தற்றொழிலைச் செய்யும் ஒருவனே என்று சிவஞானபோதம் கூறும். அந்த ஒருவன் சிவபெருமானே என்று தோத்திர நூல்கள் பரக்கக்கூறும். அந்தச் சிவன் தென்னாட்டவருக்கு மட்டுமின்றி, எந்நாட்டவர்க்கும் இறைவன் என்பதை அநுபூதிமான்கள் கூறியிருப்பதை அறிவோம்.

பற்றுவிடல் வேண்டும்:

எல்லா உயிர்களும் சிவசம்பந்தம் உடையவையே. ஆயினும் இதை உணராததற்குக் காரணம் அவற்றுடன் இயல்பாகப் பற்றி நிற்கும் பாசம். இப்பாசம் விடுபடுதற்குக் கருவியாகவே உடம்பும் நுகரத்தக்க பொருளும் படைக்கப்பட்டிருக்கின்றன. இறைவன் உள்நின்று உணர்த்த உயிர் உணர்கிறது; தொழில் புரிகிறது; ஆயினும் தான் உணர்வதாக, தொழில் புரிவதாக இயங்குகிறது. உயிர் எந்தப் பொருளைச் சார்ந்து நிற்கிறதோ அந்தப் பொருளின் வண்ணமாகக் காட்சியளிக்கிறது. யான்-எனது என்ற செருக்கு அற வேண்டும். இது அறுதற்கு இறைவன் திருவருள் துணைவேண்டும். திருவருளைப் பெறுதற்கு அவனைப்பற்ற வேண்டும். இதனை அழகாகக் குறளாசிரியர் கூறுகின்றார்.

''பற்றுக பற்றற்றான் பற்றினை, அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு''

என்று . இதற்கு இலக்காக விளங்கியவர் விறன் மிண்டநாயனார். சேக்கிழார் கூறுகின்றார்:

'செப்பற் கரிய பெருஞ்சீர்த்திச்
சிவனார் செய்ய கழல்பற்றி
எப்பற் றினையும் அறவெறிந்தார்
எல்லை தெரிய ஒண்ணாதார்
மெய்ப்பத் தர்கள்பால் பரிவுடையார்
எம்பி ரானார் விறன்மிண்டர்'

அன்பும் அறனும்:

உயிருக்கு இயல்பான பண்பு அன்பு. அதை நாம் குழந்தையிடத்துக் காணலாம். பணக்கார வீட்டுக் குழந்தை ஏழைவீட்டுக் குழந்தையோடு அன்பு பாராட்டுகிறது. ஆனால் ஆணவம் மிக்க 'பெரியோர்கள்' அவ்வன்புக்குத் தளை பூட்டுகின்றார்கள். அப்பெரியோர்களோடு பழகப்பழக அன்பு சுருங்குகிறது. அவ்வன்பு சுருங்காமல் பெருகுதற்கு நூலோர் அறநெறியைப் போதித்திருக்கிறார்கள். ஆகவேதான்

''அறத்திற்கே அன்பு சார்பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை''

என்று எந்தநிலையிலும் அன்பின் இன்றியமையாமையைக் கூறி, அன்பும் அறமும் பண்பும் பயனுமெனப் பின்னிக் கிடப்பதை வள்ளுவர் வலியுறுத்தியுள்ளார்;

''சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு''

என்று அறத்தின் திறத்தை விதந்தோதி யிருக்கின்றார். 'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்' எனச் சங்கமும், 'அறநெறி பிழைத்தார்க்கு அறம் கூற்றாதலை'ச் சிலம்பும், 'அருள் தரும் திறத்து அறனன்றி வலியதுண்டாமோ' எனக் கம்பரும், 'தர்மத்தை நாம் காப்பாற்றினால் தர்மம் தலைகாக்கும்' என்று வியாசரும் 'யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை, யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை, யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே' என்று திருமூலரும், 'அறம்வளர்ந்திடுக தீமைகள் மாய்க' என்று பாரதியும் பலரும் அறத்தின் திறத்தை வலியுறுத்தியுள்ளார்கள். ஆகவே, சைவத்தின் உயிர்நாடிகளாக அன்பும் அறனும் இடம் பெற்றிருக்கின்றன.

இவ்வன்பு-பெற்றோர், உடன்பிறந்தோர், மனைவி, மக்கள், சுற்றம், அயலார், ஊரார், நாட்டார் என்று விரிந்து, மேலும் விலங்கு, பறவை, கொடி என்று மற்ற உயிர்களிடத்தும் படர்ந்து, உயிரினங்கள் அனைத்திலும் இறைமையை உணரத்தலைப்பட்ட காலத்து மெய்யுணர்வு தோன்றும். அம் மெய்யுணர்வு மேலிடவும் பாசபந்தம் நீங்க, மக்கள் பேரா இன்ப நிலை எய்தப் பெறுவர்.

மெய்யன்பு:

'பெறவே வேண்டும் மெய்யன்பு' என்கிறது திருவாசகம். மெய்ப்பொருளாகிற பரம் பொருளிடத்தே அன்பு செலுத்துவதே மெய்யன்பு. இம்மெய்யன்பே மெய்யின்பத்திற்கு வழிவகுக்கின்றது. இவ்வின்பத்தைப் 'பேரா, ஒழியா, பிரிவில்லா, மறவா, நினையா, அளவிலா, மாளா, இன்பமா கடல், என்று வருணிக்கின்றார் மணிவாசகப்பெருமான். எதனாலும் தடைபடாத முடிவுறாத பேரன்புதான் மெய்யன்பு. மெய்யன்பின் உறைப்பை விளக்கக் காளிதாசனின் குமாரசம்பவத்தில் ஒரு பகுதியைக் காண்போம்:

இமவான் மகள், சிவபெருமானே தனது கணவனாக வேண்டும் எனக் கடுந்தவம் புரிகின்றாள்; யோக நிட்டையில் இருக்கும் சிவபெருமானுக்கே பணிபுரிகின்றாள். இறைவர் ஓர் பிரம்மச்சாரி கோலந்தாங்கிப் பார்வதியின் மெய்யன்பைச் சோதிக்க விரும்புகிறார். கேட்கின்றார் பார்வதியை-''இடுகாட்டில் திரிகின்றவரையா அடைய விரும்புகிறாய்? அவருக்குக் குலம் கோத்திரம் உண்டா? சொத்து சுதந்திரம் உண்டா? பார்ப்பதற்கு அழகாகவாவது இருக்கிறாரா? பயங்கரமான மூன்றாவது கண்ணை உடையவர். அணிவதற்குப் பட்டு உண்டா? தோலாடைதான். அணிகலன்கள் உண்டா? பாம்புகள் தான் அணிகள். செல்வதற்கு நல்ல ஊர்தி உண்டா? ஒரு கிழமாடுதான் உண்டு. சாம்பரை வேறு அள்ளிப் பூசிக் கொள்கிறார். இவரையா விரும்புகிறாய்?''

அப்பர்பெருமானைப்போல் ''சிவபெருமான் திருவடிக்கே பதித்த நெஞ்சம்'' உடையவள் பார்வதி. ஆகவே, மெய்யன்பின் முதிர்ச்சியால் சிவசிந்தனை புரியும் அவரை நோக்கி, உதடுகள் துடிக்க, கண்கள் சிவக்க, புருவம் நெரியச் சொற்களைக் கூறுகின்றாள்:

''அரனைப்பற்றிய உண்மையை நீர் அறியமாட்டீர். ஆகவேதான் இப்படிப் பிதற்றுகிறீர். உலகியலை ஒட்டி அவரை மதிப்பிடுதல் பொருந்தாது. மகாத்மாக்களின் செயலின் காரணத்தை நமது உள்ளத்தால் ஆராய்ந்து முடிவு கட்ட இயலாது'' என்று கூறினாள். இறைவனை மனவாசகங் கடந்தவராக உபநிடதம் கூறுகின்றதன்றோ? சிவதத்துவத்தைப் பார்வதி தேவி விளக்குகின்றார். மங்கலப் பொருள்கள் தீமையைப் போக்குதற்கோ நன்மையைப் பெறுதற்கோ வேண்டியவை. வேண்டுதல் வேண்டாமை இலானாயும், உலகிற்கே புகலிடமாயும் உள்ள ஒருவனுக்கு மங்கல ப் பொருள்களால் ஆகவேண்டியது என்ன? தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனான இறைவன் உலகின்கண் உள்ள செல்வமனைத்திற்கும் முதல் அன்றோ? இடுகாட்டில் வசித்தாலும் மூவுலகிற்கிற்கும் முதல்வன் அவனே. அச்சந் தரும் தோற்றமுடையனாயினும் சிவன், சொக்கன், அழகன் என்றுதானே அழைக்கப்படுகின்றான். ஆதலின் சிவதத்துவத்தை உணர்ந்தார் யார்? என்று வினவுகிறாள்: பிரம்மச்சாரி கூறிய கூற்றுக்கள் அனைத்தையும் அறித்த பின்னர்,''இனி விவாதம் வேண்டா. என்னுடைய உள்ளம் சிவன்பால் உள்ள காதலால் நிரம்பியிருக்கிறது, உம்முடைய புன்மொழிக்கு எனதுள்ளத்தில் இடமில்லை'' என்று கூறி, மேலும் பேச முற்

படும் பிரம்மச்சாரியின் பேச்சைக் கேட்கச் சகியாதவளாய், ''சிவநிந்தை செய்கின்றவருக்கு மட்டும் பாபம் அன்று; அதைக் கேட்பவருக்கும் பாபம்'' என்ற கருத்தைக்கூறி முடிக்கின்றாள். இத்தகைய முறுகிய மெய்யன்புடையராக இருந்ததால்தான் பெருமானுடைய மெய்யில் பாதியைப் பெற்றுவிட்டார். இதனின்றும் நாம் அறிவது, சைவத்தின் உயிர்நாடி மெய்யன்பு என்பதும், மெய்யன்புடையாருக்குச் சிவப்பேறு சித்திக்கும் என்பதுமாகும்.

மற்றோர் உயிர்நாடி :

உயிரின் இயல்பான அன்பைக் கண்டோம். சித்தாந்த சைவத்தின் மற்றோர் உயிர்நாடியான உயிருக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பைக் காண்போம். உடல் அழியாமல் இருப்பதற்கு எப்படி உடல்வேறு, தான்வேறு என்று இராமல், உயிர் அதனோடு கலந்து அவ்வுடலேயாக நிற்கின்றதோ? அப்படி உயிர் நிலைத்தற்காக இறைவன் உயிருடன் கலந்து உயிரேயாக நிற்பது ஒரு நிலை. இதனால் உயிர், முதல்வனாகவும் நில்லாது, அவனின்றித் தனித்தும் நில்லாது என்பது பெறப்பட்டது.

கண் எப்படி சூரியனின் ஒளியின்றித் தானே ஒரு பொருளைக் காண இயலா விடினும் கண்வேறு-சூரியன்வேறு என்று எப்படி நாம் உணருகிறோமோ, அப்படி உயிர்கள் முதல்வன் அறிவித்தாலன்றித் தாமே அறிய இயலாவிடினும், முதல்வன் வேறு உயிர்வேறு என்பதை உணரவேண்டும். இது ஒருநிலை.

ஒரு பொருளைக் காணும்போது எப்படிக் கண்ணொளியும் உயிரறிவும் உடன்நின்று பொருளிடம் செல்லுகின்றனவோ, அப்படி இறைவன் உயிர்க்குயிராய் நின்று, உயிர்வேறு-தான்வேறு என்ற வேறுபாடின்றி, இன்ப துன்பங்களுக்குக் காரணமான விடயங்களில் செல்லுகின்ற நிலை மற்றொன்று. இது இறைவன் எங்கும் நிறைந்திருத்தலாம், தான் செல்லாமல் நின்றநிலையிலேயே ஆங்காங்குள்ள உயிர்களோடு பிரிப்பின்றி நிற்றலைக் குறிக்கும்.

இறைவன் உயிரோடு ஒன்றாய் நிற்றல்-வேறாய்நிற்றல்-உடனாய் நிற்றல் என்ற மூன்று நிலைகளையும் மெய்கண்டார் ஓர் எடுத்துக்காட்டின் மூலம் விளக்கியிருத்தல் போற்றி மகிழத்தக்கது. அதாவது, அரக்கை உருக்கி, உருக்கப்பட்ட அவ்வரக்குடன் கற்பொடியைச் சேர்த்தால் அக்கற்பொடியானது அரக்கோடு ஒன்றி நிற்கும். அதுபோல இறைவனும் உயிரோடு ஒன்றி நிற்பான். உருக்கப்பட்ட அரக்கினின்றும் கற்பொடியைப் பிரிக்க முடியாவிட்டாலும், கற்பொடி தனித்துக் காணப்படுகின்றது. அதுபோல் இறைவன் உயிரினின்றும் வேறாகக் காணப்படுகின்றான். அரக்கு முழுவதும் கற்பொடி காணப்படுதலால் அரக்கோடு கற்பொடி உடனாய் நிற்கிறது. அதுபோல இறைவனும் உயிரோடு உடனாய் நிற்கின்றான்.

இறைபணி தேவை :

அநாதியே உயிரோடு பற்றி நிற்கும் பாசத்தை விடுத்தலே துன்பத்தைக் களைவதற்கு வழி. அதுவே பாசநீக்கம் என்று கூறப்படும். பதியைச் சார இறைபணி நிற்றல் வேண்டும். அதுவே இன்பத்தைப் பயப்பது. இதுவே சிவப்பேற்றில் கொண்டு உய்விக்கும்; பாசத்தோடு சார்ந்த வழிச் சீவன் என்றும், பதியோடு சார்ந்தவழிச் சிவன் என்றும் கூறப்படும். உமியோடு ஒட்டிய நிலையில் நெல் என்றும், உமி நீங்கப்பெற, அரிசி என்றும் ஒரே பொருள் கூறப்பெறுதல்போல, சீவனும் சிவனும் சித்துப்பொருளாகும் என்னும் கருத்தை ஸ்கந்தோபநிஷத் கூறும்.

சிவனைச் சார்தல் என்பது சிவனிடத்து அன்பு செலுத்துவது ஆகும். இறைவனிடத்துச் செலுத்தப்படும் அன்பிற்குப் பக்தி என்பது பெயர். இறைவன் அனைத்திடத்தும் உறைவதால் உயிர்க்கூட்டம் அனைத்திடமும் செலுத்துகின்ற அன்பும் இறைபணி இகும். ஆதலால் தான் பசுக்களை மேய்ப்போன் இறந்தமையால் வருந்திய பசுக்களின் துயரைக் காணவொட்டாமல் சிவயோகியார் மூலனுடைய உடலிலே புகுந்து தோன்றித் திருமூலரானார்.

சிவமே இன்பம். இறைவனிடத்திலும் தொண்டரிடத்திலும் காட்டிய பக்தியினாலே சிவப்பேறு சித்திக்கப் பெறுவதைத் திருத்தொண்டர் புராணத்தினின்றும் காண்கிறோம். இச் சிவமே இன்பம் என்பதைச் ''சச்சிதானந்தம் பிரம்மம்' என்ற உபநிடதக் குறிப்பாலும், **'சச்சிதானந்த வெள்ளம்'** என்ற குருஞானசம்பந்தர் அருள்வாக்காலும், 'பந்தமறுக்கும் ஆனந்த மாக்கடலே' என்ற மணிவாசகப்பெருமான் திருவாக்காலும், 'கனியினும் கட்டிபட்ட கரும்பினும் பனிமலர்க் குழற்பாவை நல்லாரினும் தனிமுடி கவித்தாளும் அரசினும் இனியன்' என்ற அப்பர் கூற்றாலும் அறியலாம்.

இத்தகைய இன்பம் பெறுதற்கு இன்றியமையாதது இறைவன் அருள் என்னும் கருத்தை, மணிவாசகப்பெருமான் 'கொம்பரில்லாக் கொடிபோல் அலமந்தனன் கோமளமே வெம்புகின்றேனை விடுதி கண்டாய்' என்ற வரிகளில் உணர்த்துகிறார். பண்டிதமணி அவர்கள் தமது உரையில் குறிப்பிடுகின்றார்: 'ஒருகொடி தோன்றுதற்கு ஆதாரமாகவும் வெளிப்பட்டு வளர்வதற்கு இடமாகவும் உள்ளவை முறையே நிலமும் வெளியுமாகும். அம்முறையில் நாம் பிறத்தற்கும் உடலோடு கூடிப் போக்குவரத்துச் செய்தற்கும் இறைவன் ஆதாரமாகவும் இடனாகவும் இருத்தலின், 'நிலமே அம்பரமே' எனவும், அக்கொடி பற்றுக்கோடின்றிச் சுழலுதற்குக் காற்றும் வெம்புதற்குத் தீயும் காரணமாதல் போல எஞ்சிய வினையால் திருவருட்சார்பு பெறாமல் தாம் சுழலுதற்கும் வாடுதற்கும், அவ்வாட்டம் நீங்கப் பெற்றுத் திருவடி நிழலில் குளிர்ந்த இன்பம் பெறுதற்கும், காற்று தீ நீர் என்னும் பூதங்களின் வடிவமாக இறைவன் விளங்குதலின் 'காலொடு அனல் அப்பானவனே' எனவும் கூறியருளினர். மல வெப்பத்தால் வெம்பிக்கிடக்கும் அடியேனைக் குளிர்ந்த திருவருள்வெள்ளத்தில் மூழ்குவித்து இன்புறுத்துவதே நின்

இயல்பாக இருக்க, அங்ஙனம் செய்யாமல், கை விடுதல் தகுமா'' என்று மாணிக்கவாசகர் கேட்கிறார்.

திருவருட்சார்பு :

சைவ சமயத்தில் திருவருட் சார்பு என்பது மற்றோர் உயிர்நாடி. இதைக் காமிகாகமம் கூறும்: ''தன்னுடைய சாமர்த்தியத்தினால் முனைப்பினால் மக்கள் முத்தியடைய இயலாது. தீயவற்றைக் களைகின்ற ஆற்றல்பெற்ற சிவனருளாலன்றி இயலாது'' என்று ஆகமம் கூறுகின்றது. தனதென்ற எண்ணம் இன்றி இறைவன்பால் உள்ளத்தைச் சமர்ப்பித்தலே சாலுமென ஆதிசங்கரர் கூறுகிறார். இறைவன் கையிலே பொன்மயமான மேருவே உளது. குபேரனோ நண்பன். இல்லத்தில் காமதேனு சிந்தாமணி போன்றவை உள. தலையிலே சந்திரன். பாதமலரில் அனைத்து மங்களமும் இருக்கிறது. இறைவனுக்கு அளிப்பதற்கென என்னிடம் யாதும் இல்லை. இறைவனுக்குத் தேவையுமில்லை. ஆனால் ஒன்றுண்டு. என் மனம் அவருக்கு உரித்தாகும்'' என்கின்றார் சங்கரர்.

நம் மனத்தில் இறைவன் திருக்கோலத்தை நட்டம் பயிலும் கூத்தனாகக் காண்பது பொருத்தமுடைத்து. அவன் திருக்கூத்தின் பொருளை 'உண்மை விளக்க' மூலமாகக் காண்போம்.

''மாயைதனை உதறி வல்வினையைச் சுட்டுமலம்
சாய அமுக்கிஅருள் தானெடுத்து—நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானழுத்தல்
தானெந்தை யார்பரதம் தான்''

சைவத்தின் உயிர்நாடிகளைத் தன்னகத்து அடக்கியுள்ள பேராசிரியர் சுந்தரம்பிள்ளையின் பாடலுடன் என் சிற்றுரையை முடிக்கின்றேன்.

ஆழி புடைசூழ் உலகம் யாவும் நலமேவ
அறத்துறை புகுந்துஉயிர்கள் அன்புவெள்ளம் மூழ்கப்
பாழில் அலைவேனுடைய பந்தனைகள் சிந்தப்
பரிந்து அருள் சுரந்த உமை நிரந்தரமும் வாழ்க!

கோதில் அடியார் குணம்

அடியார்கள், இறைவன் திருவருளையே நம்பியும் விரும்பியும் எதிர்பார்த்திருப்பர். அதனால் அவர்கள் ஒருவகையில் சாதகப் பறவையைப் போன்றவர்கள் ஆவர். சாதகப் பறவைகள், மழைநீர்த் துளிகளையே உணவாகக் கொண்டு, வானத்தில் உள்ள மேகத்தையே அண்ணாந்து நோக்கி எதிர்பார்த்திருக்கும். அதுபோலவே பக்தர்களும் ''களைவாய் துன்பம், களையாது ஒழிவாய், களைகண் மற்றிலேன்'' என்றும்; ''உனக்குப் பணிசெய்திருக்கும் தவம் உடையேன், இனிப்போய் ஒருவன் தனக்குப் பணிந்து கடைத்தலை நிற்கை நின்சாயை அழிவு கண்டாய்'' என்றும், இறைவனின் திருவருளையே எதிர்நோக்கியிருப்பர். அவர்களுக்கு இறைவனைப் பற்றிய நினைவு மறந்து பிரிந்து கிடத்தலே நரகத் துன்பமாகவும், இறைவனைப் பற்றியே நினைந்து தியானித்துக் கூடியிருத்தலே சுவர்க்க இன்பமாகவும் தோன்றும். இதுவே அடியார்களின் கோதிலாக் குணமாகும்.

நரகும் சுவர்க்கமும் நாண்மலராள் கோனைப்
பிரிவும் பிரியா மையுமாய்த்—துரிசற்றுச்
சாதகம்போல் நாதன் தனதருளே பார்த்திருத்தல்,
கோதில் அடியார் குணம்.

—ஞானசாரம்

[நாண்மலராள்—அன்றலர்ந்த செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள். கோன்—தலைவன், திருமால். சாதகம்-மழைத்துளிகளை உணவாகக் கொண்டு, மேகத்தை நோக்கியிருக்கும் ஒருவகைப் பறவை. ''தற்பாடிய தளியுணவிற் புள் தேம்பப் புயல் மாறி'' எனவரும் பட்டினப்'பாலை'வரிகளில், சாதகப் பறவை பற்றிய குறிப்பு வந்திருத்தல் காணலாம். துரிசு-குற்றம்.]

—ஆசிரியர்.

முருகன் பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தங்கள்

திரு. மு. அருணாசலம்

முன்னுரை :

பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தம் என்பது தெய்வத்தைக் குழந்தையாகப் பாவித்து, அக் குழந்தையைக் கொஞ்சும் முகமாகப் பத்துப் பருவங்களைக் கற்பித்து, பொதுவாகப் பரு வத்துக்குப் பத்துப் பாடல்களாக, நூறு நீண்ட ஆசிரிய விருத்தப் பாடல்களால் பாடப் பெறுவது. அரசர் மீதும் பெருந்தலைவர்கள் மீதும் இது பாடப் பெற்றது. பத்து என்ற பாடல் விகிதம், ஐந்து மூன்று என்றும் குறைவது உண்டு. பரமசிவம் பரம் பொருளானதால் அவரைப் பிள்ளையாகப் பாவித்துப் பாடும் மரபு இல்லை. முருகன், அம்பிகை மீது பிள் ளைத்தமிழ்கள் மிகவும் அதிகம். திருமால் விநாயகர்மீது சிலவே உள்ளன. பின் தலை வர், அடியவர், ஆசாரியர் மீது பல உள்ளன.

பத்துப் பருவங்களும் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை (வாரானை), அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்பன ஆண்பாற் பிள்ளைத்தமிழுக்குரியன. காப்புப் பருவத்தில் யாரைத் துதிக்கவேண்டும், பருவந் தோறும் வயது என்ன, பெண்பாலுக்குரிய பரு வங்கள் யாவை என்றெல்லாம் பலவகை விதி கள் செய்யப்பெற்றுள்ளன.

முருகனுக்குப் பிள்ளைத்தமிழ் பாடுவதில் பல பொருத்தங்கள் உள்ளன. முருகன் சிவ பிரானுக்கு இளைய பிள்ளை; இளைய பிள் ளையார் என்று நூல்கள் குறிப்பிடும். அடுத்து முருகன் தமிழுக்குத் தெய்வம். ஐந்திணைப் பாகுபாட்டில் முருகன் குறிஞ்சிக்குரியவன் என் பது தமிழ்நூல் மரபு. மூன்றாவதாக முரு கனைக் குழந்தையாக வழிபடுகிறோம். பால கிருஷ்ணனும் பாலசுப்பிரமணியனும் குழந்தை யாகக் கொண்டு போற்றுகிறோம். பிற தெய் வங்களில் யாரையும் இவ்வாறு போற்றுவ தில்லை. திருமால் பரமாக உள்ள பிள்ளைத் தமிழ்கள் இரண்டு. அழகர் பிள்ளைத்தமிழ், திருவைகுந்தநாதன் பிள்ளைத்தமிழ். பால கிருஷ்ணனுக்குப் பிள்ளைத்தமிழ் தனியே இல்லை. ஆனால் முருகன் மீது எண்ணற்ற பிள்ளைத்தமிழ் நூல்கள் தோன்றி இருக்கின் றன. இருபது நூல்களைப் பற்றிப் பின்னே சில குறிப்புக்கள் தருகின்றோம். இதனால் முருகனிடத்துள்ள ஈடுபாடும், முருகன் தமிழ்த் தெய்வம் என்று புலவர் மனத்தில் கருத்தூன்றி இருத்தலும் நன்கு புலப்படுகின்றன.

ஆறுபடைவீடுகள் :

முருகனுக்குரிய ஆறுபடை வீடுகளுக்கும் பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தங்கள் சிறப்பாய்த் தோன்றியுள்ளன. நக்கீரர் திருமுருகாற்றுப் படையின்படி முதல் படைவீடு திருப் பரங்குன்றம். இதற்குப் பழமையான பிர பந்தம் இல்லாத குறையை, மு.ரா. அருணாசல கவிராயர் இக்காலத்தில் செய்த திருப்பரங்கிரி முருகன் பிள்ளைத்தமிழ் நீக்குகிறது. இது புலமையும் பக்தியும் நிறைந்த அழகிய நூல். இரண்டாவது திருச்சீரலைவாய் ஆகிய திருச் செந்தூர். பகழிக்கூத்தர் இத்தலத்து முருகன் மீது பிள்ளைத்தமிழ் 15-ஆம் நூற்றாண்டில் பாடினார். முருகன் பிள்ளைத் தமிழ்களில் இதுவே காலத்தால் முந்தியது. முருக பக்தர் அனைவர் உள்ளத்திலும் இது பக்தியைப் பெருக் கெடுத்தோடச் செய்து, மகிழ்ச்சியைத் தேக்கு கின்ற சிறந்த நூல். இதுவன்றி இக்காலத்தில் தண்டபாணி சுவாமிகள் இத்தலத்துக்குப் புதி தாக மற்றொரு பிள்ளைத்தமிழ் பாடியிருக்கி றார். 100 பாடல். தூய கடவுளரையெல் லாம் காப்புப் பருவத்தில் பின்வருமாறு துதிக் கின்றார்.

> நாயும் நரியா திய பிறவும்
> நச்சி அருந்தித் தரும் ஊனும்
> நாற்ற முடையால் அலர்பருக
> நாளும் சுரக்கும் நவைக்கள்ளும்
> தோயும் கொடும் பூசையில் விருப்பும்
> துகள் ஒன் றளவா யினும்பொருந்தாத்
> தூய கடவுள் இனம் முழுதும்
> துதித்தே நாளும் தொழுதிடுவோம்

சிறு தெய்வ வழிபாட்டை அவர் வன்மையாகக் கண்டிப்பது இங்கு நன்கு தெரிகிறது.

நான்காவது திருவேரகம். இது சுவாமி மலை. இதற்குப் பண்டைய பிள்ளைத்தமிழ் இல்லை. தந்தைக்குப் பிரணவப் பொருள் உபதேசித்த தலமாதலால் சுவாமிமலை எனப் பெயர் பெற்றது. சமீப காலத்தில் இதற்கு ஒரு பிள்ளைத் தமிழ் செய்யப்பெற்றுள்ளது.

ஐந்தாவது பழமுதிர்சோலை. இதை இன்றுள்ள அழகர்கோயில் என்பது மரபு. இதற்குப் பழைய பிரபந்தம் இல்லையாயினும் இக்காலத்தில் காஞ்சி குப்புசாமி என்பவர் ஒரு புதியபிள்ளைத்தமிழ் பாடி 1971-ல் அச்சிட் டார். அதனுள் பொதுவாய்த் திருமால் திரு

மகளுக்குக் காப்புப் பருவத்தில் வணக்கம் சொல்லுமிடத்து இவர் தலத்து அழகராகிய சுந்தரராஜப் பெருமாளுக்கும், தாயாராகிய கல்யாண சுந்தர வல்லிக்கும் வணக்கம் சொல்கிறார். அதனோடு சிலம்பாற்றுக்கும் தெய்வத் தமிழுக்கும் இவர் வணக்கம் சொல்வது சிறப்புடையது.

ஆறாவது குன்றுதோறாடல். இது தனியாகவே விரிவாகச் சொல்லத் தக்கது. அத்தனைக் குன்றுகளுக்கும் அங்கு உறைகின்ற முருகனுக்கும் பிள்ளைத் தமிழ்கள் பாடப்பெற்றிருப்பதால் குன்றுதோறாடல் எனப் பெயர் பெற்றது.

மேற்குறித்தவை யன்றி முருகன் எழுந்தருளியுள்ள பிரபலமான குன்றுகள் பின்வருவன; கழுகுமலை, குன்றக்குடி, சிவமலை, செங்கோடு, தணிகை, திருமலை, மயிலம்.

கழுகுமலைக்குப் பாடியவர் எட்டயபுரம் காளிச்சாமி. 102 பாடல். காலம் 19-ஆம் நூற்றாண்டு. சிவமலை முருகன் பிள்ளைத் தமிழ் பாடியவர் பெயர் தெரியவில்லை. அபூர்த்தியான ஏட்டிலிருந்து தெய்வசிகாமணிக் கவுண்டர் 10 பாடல்களை மட்டும் வெளியிட்டார். திருச்செங்கோடு வேலவன் பிள்ளைத் தமிழும் அவரே வெளியிட்டார். இது 108 பாடல். காப்புப் பருவம் சற்று விரிவானது. அழகிய பாடல்கள். குன்றக்குடி மயூரகிரி நாதர் பிள்ளைத்தமிழ், மழலைச் சுப்பிரமணிய பாரதி பாடியது. திருமால் துதியைக்கூறும் போது ''பச்சைப் பசுங்கொண்டலே'' என்ற குமரகுருபரர் வாக்கை அப்படியே எடுத்து வைத்துக் கொண்டார். திருத்தணிகைக்கு இருவர் பாடியுள்ளனர். சுமார் 1810 ஆண்டை யொட்டிக் கச்சியப்ப முனிவரின் மாணாக்கரான கந்தப்ப தேசிகர்என்னும் வீரசைவர், தாம் பாடிய தணிகைச் சந்நிதி முறையுள் பிள்ளைத் தமிழ் பாடினார். இவர் சரவணப்பெருமாளையர், விசாகப் பெருமாளையர் என்ற இரு சகோதரரின் தந்தையாவார். தாம் பாடிய தணிகை உலாவில் இவர் சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி என்ற ஐந்து பெயர்களைத் தொகுத்துச் சொன்னமையால் இவ்வனைத்துமே ஐம்பெருங் காப்பியம் என்ற நினைவு பிற்காலத்தில் எழலாயிற்று. ஈ.வே. வேங்கடசுப்பிரமணியம் பாடிய தணிகைமுருகன் பிள்ளைத்தமிழ் 100 பாடல், இக்காலத்தில் எழுந்தது. 1964-ல் அச்சிடப்பெற்றது. செங்கோட்டைக் கவிராச பண்டாரத்தையா பாடிய திருமலை முருகன் பிள்ளைத்தமிழ் பண்டைய சிறப்பான முருகன் நூல்களில் ஒன்று. காலம் 18ஆம் நூற்றாண்டு. மயிலம் முருகன் பிள்ளைத்தமிழ் 17-ஆம் நூற்றாண்டுக்கு உரியது. இலக்கண விளக்க ஆசிரியர் வைத்தியநாத தேசிகர் பாடியது.

பிற தலங்கள் :

மலைக் கோயில்கள் அல்லாத பிறதலங்களில் முருகன் பிள்ளைத்தமிழ் கொண்டவை எண்ணற்றன. அனைத்திலும் பெருமை வாய்ந்தது. வைத்தீசுவரன் கோயில் என்னும் புள்ளிருக்கு வேளூர் முத்துக்குமாரசுவாமிபிள்ளைத் தமிழ் குமரகுருபர சுவாமிகள் பாடியது. இதைப் பாடுவதற்கு முருகப் பெருமானே ''பொன் பூத்த குடுமி'' என்று அடியெடுத்துக் கொடுத்ததாக வரலாறு வழங்கும். சொல் நயமும் பொருள் நயமும் கற்பனை நயமும் கொண்ட பிள்ளைத்தமிழ்ப் பிரபந்த வரிசையில் இது எல்லாவகையாலும் முதன்மைபெற்று விளங்குகிறது. தண்டபாணி தேசிகருடைய இசைத்தட்டால் தமிழ் நாடெங்கும் பிரசித்தி பெற்று வழங்குவது.

அடுத்து, அந்தகக் கவி வீரராகவ முதலியார் சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ், பலவகையாலும் சிறப்பு உடையது. இவருக்கு முந்திய காலத்தில் சேறைக் கவிராச பண்டிதர் என்ற பெரும்புலவர் சேயூர் முருகன் உலாப் பாடியிருக்கிறார். அதில் பெரிதும் ஈடுபட்ட அந்தகக் கவி தம் பிள்ளைத்தமிழ் அம்புலிப் பருவத்தில் ''நீ, இவனோடு விளையாட வந்தால் இன்ன நன்மை பெறுவாய்" என்று கூறுமிடத்து, ''கந்தபுராணக் கடல் காணலாம், கவிராசன் இப்பிரான் மிசைச் செய்த திருவுலாக் கவி வெள்ளை கற்று உருகலாம். கவி வீரராகவன் சொற்ற பிள்ளைக் கவி கலம்பகக் கவி வினவலாம்'' என்று தம் கலம்பகத்தையும் சேர்த்துக் குறிப்பிடுகிறார்.

திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் பாடிய சந்நிதி முறையிலுள்ள போரூர் முருகன் பிள்ளைத்தமிழும், அருள்வாக்காகத் திகழும். உடன் குறிப்பிடத் தக்கது மார்க்கசகாயதேவர் பாடிய திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ். மதுரைச் சபாபதி முதலியார் என்பவர் போரூர் முருகன் பிள்ளைத் தமிழை முழுமையும் தழுவிக் குழந்தை வடிவேலன் பிள்ளைத்தமிழ் பாடினார். வேறுள்ள பிரபந்தங்கள், ஆசிரியர் பெயர் தெரியாத தரங்கை வீரவேலாயுதசாமி பிள்ளைத் தமிழ், அரங்கநாதனார் பாடிய அழகாபுரி ஞான சுப்பிரமணியசுவாமி பிள்ளைத் தமிழ், முருகதாசக் கவிராயர் பாடிய ஆய்க்குடி முருகன் பிள்ளைத் தமிழ், அரன்வாயில் வேங்கட சுப்புப் பிள்ளை பாடிய குமரக் கோட்டக் கடவுள் பிள்ளைத் தமிழ் என்பன. நடேசக் கவுண்டர் எட்டுக்குடி முருகனுக்குப் பருவத்துக்கு ஒரு பாடலாக ஒரு பிள்ளைத்தமிழ் பாடினார். கலைவாணன் என்னும் அப்புலிங்கம் பிள்ளை, இக்காலத்தில் பாடிய காவை (திருவானைக்கா) முருகன் பிள்ளைத்தமிழ், இக்கால அரசியற் கருத்துக்கள் யாவும் கொண்டு மிக்க சுவை கொண்டு அமைந்தது.

வெளிநாட்டுத் தலங்கள் :

புலவர்கள் நம்நாட்டு முருகன் தலங்களை வழிபட்டதோடு அமையவில்லை. தமிழ்நாட்டுக்கு அப்பாலுள்ள முருகன் கோயில்கள் மீதும் பல பிள்ளைத்தமிழ் பாடியிருக்கிறார்கள். கேரள நாட்டில் வெள்ளியம்பல நாவலர் திருவனந்தைச் சுப்பிரமணியர் பிள்ளைத்தமிழ் பாடினார். 1888 இல் அச்சாயிற்று. இலங்கையில் பிரசித்தமான கதிர்காம முருகனுக்குச் சிவ அருணாலயபண்டிதர் என்பவர் பருவத்துக்கு

3 அல்லது 5 பாடலாக ஒரு பிள்ளைத்தமிழ் பாடினார். பர்மா, மலயா, சிங்கப்பூர் முதலான இடங்களில் நாட்டுக் கோட்டை நகரத்தார் வியாபார நிமித்தம் சென்று தங்கியபோது அங்கெல்லாம் பெரும் பணச் செல்வர் முருகனுக்கு ஆலயம் எடுத்தார்கள். அவற்றிற்குத் தமிழ்ப் பிரபந்தங்கள் பல இயற்றுவித்து அச்சிட்டார்கள். அவற்றுள் ஒன்று கிசிம்பூர் சுப்பிரமணியர் பிள்ளைத்தமிழ். பர்மாவில் ரங்கூனுக்கு அருகே கம்பை என்ற ஊர் உள்ளது. அங்கு நகரத்தார் ஆதரவில் காஞ்சி சோணாசல பாரதி சென்று தங்கி, கம்பைச் சந்நிதி முறை பாடினார். அதில் அடங்கிய பிரபந்தங்களில் கம்பை முருகன் பிள்ளைத்தமிழும் ஒன்று.

பருவங்கள் :

ஆண்பாற் பிள்ளைத் தமிழுக்குரிய பருவங்கள், காப்புமுதல் சிறுதேர்வரையில் பத்து. அவற்றின் பெயரை இலக்கணங் கூறும். பிற்காலத்தில் புலவர்கள் இப்பருவ அமைப்பை மாற்றியும் பாடியிருக்கிறார்கள். கதிர்காமப் பிள்ளைத்தமிழில் மொழிபயிலல், உணவூட்டல், நிலாவாழ்த்தல், பூண் அணிதல், உடைவாள் செறித்தல் என்ற பருவங்களைக் காண்கிறோம். காவை முருகன் பிள்ளைத்தமிழில் துயிலெழல், தகர் அடக்குதல், வேல்ஓச்சுதல் என்ற பருவங்களை ஆசிரியர் பாடியிருக்கிறார்.

இங்ஙனமாக முருகன் மீது எழுந்த பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தங்களைப் பல பெரும்புலவர்கள் பாடியிருக்கிறார்கள். பாடினோர் அனைவரும் இன்றும் அப்பாடல்களைப் பாடிப் பாடிப் பக்தர்கள் மனமுருகி முருகப்பெருமானது பேரரருளுக்கு எளிதில் பாத்திரமாகும்படி பாடியிருக்கிறார்கள்.

பழுத்தால் விழுங்கனி

பிரபத்தி (அடைக்கலம் புகுதல்) இருவகைப்படும். அவையாவன ஆர்த்தப் பிரபத்தி, திருப்தப் பிரபத்தி என்பன. தேகத்தின் முடிவில் மோட்சம் பெறுவதை இசைந்திருக்கும் ஒருவன் செய்யும் பிரபத்தி, திருப்தப் பிரபத்தியாகும். அவ்வளவு காலம் தாமதிக்கப் பொறுக்காமல், விரைவிலேயே வீடுபேறு அடைவதற்குத் துடிக்கும் அதிதீவிர பக்தன் மேற்கொள்ளும் பிரபத்தி, ஆர்த்தப் பிரபத்தி எனப்படும். இவ்விருள் தருமா ஞாலத்தில் ஒரு நொடிப் பொழுதும் இருக்கப் பொறுக்காமல், ''தினைத்துணையேனும் பொறேன் துயர் ஆக்கையின் திண்வலேயே'' என்றாற்போல, வீடுபேறு அடையக் கொள்ளும் விதுவிதுப்பே, ஆர்த்தப் பிரபத்தி நெறியுணர்வுக்கு அடிப்படையாகின்றது. மரத்தில் காய் காய்த்து, அது பழமாகப் பரிணமிக்கின்றது. கொம்பில் அரும்பாய்க் குவிமலராய்க் காயாகி நன்கு பழுக்கும் தன்மையை, நாம் கண்டுள்ளோம். அந்தப் பழமானது மரத்தின் கிளையில் தங்கி நிற்கும் அளவு ஒன்றுண்டு. அந்த அளவு கடந்தால், தானாகவே மரத்தை விட்டு நழுவிக் கீழே விழுதல், பழுத்த பழங்களின் இயல்பாகும். இத்தன்மையில், இவ்வுலகில் தங்கியிருக்கும் அளவு கனிந்த ஓர் அடியவன், ஒரு கணமும் தரித்திருக்க முடியாமல், ''வீடகத்தே புகுந்திடுவான் மிகப் பெரிதும் விரைகின்றேன்'' என்றபடியும், ''சுளியார் சுமை போடுதற்கு'' என்ற நிலேயிலும், தானாகவே விழுகிற விழுகைதான், ஆர்த்தப் பிரபத்தி எனும் அரும்பெறல் நெறியாகும். அது வீட்டின்பத்தினை எளிதில் அடைவிக்கும்.

ஊன வுடற்சிறைநீத்து, ஒண்கமலே கேள்வன்அடித்
தேன்நுகரும் ஆசைமிகு சிந்தையராய்த்—தானே
பழுத்தால் விழுங்கனிபோல், பற்றற்று வீழும்
விழுக்காடே, தான் அருளும் வீடு.

[ஊனவுடல்—புலால் மயமான உடம்பு. கமலே-திருமகள், மகாலட்சுமி. கமலே கேள்வன்—திருமகள்நாதன், திருமால்].

—ஆசிரியர்.

அறிவியலும் சைவமும்

''சித்தாந்தக் கலைச் செல்வர்''
திரு. க. வச்சிரவேல் முதலியார், B.A., L.T., மதுரை.

அறிவியல் :

உலகப் பொருள்களை நன்கு ஆராய்ந்து, அவற்றின் இயல்புகளை உடன்பாட்டு முகத்தால் உணரும் முறையைப் பின்பற்றுவதே அறிவியல்முறை எனப்படும். இவ்வாராய்ச்சி முறையில் உள்நோக்கி உணர்தல் (Introspection) ; கற்பனை (Speculation) என்பவற்றுக்கு இடம் இல்லை. இவ்வாறு ஆராய்ந்து காணும் முடிவுகள் சரி பார்க்கத்தக்கவையாய், பிறர்க்கு எடுத்துரைத்து மெய்ப்பித்தற் குரியவையாய் இருத்தல் வேண்டும். இத்தகைய முடிவுகளின் ஒழுங்கு அமைப்பே அறிவியல் எனப்படும். இது பூதவியல், பூத மாற்றவியல், உயிருடைய பொருளியல் முதலாகப் பலப்பல பிரிவுகளாகி வளர்ந்து, மக்களுக்குக் கவர்ச்சி தரும் நாகரிகத்தை வளர்த்துக் கொடுத்துள்ளது. இதனோடு உடன் எண்ணப்படுவது தொழில் நுட்பக்கலை. உண்மையில் இஞ்ஞான்று அறிவியலும் தொழில் நுட்பக் கலையும் (Science and technology) உலகத்தில் பெரியதொரு மாற்றத்தைச்செய்து வந்துள்ளன. மேலும் செய்யும். இவற்றால் எல்லா நாடுகளும் எல்லா மக்களும் நன்மை பெறவேண்டும் என்பதில் யாதும் ஐயுறவு இல்லை.

அறிவியலின் குறைகள் :

ஆயினும், இவற்றில் ஒரு குறை உள்ளது. இவை மனிதனின் கையில் ஒரு பேராற்றலுள்ள கருவியைத் தருகின்றன. அக் கருவி நல்லதையும் விளைக்கவல்லது; தீயதையும் விளைக்க வல்லது. ஆனால், இவை அக்கருவியை எந்தத் திசையில் பயன்படுத்துவது என்பதைக் குறிப்பிடவில்லை. மேலும் அக்கருவியைப் பயன்படுத்தும் மனிதனைப்பற்றிய ஆழ்ந்த உண்மைகளை ஆராயக் கூறுகின்றது. அவன் தன்னை எப்படிக் கட்டுப்படுத்திக்கொண்டு நடக்கவேண்டும் என்று இவை கூறவில்லை. மக்கள் வாழ்க்கையின் முடிந்த குறிக்கோள் யாது என்னும் ஆராய்ச்சியை அறிவியல் தன் ஆட்சி வரம்புக்கு அப்பாற்பட்டதாகக் கூறித் தள்ளிவிடுகின்றது.

அறிவியற் குறையின் விளைவுகள் :

இக் குறைவால் நேர்ந்துள்ள விளைவு யாது? மனிதன் இயற்கைப் பொருள்களை அடக்கி ஆள்கின்றான்; ஆனால், தனக்குள் பல தலைப்பட்ட உணர்வுகளை ஒழுங்குபடுத்தி ஆள வலி இல்லாதவனாகிவிட்டான். நாகரிகத்தின் உச்சவரம்பில் ஏறி நிற்கின்றான். ஆனால் தன்னை அறியாமையால் அந்த நாகரிகத்தோடு தன்னையும் ஒருங்கே அழித்துக் கொள்வானே என்று எண்ணி நடுங்கும் நிலையில் இருக்கின்றான்.

''நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந்து ஊக்கின்
உயிர்க்கிறுதி ஆகி விடும்''

என்னும் பொய்யாமொழிக்கு எடுத்துக் காட்டாகும் அளவிற்கு, அறிவியலும் தொழில் நுட்பக் கலையும் மனிதனை உயர்த்தி உள்ளன எனக் கூறிவிடலாம் போல உள்ளது.

அறிவியல், உண்மை ஒன்றனையே குறிக்கோளாகக் கொள்ளுகிறது; அதுவும் புறப்பொருள் பற்றியதே ஆகும். ஆனால், மக்கள் வாழ்க்கை உண்மை-நன்மை-அழகு (Truth, Goodness, Beauty) என்னும் முப்பொருளையும் அடிநிலையாகக் கொண்டு நடைபெறக் காண்கின்றோம். அறிவியல், மனிதன் இயற்கையை எதிர்த்துப் போர் புரிந்து அதைத் தனக்குப் பயன்படுவதாக்கிக்கொள்ள உதவுகின்றது. ஆனால், பிற மக்களோடு பழகி அமைதி வாழ்வு வாழவும், தனக்குள்ளே நிகழும் தீய உணர்ச்சி, நல்ல உணர்ச்சி, என்பவற்றின் போரில் வெற்றி காணவும் உதவவில்லை.

அறிவியலை நிறைவு செய்வன :

இவ்வாறு ஆராய்ந்து காணும்போது, அறிவியல்துறை மக்களுக்கு இன்றியமையாததாகவும், அருட்கொடையாகவும் அமைந்தபோதிலும், அது மக்கள் வாழ்க்கையில் ஒரு சார்பு பற்றியதாகவே நின்றுவிடுகிறது. அதன்நிறைவு நிலையைக்கருதி இணைப்பான பேருண்மைகளை வெளிப்படுத்தவில்லை. இந்த வகையில் அறிவியலில் உள்ள குறைகளை நீக்கவல்லனவாய் இருப்பவை, இலக்கியங்கள்-தத்துவக் கொள்கைகள்-நுண்கலைகள் முதலியனவே ஆகும்.

சிவநெறிச் சிறப்பு :

இனி, சைவம் எனப்படும் தொன்றுதொட்டு வரும் மெய்ந்நெறியை உளங்கொண்டு

ஆராய்ந்தால், அது வாழ்க்கையின் முடிந்த குறிக்கோள் இன்னதெனத் தெளிவுபடவிளக்கி, மனிதன் தன் சூழ்நிலைக்குத் தக்கபடி நன்மையைக் கடைப்பிடித்து வாழும் வாழ்க்கை முறையை இலக்கியங்களாலும், தத்துவக் கொள்கையாலும், நுண் கலையாலும் புலப்படுத்தி வந்துள்ளது என்பதை உணரலாம்.

சைவம் என்பது பிற பல சமயங்கள்போல உணர்ச்சியைப் பற்றி நிகழும் சமயம் என்னும் அளவில் அமைந்து விடாமல், ஆராய்ச்சியை உறுதுணையாகக் கொள்ளும் உயரிய தத்துவக் கொள்கையாகவும் உள்ளது. இதன் சாரம்:

''எவ்வுயிரும் நீங்கா துறையும் இறைசிவனென் (று)
எவ்வுயிர்க்கும் அன்பாயிரு''

என்னும் விதியில் உள்ளது. இதன் விரிந்த போக்கையும் நோக்கையும், இஃது உண்மைக்குக் கொடுக்கும் மதிப்பையும்,

''அன்னிய நூலின் விதியவி ரோதமேல்
உன்னேல் பழுதென் றுளத்து''

என்னும் மற்றொரு விதியால் உணரலாம்.

சிவநெறித் தலைவர்கள் :

சைவம் வேதகாலத்துக்கும் முற்பட்ட பழமை உடையது என்பதை அறிவோம். ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் இச் சிவநெறியைக் கைக்கொண்டு ஒழுகிய மக்கள், அறிவியலுக்கு ஒத்த மிகவுயர்ந்த பண்பாடும் நாகரிகமும் உடையராய் வாழ்ந்தவர்கள் என்பது தெளிவு. இஞ்ஞான்று நம்மிடையே உள்ள இலக்கியம், நுண்கலை, சிற்பம், பண்பாடு முதலியவற்றிற்கு அடிப்படை கோலியவர்கள் சைவத்தின் இரு கண்கள் எனப்போற்றப்படும் ஞானசம்பந்தரும், நாவுக்கரசரும்தான் என்பது வரலாற்று உண்மை.

அறிவியலும் சித்தாந்தமும் :

இனி இதன்கண் கூறப்படும் பொருள் உண்மை, பொருளியல்பு, சாதனம், பயன் என்பவை-அளவை முறைக்கு முற்றிலும் பொருந்தியவை என்பதைச் சிவஞான போதம் என்னும் ஒருநூல் கொண்டே துணிதல் கூடும். சைவம் உலகத்தை உள்பொருள் எனவும், காரண காரிய நியதிக்கு உட்பட்டதெனவும், உயிரின் அறிவு வளர்ச்சிக்குத் துணை புரிவதெனவும் கொள்வது. இவை அறிவியல் முறைக்கு நூற்றுக்கு நூறுபாகம் பொருந்துவன. உலகத்தின் முடிநிலைக் காரணநிலையை ஆற்றலுருவ அருநிலை வியாபகப் பொருள் என்னும் சைவத்தின் கொள்கை, ஐன்ஸ்டீன் (Albert Einstein) முடிபுக்கு ஒத்ததாக உள்ளது. இன்னும், காலத்தைப் பொருட்பெற்றியாகக் கொள்வதும், காலமும் இடமும் எல்லைக்குட்பட்டவை என்பதும் போன்ற பல நுண்ணிய கருத்துக்கள், அறிவியலின் இஞ்ஞான்றைய துணிவுகளுக்கு ஒத்துள்ளன.

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

நீக்கமில்லா அன்பர் நிலை

திருமால், பக்தர்கள்பால் அன்பே நிரூபகமானவன். தன்னைப் பூசிப்பதற்காகப் பூப் பறித்துக் கொணரப் பொய்கைக்குச் சென்ற கஜேந்திரன் என்னும் யானை, தனது காலை ஒரு முதலை கவ்வி ஈர்த்தபொழுது, கையெடுத்துக் கூவிக் கதற, அதன் பொருட்டு அரைகுலையத் தலைகுலைய ஓடோடிச் சென்று, ஆழிதொட்டுக் காத்தருளிய பேரருளாளன், திருமால். அத்திருமாலின் இத்திருக்குணத்திலே மிகவும் ஈடுபட்டு, அடியவர்கள் நெஞ்சம் நீராய் உருகி நிற்பார்கள். நீரை விட்டுப் பிரிந்தால் மீனானது துடிதுடித்து உயிர் நீங்குமாறுபோல, ஒரு கண நேரமாயினும், இறையுணர்வின் நினைவு அற்றுப்போக நேர்ந்தால், நெஞ்சம் துடித்து நொந்து உயிர் விடுதல், அடியார்களின் அரும்பெறல் அன்பின் நிலையாகும். ''பெருநீர் அறச் சிறுமீன் துவண்டாங்கு நினைப்பிரிந்த வெருநீர்மையேனை விடுதிகண்டாய்'' எனவரும் திருவாசகமும், இவ்வன்பின் நிலையினை விளக்கா நிற்கும்.

ஆனை யிடர்கடிந்த ஆழியங்கை அம்புயத்தாள்
கோனைவிடில், நீரிற் குதித்தெழுந்த-மீன் எனவே
ஆக்கை முடியும் படிபிறத்தல், அன்னவன்தாள்
நீக்கமிலா அன்பர் நிலை.

—ஞானசாரம்

[ஆனை—கஜேந்திரன். ஆழி-சக்கரம். அம்புயம்—தாமரை. அம்புயத்தாள்—இலக்குமி, திருமகள் ஆக்கை—உடம்பு. முடியும்படி—முடிவு அடைந்துவிடும்படியான பக்குவ நிலைமை. பிறத்தல்—விளைதல், ஏற்படுதல்.]

—ஆசிரியர்

சுந்தரர் வழக்கும் சேக்கிழார் வாக்கும்

'நீதிபதி' திரு. இரத்தினவேல் சதாசிவம் B.A.,M.L., அவர்கள்

சேக்கிழார் செய்கை :

இன்று நேற்றல்ல; மனித சமுதாயம் இவ்வுலகில் தோன்றியதுமே வழக்கென்பதும் தோன்றியதோ என எண்ணும்படியாக, மிகப் பழங்காலந் தொட்டே நம் சமுதாயத்தில் வழக்குகள் காணப்படுகின்றன. இக்காலத்தும், பூசல்களும் அவற்றால் விளைகின்ற வழக்குகளும் மலிந்து கிடக்கின்றன. எதிர்காலத்தும், இத்தகைய வழக்குகள் மிகப்பல இருக்குமென்பதில் ஐயமொன்றுமில்லை. சுந்தரர் காலத்தில் (கி.பி.9-ஆம் நூற்றாண்டில்) மக்களுக்கிடையே எவ்வாறு வழக்கு உண்டாயிற்று; அது எவ்வாறு தீர்த்து வைக்கப்பட்டது என்பதைச் சேக்கிழார் தாமியற்றிய திருத்தொண்டர் புராண வாயிலாக நமக்கு நன்குவிளக்குகின்றார். சுந்தரரைத் தடுத்தாட்கொள்ள வேண்டி இறைவன் கொண்டுவந்த வழக்கு ஓர் அருட்பெரு வழக்காகும். உலகியலில் மக்களிடை ஏற்படுகின்ற வழக்கு உலகியல் வழக்கு. ஆண்டானுகிய இறைவனுக்கும், அடியவராகிய சுந்தரருக்கும் ஏற்பட்ட வழக்கு, ஒரு தெய்வீக வழக்கு. உலகியல் வழக்குக்கேற்ற சட்ட நுணுக்கங்கள் தெய்வீக வழக்கிற்குப் பொருந்தா. ஆனால், அநபாய சோழனுக்கு முதன் மந்திரியாக விளங்கிய சேக்கிழார், தம் அரசியல் சட்ட நியாய அனுபவத்தால், இறைவன் கொணர்ந்த அருள் வழக்கிற்கும், உலகியல் நியாயங் காட்ட முயல்கின்றார்.

சுந்தரர் வழக்கின் அடிப்படை :

சுந்தரர் வரலாறு திருக்கயிலையிலே தொடங்கித் திருக்கயிலையிலேயே முடிவடைகிறது. அதில் தடுத்தாட்கொண்ட பகுதியில், சுந்தரர் வழக்கைச் சேக்கிழாரடிகள், திருப்பாட்டுகளின் மூலம் திறமையாக விளக்கியிருப்பதைச் சுருங்கச் சொல்வது மிகக் கடினம். எனினும், மேற்கூறிய வழக்கு சுந்தரர் வாழ்க்கையில் எவ்விதம் புகுந்ததென்று, சேக்கிழார் வாக்குமூலம் நோக்குவோம்.

திருக்கயிலாயத்தில், சிவபெருமானுக்கு அணுக்கத் தொண்டராய்ப் பணியாற்றி வந்த ஆலாலசுந்தரரும், உமாதேவிக்குச் சேடியர்களாய்த் திகழ்ந்த அநிந்திதை கமலினி எனப் பெயர்கொண்ட இரு பெண்களும், திருநந்த வனத்தில் ஒருநாள் மலர் கொய்யுந் தொண்டாற்றுகையில் சந்தித்தனர். இருதிறத்தாரும் காதலால் மனத்தே ஒருவயப்பட்டனர். பூப் பறித்து மீண்டார்கள். சுந்தரர் மீண்டு இறைவன் திருமுன் நின்றார். எல்லாம் வல்ல இறைவன் இதனையறிந்து,

''..........................
மாதர்மேல் மனம் வைத்தனை, தென்புவி
மீது தோன்றிஅம்மெல் லியலாருடன்
காத லின்பங் கலந்து அணைவாய்''

என்று சிவபெருமான் கட்டளையிட்டார். அதைக் கேட்ட சுந்தரர் மனங்கலங்கி, இறைவனது சேவடியை நீங்குமாறு சிறுமை செய்த தன்னை, நிலவுலகில் மனிதனாய்ப் பிறந்து தான் மயங்கும்பொழுது தடுத்தாட்கொள்ள வேண்டுமென்று விண்ணப்பிக்க, இறைவனும் அவ்வாறே அருள் புரிந்தார்.

சுந்தரர் பிறப்பும், மணமும், வழக்கு விவரமும்:

திருமலை அல்லது கயிலையில் ஏற்பட்ட காதலின் விளைவாக ஆலால சுந்தரர், தென் திசையில், திருமுனைப்பாடி நாட்டில், திருநாவலூரில், ஆதிசைவ அந்தணர் குலத்தில், சடையனார்க்கு இசைஞானியார்பால், மகனாகப் பிறந்தார். அக்காலத்தில் திருமுனைப்பாடி நாட்டை ஆண்டு வந்த நரசிங்கமுனையர் என்ற சிற்றரசருக்கு மகவின்மையால், நம்பியாரூரர் என்ற பிள்ளைத் திருநாமத்தையுடைய சுந்தரரை அபிமான புத்திரராக ஏற்று வளர்த்து வந்தார். திருமணப் பருவத்தை அடைந்த நம்பிக்குப் புத்தூர்ச் சடங்கவி சிவாச்சாரியார் மகளைத் திருமணஞ்செய்ய நிச்சயித்துப் பெண் வீடாகிய புத்தூரில் திருமணம் ஏற்பாடாயிற்று.

இறைவன், கயிலையில் வரமளித்தபடியே சுந்தரரைத் தடுத்தாட்கொள்ள,

''மொய்த்துவளர் பேரழகு மூத்த வடிவேயோ
அத்தகைய மூப்பென்னும் அதன்படிவ மேயோ''

இவ்வடிவம் என்று, கண்டவர்கள் ஐயுறும்படி ஒரு கிழ அந்தணர் வேடங்கொண்டு திருமணப் பந்தலில் வந்து சேர்ந்தார். அவர்தம் வரவை அங்கிருந்தோர் முதலில் நல்வரவாகக்கொண்டு மகிழ்ந்தனர். வந்தவர் சிவபெருமானென்று நம்பியாரூரர் உட்பட அங்கிருந்த யாருக்குந் தெரியாது. கிழவராக வந்த இறைவன் மண மகனாகிய நம்பியைப் பார்த்து ''எனக்கும் உனக்குமிடையே ஒரு பெரு வழக்கு உள்ளது. அதனை முடித்த பிறகே, நீ உன் மணவேள் வியை முடிக்க வேண்டும்'' என்று கூறினார். நம்பியாரூரரும் அதற்கிணங்க, வந்த முதியோர் அங்குக் குழுமியோரைப்பார்த்து, ''இம் மண மகன், நாவல் நகர் ஊரன் எனக்கு அடியான்'' என்றார். இத் திடுக்கிடும் செய்திகேட்டு அனைவரும் அதிசயித்தனர்; சிலர் கோபித்தார் கள். சுந்தரரும் மற்றுஞ் சிலரும் சிரித்தார்கள். சிவனும் சினத்தால் முடுக்கப்பெற்று ''ஏடா! நீ யாது குறித்துச் சிரித்தாய்? உன் தந்தை, தன் தந்தை, நீ அடிமை என்றெழுதிக்கொடுத்த ஆள் ஓலை என்னிடம் உள்ளது'' என்றார். அதைக் கேட்ட நம்பியாரூரர் சிரிப்பு நீங்கி, அவரை நோக்கி, ''அந்தணர்கள் வேறோர் அந்தணருக்கு அடிமையாதலை இன்றுதான் நீர் சொல்ல நான்கேட்டேன்; நீர் ஒரு பித்தன் போலும் என்றார்''. ''என்னைப் பித்தனென் றும், பேயனென்றும் நீ எவ்வளவுதான் தீங்கு சொல்லினும், நான் உன்னை விடப்போவ தில்லை. நீ வித்தகம் பேசவேண்டாம்; பணி செய்ய வேண்டும்'' என்று இறைவன் விடை பகர்ந்தார். இம் மறையவரது தோற்றத்தைக் கண்டபொழுதே தன் முற்பிறப்பின் பயனால் அவர் மேல் அன்பு பொங்கினும், ''அடிமை செய்'' என்ற சொல்லால் ஆரூரர், அடங்காச் சினங்கொண்டு ''அப்படியானால் நீர் குறித்த அந்த ஆள் ஓலையைக் காட்டும்'' என்றார். இறைவன்நம்பியாரூரரைநோக்கி ''நீஓலையைக் காணும் தகுதி உடையையோ? அதை நான் அவை முன் காட்ட, நீ பணிசெய்க்கடவை'' என்று சொல்லி அவ்விடத்தைவிட்டு அகல்வ தற்கு முற்பட, அதைக் கண்ட நம்பி அவரைத் தொடர்ந்து சென்று அவர் கையிலிருந்த ஓலையை வாங்கிக் கிழித்தார். கிழவர் ''இது முறையோ?'' என்று ஓலமிட்டு நம்பியைப் பற்ற, அங்கிருந்தோர் அவரை விலக்கி, ''உமது இருப் பிடம் எங்கே?'' என்று கேட்டார்கள். ''எமது உறைவிடமும் வெகு தூரத்தில் இல்லை. இதோ தெரிகிற திருவெண்ணெய்நல்லூர்தான்! இந் நம்பி நேர்மைக்கு மாறாக என் கையிலிருந்த ஆவணத்தை வலிய வாங்கிக் கிழித்தமையால் இவன் எனக்கு அடிமை என்பதைத் தானே காட்டிவிட்டான்'' என்றார். ஆரூரர் இறை வனைப் 'பழையமன்றாடி போலும்' என நினைந்து ''உம்மூர் திருவெண்ணெய் நல்லூ ராகில், உமது 'பிழைநெறி வழக்'கைப் பற்றிப் பேச 'அங்கே போகலாம் வாரும்'' என அழைக் தார்.

வழக்கு விசாரணை :

கிழவராய் வந்த இறைவன் முன்செல்ல அவரைப் பின்பற்றி நம்பியாரூரரும், அவர்தம் சுற்றத்தாரும் ''இவ்வழக்கு என்னுகுமோ!'' என வியந்து, அந்தணர் வாழும் திருவெண்ணெய் நல்லூரை அடைந்தார்கள். அங்கு மறையோர் அவை முன்சென்று ''நம்பியாரூரன் எனக்கு அடிமை யென்று நான் காட்டிய ஓலையைக் கிழித்தெறிந்தான். இதுவே என் முறைப்பாடு'' என்றார். அவர் சொல்லைக் கேட்ட அவை யோர் ''மறையவர் அடிமையாதல் இந்த மாநிலத்தில் இல்லை; நீர் சொல்வது யாது'' என்றனர். அதற்கு அவ்வேதியர் ''நான் உம் மிடம் முறையிட வந்த 'வழக்கு வந்தவாறு இசைவேயன்றோ?' இவன் கிழித்த ஓலை எனக்கு இவன் பாட்டன் எழுதிக்கொடுத்தது. இவன் முன்பே நான் காட்டிய ஆள் ஓலையைக் கிழித்தெறிந்ததால், இவன் தன்மை விளங்க வில்லையோ?'' என்று வழக்கினைப் பொருத்த மாக எடுத்துச் சொன்னார். அவையோர் நம்பியாரூரரை ''உமது கருத்து என்ன?'' என்று கேட்டனர் . நம்பியாரூரர் சபையோரைப் பார்த்து ''நான் ஆதிசைவன் என்று அறிவீர். நான் வேறொருவருக்கு அடிமையென்று இக் கிழவர் சாதித்தால், அவர் மாய வழக்கைப் புரிந்து கொள்ள என்னால் இயலாது'' என்று விடை பகர்ந்தார். அது கேட்ட அவையோர் அந்தணராக வந்த கிழவரை நோக்கி ''இவ்வுல கின்கண் நீர் இன்று இவரை, நும் அடிமை என்ற வெவ்வுரையை எம்முன்பு ஏற்ற வேண டும்'' என்று மீண்டும் உரைத்தனர்.

கிழவர் காட்டிய ஓலை நம்பியாரூரரால் கிழித்தெறியப்பட்டது. நம்பி தனக்கு வழி யடிமை என்று சிவபெருமான் தம் உரையால் வாதிக்கிறார். ஒரு அந்தணருக்கு மற்றோர் அந்தணர் அடிமையாதல் உலகியலில் இல்லை என்று நம்பியாரூரர் எதிர்வாதம் செய்கிறார். இந்நிலையில், குறித்த வழக்கு தீர்மானிக்கப் படவேண்டும். எனவே அவையோர் கிழவரைப் பார்த்து,

''ஆட்சியில் ஆவணத்தில் அன்றி மற்றயலார் தங்கள்
காட்சியில் மூன்றில் ஒன்று காட்டுவாய்''

என்று கேட்டார்கள். ''ஆட்சியாவது, நடை முறையில் காணப்படும் சட்டம், வழக்கம் அல் லது அனுபவம் ஆகும். ஆவணமானது, எழுத் தோலைகள். இவையிரண்டுமில்லையானால் அயலார் தங்கள் காட்சி (சாட்சி) யால்வழக்கை முடிவு செய்யவேண்டும். இம் மூன்றனுள் எந்த ஒருவகையால் உம்மால் சான்று பகரமுடியும்? என்று, கிழவரை அவையோர் கேட்டார்கள். அதைக் கேட்ட கிழவர் ''நம்பியால் கிழித் தெறியப்பட்ட ஓலை ஒரு படிஓலை. அதற்கு மூல ஓலை என்னிடமிருக்கிறது'' என்றார். அப்படியாயின் அதைக் காட்டும்'' என்று அவை யோர் பணிக்க, ''முன்பு போல் இவன் இதைக் கிழிக்காமலிருப்பானாகில் யான் மூல ஓலையைக் காட்டுகிறேன்'' என்றார் முதியவர். அவை யினர் ''அதற்குத் தீங்கு நேராதவாறு நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்'' என்று உறுதிகூற, முதியவர் ஓலையை எடுத்துக் கொடுத்தார். அந்தணரது கட்டளைப்படி நியாய அவையி லிருந்து 'கரணத்தான்' அதை வாங்கித் ''திரு நாவலூரில் இருக்கும் அந்தணராகிய நானும் எங்கள் வழியோரும் திருவெண்ணெய் நல்லூர்

முனிவனாகிய பித்தனுக்கு அடிமை செய்ய, அகமும் புறமும் ஒப்ப எழுதியது; என் கைச் சாத்து, நாவலூரன்'' எனப் படித்து முடித்தான். அந்த ஓலையைக் கண்ட அவையிலுள்ள சிலர் அதிலுள்ள மேலெழுத்து தங்களதேயென ஒத்துக் கொண்டனர். அவையோர் நம்பியை நோக்கி ''இதில் காணப்படுங் கையெழுத்து உங்கள் பாட்டனாருடையதா என்று நீங்கள் பார்த்துச் சொல்லுங்கள்'' என்றார்கள். கிழவேதியர் குறுக்கிட்டு ''இவன் பாட்டனாரின் கையெழுத்தைப் பற்றி இவனுக்கு என்ன தெரியும். இவன் பாட்டனார் எழுதிவைத்த கைச்சாத்து வேறு உண்டாகில் அதை இந்த ஆவணத்தோடு ஒப்பிட்டுப் பாரும்'' என்றார். அவர்கள் அவ்வாறே செய்தனர். இரண்டு கையெழுத்தும் ஒத்திருந்ததைக் கண்ட அவையோர் சுந்தரரைப் பார்த்து ''நீர் தோற்றீர், பான்மையில், ஏவல் செய்தல் கடன்'' என்று தீர்ப்பளித்தார்கள். ''விதிமுறை இதுவேயாகில் நான் முடியாதென்று மறுக்க முடியுமோ?'' என்றார் நம்பியார். உடனே மறையவர் ''உங்களது இல்லமும் செல்வ நிலையும் எங்கட்குக் காட்டின் நலம்விளையும்'' எனக் கிழவேதியரை வினவ, அவரும் ''என்னை நீவிர் யாரும் அறிந்திலீராயின் வாருங்கள் காட்டுகின்றேன்'' என்றுகூறி, அவர்களை அவ்வூர்க்கோயிற்கு அழைத்துச் சென்று மறைந்தருளினார்.

இது கண்ட சுந்தரர் மறையவர் வேடத்தில் தன்னைத் தடுத்தாட் கொள்ளவே பரமன் வந்தாரென்ற உண்மையை அறிந்து அவரை உளமுருகி அழைத்தார். அவரும் பார்வதி சமேதராய் அவருக்குக் காட்சியளித்து ''வன்றொண்டர்'' என்ற பெயரையும் அருளி மறைந்தார். இதுவே இறைவன் சுந்தரரைத் தடுத்தாட் கொண்ட வரலாறு.

சுந்தரர்கால வழக்கும், இக்கால வழக்கும் :

பண்டைக் காலத்தில் ஒருவன் தன்னையும் தனது சந்ததியாரையும் அடிமையாக்கிக்கொள்ளும் வழக்கம் பலதேசத்திலுமிருந்தது என்பதில் சந்தேகமில்லை. சுந்தரர் காலத்தில் அந்தணர் அந்தணர்க்கு அடிமையாகும் வழக்கமில்லை என்பது அவர் வழக்கிலிருந்து தெரிகிறது. அதனால்தான் கிழவேதியரின்வழக்கைக் கேட்டு ஊரார் நகைத்தனர். சுந்தரரும் அவரைப் பித்தனென்றார்; அவர்தம் வழக்கைப் 'பிழைநெறி வழக்' கென்றார். உலகியலில் காணப்படாத, கேட்கப்படாத, ஒரு உரிமையைக் குறித்த வழக்காதலின் 'பிழைநெறி வழக்கு' எனப்பட்டது. திருவெண்ணெய்நல்லூர் அந்தணர் மன்றத்தில் இவ்வித வழக்கு எவ்விதம் கொண்டு வரமுடியும் என்றபொழுது கிழவேதியர் ''வழக்கு வந்தவாறு இசைவேயன்றோ'' என்றார். அதாவது ஒப்பந்தப்படி வரும் வழக்கு பொருத்தமான வழக்கு என்று மன்றாடினார். இவ்விதம் வாதிக்கத் தற்காலச் சட்டம் இடங்கொடாது. இது நமக்கு வியப்பைத் தருகிறது.

இவ்வழக்கின் வரலாற்றினைச் சேக்கிழார் வாயிலாக நாம் ஆராய்கின்ற பொழுது, இக்கால வழக்கின் சட்ட நியாய நுணுக்கங்கள் அக்காலத்திலும் இருந்தன என்று, நமக்குப் புலனாகின்றது. சுந்தரர் சிவனைப் 'பழைய மன்றாடி போலும்' என்றார். இங்கு மன்றம் என்றது மரத்தடியைக் குறிக்கும். முற்காலத்தில் நியாய அவை மரத்தடியில் கூடியதென்றும், வழக்கினை அவையோர் முன்கொண்டு வருதல், வாதித்தல், பிரதிவாதித்தல், அதைத் தீரவிசாரித்துத் தீர்ப்புச் சொல்லும்முறை, இவை அக்காலத்திலும் இருந்ததாகத் தெரிகிறது. இது மட்டுமின்றி ஒரு வழக்குச் செவ்வனே தீர்க்கப்படுவதற்கு, ஆட்சி, ஆவணம், அயலார் காட்சி (சாட்சி) ஆகிய மூன்றிலொன்றைத் துணையாகக் கொண்டார்கள் என்பதும் புலனாகின்றது.

நமது இந்திய தேச சாட்சிச் சட்டத்தில், ஒரு வழக்கைத் தீர்ப்பதற்கு வேண்டிய சாதனங்கள் இவையே என்று தொகுத்துக் கூறப்பட்டுள்ளது. இந்திய தேசச் சாட்சிச் சட்டத்தின் 114-வது பிரிவின்படி, சாதாரணமாய் நடந்து வருகிற தோரணையைக் கோர்ட்டார் யோசித்து, சில நிகழ்ச்சிகள் உண்டாகி இருந்தனவா என்பதை நிச்சயித்துக் கொள்ளலாம். இவ்விதியைக் கிழவேதியர் பொருத்தமாகத் தன் வழக்கிற்குப் பயன்படுத்திக் கொண்டார் என்பதைச் சேக்கிழார் தம் வாக்கால் நமக்குத் திறம்படத் தெரிவிக்கிறார். ஆனால் இந்த விதி, மூல ஓலையிருக்கும்பொழுது படி ஓலைக்குப் பொருத்தமாகாது. முற்காலத்தில், தற்பொழுது காணப்படும் பிரதம சாட்சியம், உப சாட்சியம் என்ற வேற்றுமையில்லை என்று சொல்வதற்கில்லை. சுந்தரர் வழக்கின் முற்பகுதியில் கிழிபட்ட ஓலையைப் பற்றி வாதிக்கும்பொழுது, கிழவேதியர், அது படிஓலை என்று நாம் சந்தேகப்படுவதற்குக்கூட இடங்கொடுக்க வில்லை.

தாவா பத்திரத்தை, நியாய மன்றத்தில் குமாஸ்தா படிப்பதுபோல், முற்காலத்தில் கரணத்தார் ஓலையை வாங்கிச் சபையோர்கேட்க வாசிக்கும் முறை இருந்ததாகத் தெரிகிறது. ஆவணம் எப்படி எழுதப்படவேண்டும், அது எப்படி நிரூபிக்கப்படவேண்டும் என்பவற்றைக் கவனிக்கும்பொழுது, அக்காலத்து நடைமுறைக்கும் இக்காலத்திய நடைமுறைக்கும், அதிசயப்படத்தக்க ஒற்றுமைகள் காணப்படுகின்றன. சுந்தரரின் பாட்டனார் ஆள் ஓலையில் ''இருமையால் எழுதி நேர்ந்தேன், இதற்கிவை என்னெழுத்து'' என்று கையொப்பமிட்டதாகத் தெரிகிறது. மனமும் வாக்கும் ஒன்றுபட்டு எழுதின பத்திரமே செல்லுமென்பது நமக்கு நன்றாகத் தெரிந்தவிஷயம். அந்த ஓலையில் மேலெழுத்து போடப்பட்டதாகத் தெரிகிறது. மேலெழுத்திட்டவர்கள் மூலம் ஒரு பத்திரத்தை ஓரளவு நிரூபிக்கலாம். ஆனால் அவர்களுக்குப் பத்திரம் எழுதிக் கொடுத்ததாக ஞாபகமில்லாவிட்டால், எழுதிக் கொடுத்தவரின் கையெழுத்தை அவருடைய வேறொரு கைச்சாத்திலுள்ள கையெழுத்தை ஒப்புநோக்கித் தீர்ப்புக் கூறவேண்டும். இதே முறைதான் சுந்தரர் வழக்கிலும் காணப்படுகின்றது. இது போன்ற பல காரணங்களால் நாகரிகம் மிகுந்து காணப்படும் இக்கால வழக்கினைப் போன்றே சுந்தரர் காலத்திலும் வழக்குகள் நடைபெற்றன என்பது தெரிகிறது.

**

திருமயிலைத் தல புராணம்

(மூலம்)

பாயிரச் சுருக்கம் (காப்பு)

கஞ்சர், ஆன நத்தவர், கதிர்பொங்கு ஆழிகால்
நஞ்சர், ஆன நத்தவர், நாளும் வாழ்த்திடும்
குஞ்சர ஆன னப்பெருங் கோவின் பொற்சரண்
வஞ்ச ரால்நம் நற்கவி வழாது வாழ்த்துவாம்.

கபாலீசர் துதி

பொன்பூத்த கமல மலர்ப் புத்தேளும்
பூவைவண்ணப் புனித னாதித்
தென்பூத்த கடவுளருஞ் சதுர்மறையும்
பரவஅருள் திமிலேற் றண்ணல்
கொன்பூத்த மயிலைநகர்ப் பூம்பாவை
யீசனெனும் குழகன் ஞான
மின்பூத்த திருவடித்தா மரையையன்பின்
வணங்கியென்றும் வியந்து வாழ்வாம்.

கற்பகவல்லித்தாயார் துதி

கொங்குலாம் மலர்க்குழலும் பிறைநுதலுங்
கயல்விழியும் குமுத வாயுஞ்
சங்கமா மணிமிடறுங் கழைப்புயமும்
மலர்க்கரமுந் தரள மாலைத்
துங்கமா கிரிமுலையுங் கொடியிடையும்
பதுமஅடித் துணையு முள்ள
எங்கள்நா யகியையெழின் மயிலையிற்கற்
பகக்கொடியை யிறைஞ்சி வாழ்வாம்.

கூத்தாடும் விநாயகர் துதி

நல்வளஞ்சே ரருட்புலவ ரிருசெவிகட்
கமிர்தெனவெந் நாளு மோங்கச்
சொல்வளமும் பொருள்வளமும் அளித்திந்நாற்
கிடையூறு தொலைத்தா ளென்றே
பல்வளமும் பெரும்புகழும் படைத்திலகும்
மயிலைநகர் பதியாய் வாழும்
வெல்வளஞ்சேர் கூத்தாடும் ஐங்கரக்குஞ்
சரத்திருதாள் வியந்து வாழ்வாம்.

சிங்காரவேலர் துதி

நீர்பூத்த சடாமகுடத் தெம்மானீன்று
அளித்தவொரு நேயன் தன்னைச்,
சீர்பூத்த குருமணிமா மகுடமணிந்து
இதண்மணிப்பாற் சென்ற தேவை,
வார்பூத்த முலையுமையாள் திருமுலைப்பால்
பருகியவாய் மணியை, ஞான
நீர்பூத்த சிங்கார வேலன்எனுங்
கண்மணியை, இறைஞ்சி வாழ்வாம்.

திருஞானசம்பந்த சுவாமிகள் துதி

வீழியிதழ் மடந்தைதன்மெய் யத்தியைப்பெண்
அரசாக்கும் வேந்தை, வாவும்
ஆழிபுடை சூழ்மதுரை யமணிருள்கீண்
டெழுந்தசுட ரவனை, யவ்வூர்
வாழிறைவன் வெப்பகல அருளமுதம்
பொழிந்தவியன் மழையை, ஞானக்
காழிநகர் மறையோனைக், கவுணியர்தங்
குலக்கொழுந்தைக், கருதி வாழ்வாம்.

திருநாவுக்கரசு சுவாமிகள் துதி

இற்றாணின் மரகதத்தி னொளிபகலும்
இருள்காட்ட எழுந்து காமன்
விற்றாணி மலரெடுத்து விளையாடுந்
திருவாமூர் விளங்க வந்தோன்
கற் றூணைப் பிடித்துவளை கடல்கடந்தோன்
இருபாத கமலம் என்னும்
பொற்றூணைப் பிடித்துநம திடராழி
கடந்துமுத்தி புகுத லாமே.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி

அறைகழலா ரூரர்தனை மணிமறுகில்
தூதுவிடுத் தருளி னானை
நிறைவழுவாப் பரவைபடிந் துயர்ந்தமுலைக்
கிரிசார்ந்து நிலமே லோங்க
முறைதவறாத் திருப்பதிக மாரிபொழிந்
திடும்புயலை முதிய ஞான
மறையவனை எமையாளும் செந்தமிழ்ச்சுந்
தரனையாம் வணக்கம் செய்வாம்.

மாணிக்கவாசக சுவாமிகள் துதி

மாதுபா கனுக்குமெய் வாச கத்தமிழ்
ஓதியே மூகையை யோது வித்தருள்
சீதவார் பொழில்திகழ் சேண்தொ டும்திரு
வாதவூர் அடிகளை வணக்கஞ் செய்குவாம்.

திருநந்திதேவர் துதி

வடகயிலைத் திருவாயிற் காவலனைச்
சிலாதரன்றன் மகவைத் துத்திப்
படவரவை யரைக்கசைத்த பரமனைச்செஞ்
சடையின்மதி பதித்த கோவைத்
தடவரைக்கைச் சிலைஎம்மான் திருமுன்னர்
நெருங்குமலர்த் தவிசோன் ஆதிக்
கடவுளர்மேற் படும்பிரம்பொன் றுடையதிரு
நந்திதனைக் கருத்துள் வைப்பாம்

பைரவமூர்த்தி துதி (வேறு)

செயிரவச் சூழ்ச்சிசெய் சீயச் சோரியை
அயிர வத்தனின் இன்வரம் அருளும் ஐயனைக்
கயிரவப் பழனஞ்சூழ் காழி மாநகர்
வயிரவக் கடவுளை வணக்கம் செய்குவாம்.

சரசுவதி துதி

நிலமுதற் படைத்தவன் நேய நாவினின்று
இலகுதன் றுணையா மெழில்கொள் பாரதி
யுலவும் வெண்கமல மேலுறையும் வாணியன்
மலரடி முடிமிசை வணக்கஞ் செய்குவாம்.

(காரைக்காலம்மையார், கண்ணப்பநாயனார், மங்கையர்க்கரசியார், மற்றுமுள்ள திருத் தொண்டர்கள் துதி)

சங்கரற் கன்பாய்ப் பாடல்
சமைத்தபே யம்மை தானும்,
அங்கரற் கம்பாற் கண்ணை
யகழ்ந்தப்பி னோன்பொற் றாளும்,

மங்கையர்க் கரசி பாத
வனசமும், மற்று முள்ள
துங்கமெய்த் தொண்டர் பாதத்
துகளும்நந் தலைமேற் கொள்வாம்

சண்டேசர் துதி

மண்ணியெனும் நதிநடுவில் மணல்குவித்துச்
சிவலிங்க வடிவம் ஆக்கித்
தண்ணியஆன் பால்முடிமேல் ஆட்டுதலுந்
தாதைசினந் தலைமேற் கொள்ளத்
துண்ணெனவே யெழுந்துசுடர் மழுவாலே
அவன்றாளைத் துணித்த வீரத்
திண்ணியனைச் சண்டேசன் றனைப்பாதம்
பணிந்தன்பாற் சிந்தை செய்வாம்.

ஆதிசைவர் துதி

புத்தமுதம் அனையதமிழ் பொலியும்இசை
வளர்மயிலா புரியென் றோதும்
முத்திநக ரைத்தினமும் நான்மறையா
கமம்தெரிந்த மூதூர் வைகுஞ்
சுத்தசிவ வேதியரைப் பரசிவகா
ரியபரராய்த் துகளற் றோங்கும்
உத்தமசை வத்தவரைத் தொழுதவர்தாட்
கமலம்எம துளத்தில் வைப்பாம்.

அவையடக்கம்

செப்பும்இயற் றமிழ்களெலாம் அரியயனே
முதலாய தேவர்க் கோதி
ஒப்புவிக்கஅறியாமல் அரனிடத்தே
வளைத்துவளைத் துரையா நின்றேன்;
மைப்பரவை தரும்விடமும் நீடும்என்பும்
ஆடரவும் வனப்பாய்க் கொண்டார்,
அப்பொறுமை யுடையவர்என் புன்கவியும்
பொறுப்பரென அறிந்து தானே.

மெய்வ ளர்ந்திட வேந்தரும் வாழ்ந்திடத்
தெய்வ மாமறை நீதி சிறந்திட
மைவ ழூது மலியப் பொழிந்திடச்
சைவம் ஓங்குக தாரணி யெங்குமே

நற்ப ரஞ்சுடர் ஆகிய குமரவேள் நளினப்
பொற்ப தங்கள்தன் னுளங்கொண்டு அன்னவன்புகன்ற
சிற்ப ரன்தரு நூல்வகை யாவையும், கொண்ட
கற்ப கம்திகழ் பொதியமா முனிவனைக் கலந்தே

முனிவர் அன்பொடு தொழுதவன் புகழெலாம் மொழிந்தே
இனிய தோர்தலம் இயம்பென இரசித கிரிமேல்
புனிதன் வீற்றிருந் துமைக்கவன் புகன்றஅப் படியே
நனியு ரைத்தது மயிலை மாநகர்த் தனிநலனே.

இத்தல விசிட்டம் முன்னே,
பொழிப்பதாய் இசைத்த வாறும்,
இத்தலத் துண்மை தன்னை
யிரசித கிரியின் பாங்கோர்
சித்திர மணியின் றெற்றிச்
சிகரமீ திருந்து நாதன்
உத்தமி பணிந்து கேட்ப
உரைத்திடத் துணிந்த வாறும்,

வரந்தரும் கபாலி தீர்த்தம்
வனப்புடன் பரிசித் தாலும்
பரந்தனை யளிக்குந் தீர்த்தப்
பான்மைக ளிசைத்த வாறும்,
துரந்தவல் வினையை நீக்குந்
தொன்மையோர் தலத்தைச் சூழத்
திரம்பெறச் சிவால யங்கள்
செய்து பேறுற்ற வாறும்,

வாமனம் இலிங்கங் கூர்மம்
வராகமே மச்சம் காந்தம்
ஏமமில் பவுடி கம்பிர
மாண்டம் மார்க்கண்டம் சைவம்
ஆமிவைசிவ புராணம்ஐ
யிரண்டு: அரிக்கு நான்கு;
நாமம் பாகவதம் விண்டு
நார தியங் காருடம்.

பாரதி கொழுநன் காதை
பதுமமே பிரமம் என்றாங்
கோரிரு வகைய; அங்கிக்
கொன்றென்ப ஆக்கி னேயம்;

பேரெழி லிரவிக் கொன்று,
பிரமகை வர்த்த மென்றே
ஏருறு புராணம் மூவா
றென்பவை யிவை; யிவற்றுள்

பொய்வைத்த உளத்திற் கெட்டாப்
புனிதனார் புராணம் பத்திற்
சைவத்திற் காந்தந் தன்னிற்
றனித்தனி புகலுஞ் சீர்த்தி
மைவைத்த கண்டன் பாத
வலிமையால் மொழிபெ யர்த்தே
மெய்வைத்த வுளத்தர் காண
விளம்புவன் தமிழி னாலே

(வேறு)

பாயிரம்நாட் டுடன்நகரம் பொதிய மேலோர்
பகர்தருநற் றலவிசிட்டப் பொழிப்புரையே, கயிலை
ஏயதலத்து உமைசாபம் உமைபூசை வேதம்
எழிற்குமர வேள்விளங்கு கலைமடந்த கேள்வன்
மேயபுகழ் முனிவர்களும் சுரரும் ஆடும்
வியன்தீர்த்த மான்மியம், மேல்உயிர்கள் உய்யும்
தூயதிரு விழாச்சிறப்புச் சுருக்கம் ஈறாச்
சொல்சருக்கம் பதின்மூன்றாய்த் தொகுத்திந் நூலே

எந்நிலமும் தொழுமயிலைப் புனிதன் சீர்த்தி
யவையும்ஓர் நூலாக்கி அந்நூல் தன்னில்
மன்னுபா யிரச்சிறப்புச் சருக்கம் முதலாய்
ஞானம்வளர் திருவிழாச் சருக்கம் ஈறாய்த்

துன்னியசீர்ப் பெருஞ்சருக்கம் பதின்மூன் றாகத்
தூயசருக் கங்கள்தனில் தோய்ந்த யாவும்
பன்னும்அறு நூற்றறுபான் ஆக்கி வைக்கப்
பகர்ந்தனன்; இந்நூற் பெயரும் பகர்வாம் கேண்மோ

(வேறு)

கூறரும் பொருள் இதென்றே
குறுமுனி புகலச் சான்றோர்
தேறிய வடநூல் தன்னைத்
தென்னூல் அதாகச் செய்த
ஏறுசீர்க் காதைக் கிங்ஙன்
எவன்பெயர் என்னில், என்றும்
வீறுசேர் மயிலைமூதூர்ப் புராணமாய்
விளம்பும் மாதோ!

பூமரு வுயிர்க்கும் வாசப்
பொதும்பர் விண்டொட விளங்கும்
மாமயிலைப் புராணம்
வகுத்த யாப்பிலக்கணத்தில்
நாமமாம் பாவினத்துள் நலம்
பொருந்துறுப் பிற்சொல்லும்
ஏமமாம் விருத்தந் தன்னால்
இசைத்தனன் தகைமைத் தாயே.

(வேறு)

முன்சொல் ஆயினும்வட
சொலைத்தென் சொலாய்மொழிதல்
என்சொல் ஆயினும்அப்
பொருள்கிடைத்த லாலிகழார்
நன்சொல் ஆயினும் பொருள்
பழுதாயிடின் நவையாம்
புன்சொல் ஆயினும்நற்
பொருள் சேர்ந்திடிற் புகழே.

நாட்டுச்சருக்கம்

இண்டை வார்சடை எம்பிராற்கு அன்பராய்
அண்டர் போலும் அறிஞர் சிறந்திட
விண்ட மாமலர் மேவுதன் சோலைசூழ்
தொண்டை நாட்டணி சொல்லத் தொடங்குவாம்.

மேலும் நாவினைப் பற்பல
படைப்பினும் விளங்கத்
தாவில் கண்செவி பற்பல
வுறினும் அத்தனிநாட்டு
ஒவி லாவணிசொற்றிடக்
கண்டு கேட்டுருக
யாவரா யினும்இசையுமோ
முழுவதும் இசையா.

முந்த நாட்டிய அருணையை நினைத்திடின், முயங்கும்
பந்தநாட் டினையொழிந்து அருணாட்டினிற் படர்வார்
எந்தநாட் டினும்இல்ல தோர்அதிசயம் இனையது
அந்தநாட் டினிலுண்டு அதன்பெருமை யாரறிவார்?

பூமகட்கு ஒருகோயி லாய், அருந்தவம் புரியும்
நாமகட்கு ஒருகழகமாய்க், கலையெலாம் நடாத்தச்
சேமமுற் றெவராயினுந் தெரிசிக் கின்முத்தி
யாம்வடப் பெயர்வன மும்அந்நாட்டி லுண்டுஅறையில்!

சித்தர் கின்னரர்கிம் புருடேசர்கள் சிறந்த
முத்தர் வானவர் மொய்த்துள கயிலைபோல் முன்னம்
அத்தர் வேடனுக்குஅளித்த தென்காளத்தி அருள்சேர்
நித்தர் தென்கயிலாயம் அந்நாட்டிடை நிகழும்

காணிற் போகமாம் பதமெலாம் வழங்கிடும்கலந்தே
பேணிற் கூறரும்முத்தியை அளித்திடும் பெரிதுஞ்
சேணிற் போய்நிமிர்ந்து அயில்கொடு கந்தவேள் திகழ்ந்த
ஆணிக் கோர்பதி தணிகைமாமலையும் அங்கமரும்.

ஆன நான்மறை புகழ்தரத் தாண்டவம்ஆடும்
ஞான நாயகன் சுந்தரற் காகவே நயந்த
வானம் ஓங்கிய மகிழடி சேவை யால்மருவும்
மேல் நலந்திகழ் ஒற்றிமாநகர மும்விளங்கும்.

விளங்கும் மூவருந் தேவரும் முனிவரும் வியந்தே
உளங்கொள் அன்புடன் வழுத்துவர் அத் தலத்துறையிற்
களங்க வல்வினைத் தொகையெலாம் பறித்திடுங் கணிப்பில்
வளங்கள் ஈந்திடும் திருமுல்லை வாயிலும் மருவும்.

(வேறு)

அங்கு மாயவன் போல்விளங்கிய குடக்கலை
குணக்கலை தனைப் பொரவே
இங்கு எழுவது போலுல கெலாமொடுங்க
இறுதிநாள் வருபுனலது போற்
துங்கமால் வரையின் வேங்கைமா வரைகள்
சுமந்திருள் போலொளி தரவே
பொங்குவெண் டிரைக ளண்டமேல் வருடப்
பொலிவது பாலிமா நதியே.

பந்தனை மறுக்கும் வசிட்டமா முனிவன்
பகர்தரும் யூபவான் தேனுத்
தந்திடு சுரப்பின் மடைதிறந் தூற்றுந்
தணப்பில்பால் பொலிந்து வானோங்கி
நந்திமால் வரைமேற் றிகழ்ந்தகிற் றுணியும்
நறுவீய கோழரைச் சாந்தும்,
முந்தவாழ் உயிர்கள் உய்ந்திட ஒழுகி
உவரி சேர்ந்திடும் புகழுரைக்கின்.

உறைந்திருப்பிட மொல்லையினில் விட்டகன்றங்கு
ஓடி யம்பரத் தினையடைய
நிறைந்து வந்திடலால், அலை தருமதனால்,
நித்தலும் மலர்மலை சுமந்தே
மறைந்தழுக் கறுத்த அன்பருக் கெளிதாம்
வள்ளன் மேனிகள் தனைக்கரைவாய்
இறைஞ்சும் அன்பதனால், தீவிரதரர் போல்
இருந்தது பாலிமா நதியே.

அணைய வந்துவந் தாடியே தொழுமவர்க்கு
அக்கணத் தழுக்கறுத் திடலால்,
இணையிலாத அத்தேசத்தி லிடுதலால்
இருமையுமின் பளித்திடலாற்
றுணைமுலைக் குவடுரிஞ்சியே குமுதவாய்த்
தோகையர் குடைந்து நின்றாடக்
கணையின் ' மீச்செலும் பாலியங் குடிஞை,உட்
கருணை சேர்குரவர் போன்றுளவே

குறிஞ்சியாகிய மால்பொருப்பு அகப்பொருட்
கொடு பெருங்கோவை நாடுதலால்
நிறைந்த சங்கமுத்தமிழ்ச் செய்யுள்தோய்தலால்
நீணிலத்தவர் செயும்சிறப்பால்
எறிந்துவெண் டிரைக்கரங்க ளாலிரவியை
இந்துவோ இரவியோ வெனவே,
செறிந்து வார்கடற் புகுந்திடும் பாலியுஞ்
சிறந்தநற் கவிஞர் போன்றதுவே.

மெல்லியார் சுவைத் தமிழினைப் பசுங்கிளி
மிழற்றிய ஒலிசெவி புகத்தாம்
எல்லையில் பதம்பெயர்த்து உடன்நடித்துநின்று
உருகும் மாயூரங்கள்; அதுகண்டு
எல்லை தீர்ந்த மாமணிமழை புடைதொறும்
எறிதிரைக் கரங்களாற் பொழியும்
மல்லற் பாலிமாநதி, இந்த நாட்டு இரவலர்க்கு
அருள்மாந்தர் போன்றதுவே.

(வேறு)

குரும்பை ஒத்துஅணி தாங்கிய கொள்கையாற்
சுரும்பு நீள்குழை கான்மலர் தோய்தலால்
வரும்ப யோதர வாரியின் பாலிதான்
கரும்பை யன்னசொற் கன்னியர் போன்றதே.

இந்த மாநிலம் மேவிய பாலிதான்
சந்து காரகில் ஆரங்கள் தாங்கியே
எந்தை தாள்மருங் கேத்தி வயல்தொறும்
வந்து லாயது மள்ளர்கள் ஆர்க்கவே.

துய்ய நந்தியெனும் மால்வரை தொடுத்து
ஒய்யெனச் சென்று உலாவுதல் காண்குறீஇச்
செய்யுள் மள்ளர் குழீஇக்குழீஇச் சென்றுசென்று
உய்ய ஏத்தொலி யும்பரிற் சேருமால்.

காரின் மேயதன் சாயையைக் காண்கினும்
போரி ழைக்கும் பகடுகள் பூண்டபல்
ஏரி னோதை யெழுந்தங் கெழுவகை
வாரி யோதையுண் டோங்கி வளருமால்.

(வேறு)

சேறுசெய் குநர்சிலர் தெய்வம் போற்றியே
நாறுசெய் குநர்சிலர் நடுவரும் சிலர்
ஊறுசெய் குநர்சிலர் உற்பலாதி நீர்க்கு
ஆறுசெய் குநர்சிலர் ஆண்டு மள்ளரே.

வளைசொரி தரளங்கள் மாற்றுவார் சிலர்
களைஎனக் குமுதங்கள் களைகு வார்சிலர்
அளைநறாத் தேறலுண் டாடு வார்சிலர்
இளைஞரோடு உழத்தியர் எண்ணி லார்களே.

(வேறு)

காவியுண் கட்கடை சியர்செய் தோறும்
மேவிமெல் லடிபேர்த் திடுமென் னடைக்கு
ஆவிசோர்ந் திவைதோகை யர்க்காய தென்
னோவென் றன்னங்கள் துண்ணென நோக்குமால்.

கோல்வளைக் கணிகையர் கொண்கர் வந்துழீஇப்
பாலுறு மணியெனப் பயனில் வான்கதிர்,
ஏலுமெய் யுவகையால் இசையுங் கற்பினோர்
மேலுறு பரிசென விளைந்து சாய்ந்தவே.

(வேறு)

தொண்ட ரன்பெனுந் தூய்நிலத் துள்ளெழா
மண்டு ஞானம்வளர்ந் திடுங்காட்சி போற்
புண்ட ரீகவய லிற்பொலிந் திதழ்
விண்ட சாலி விளைந்து வளர்ந்தவே.

(வேறு)

வம்புலா நறவுமிழ் கோதை சூழ்மன்னு
தோளிணை மள்ளர்குழீ இக்குழீஇ
உம்பர் தெய்வதம்போற்றியே, வான்றொட
வோங்கு சாலியைக் கூன்குயத் தொய்யெனத்
தம்பதங் கண்மேலாரம் பெயப்பெயத் தடிந்துபோர்
செய்த தன்மைகள் எண்ணிலாச்
செம்பொன் மேருத்திசைக டொறுந்தொறுஞ்
சேண ளந்துயர்ந் துற்றது போன்ற

வான்முகட் டளவுயரும் நெற்பெரும்போர் மள்ளர்
சாய்த்து வெம்பாண்டில்கள் துரந்தே
கான்மிதித் தவைசுலவிடச் சுலவக்
கடிதினோச்சி வைகளாற் கடிந்தே
மேன்மைபெற்ற நெற்பண் டியிற் பொழிந்தே
வேந்தர் கூறுற ஈந்தறம் வளர்க்கும்
பான்மை யுற்றுளோர் பதிபல நெருங்கிப்
பதுமை நாட்டினும் புதுமை நாட்டிடுமே.

நறவுயிர்த் திடுமருமலர்ப் பொதும்பரே
நண்ணியெங்கணும் விண்ணடைந் தோங்கிடும்
அறமுதற் பொருண்மை அறியுங்கிளிக
ளோடுஅளிகள் பாடிய இசைதிசை தேங்கிடும்
மறம்இயற்றிய பொருநர் வாள்விதிர்த்
தெனவானம் வாவிடும் மீனினம் மேவிடும்
நிறைமலர்க் கழுநீர்த் தடமெங்கணும்
நிலமகட் கெண்ணில் விழிகளாய் நிகழும்

மேவும்வென் டரளம்உகுத்து விண்தடவும்
வியன்கழைக் காட்டினைக் கடிந்து
தாவுமென் னறவப் பூமலர்ப் பொதும்பர்
சூழலிற் பற்பல தொகுத்தே
ஓவிடாச் சுவைத்தீஞ் சாறுற
நெருக்கியுற அடும்புகையெழ, அதனை,
வாவுவின் முகில்கள் இன மெனக்கருதி
மயில்கள் வந்துறை இடம்அனந்தம்.

(வேறு)

மண்டுபெருங் காதலினால் அளிபாட
மயிலாடி மகிழுங் காலை
எண்டிசையும் மணங்கமழும் புன்னைகளில்
தாதிமத்தில் இருங்கான் மோத
விண்டரும்புஞ் செங்கனியும் வீழ்வதுமேற்
கட்டிகளும் விளங்கா நிற்குந்
தண்டரள மாலிகையுஞ் சிரக்கம்பம்
பண்ணியது தந்தா லொக்கும்

இங்குமண்டு அலைகள்கொண் டிலங்குகடல்
என்றிடும் கமல ஓடைசேர்
கொங்குதங்கு புனல்உண்டு, பின்புமத
குடம்பொழியும்; அதனை வாரியே
அங்கைகொண்டு கடதுங்க வெங்கரிகள்
அண்டர்அண்டம் உற வீசல்தான்,
மங்குல் சிந்துவினில் மொண்டுகொண்டு புவி
வந்து சிந்துவதை மானுமே.

கொங்கு சிந்தி, நறவஞ்சொரிந்து, வரி
கொண்ட வெண்கமல வாவிசேர்
பங்கயங்க ளொருச்சங்கம் அங்கனுறு
பண்புகொண்டு நிறைபான்மை தான்,
மங்குல் வந்துசுதை பொங்குவெண் சுடர்கள்
மண்டி யெண்டிசையும் மாசில்சீர்
தங்கும்இந்து என் தவிர்ந்த வொளி
தந்த பந்திநிரை போன்றவே.

(வேறு)

செம்பொன்மா நிதிக்கோபுர மெங்கணும்,
சேணுரிஞ்சு பொற்கோபுரமெங்கணும்,
வம்புலா மலரோடைகள் எங்கணும்
மதங்கொள் சிந்துர வோடைகள் எங்கணும்
உம்பர்மேவு இரதங்களே யெங்கணும்
உவந்து செய்விரதங்களே யெங்கணும்
நம்பனார் திருநாட்டிசை யெங்கணும்
நவில்வதத் திருநாட்டிசை யெங்கணும்.

கோலமா மறைக்கிடைகளே எங்கணுங்
குலவும் ஆனிரைக் கிடைகளே எங்கணுஞ்
சீலமா தவர்சங்கமே எங்கணுஞ்
செய்யுலா வருசங்கமே எங்கணுங்
கூலஞ்சாடிய கட்பல வெங்கணுங்
குளம்கிழித்திடுங் கட்பலவெங்கணுங்
காலகாலன் வாழ்க்கைத் தனமெங்கணுங்
கனகமாரி பெய்கைத்தல மெங்கணும்.

(வேறு)

வேதம் ஓர்ந்து மகங்கள் இயற்றியே
வேத ரென்ன வாழ் விப்பிர ரெங்கணும்
மாத வங்களா லைம்புலன் காய்ந்தருள்
மன்னிவாழ் சைவ மன்னவ ரெங்கணும்
காதன் மங்கையர் வேட்குநர் வேட்கையின்
காட்சிமல்கு களிவிழா எங்கணும்
கோதில் பங்கயத் துள்ளலர் காவிகள்
கொண்டு லாய கொடிகளே எங்கணும்

அளித்திடப் புன்பிறப் பாகும் பாலையாம் அடவி
வெங்கனல் அங்கவை மாழ்கியே
ஒளித்திடச் சுகப்பேரின்ப மூழ்கவே யுமதுதாள்
சரணென்றடைந் தோரெலாங்
களித்திடப் பரமானந்த வாரிதிகாட்டிநீவிர்
கரிசகன் றோடவே
குளித்திடுங்க ளென்றீயும் மெய்ஞ்ஞானமார் குரவர்
வாழுங் குகைமடம் எங்கணும்

கழிந்த பேரழகால் அவணர்யாவருங்
காமன்தேவி யுங்காமுற மேவுவார்
ஒழிந்து நல்குரவுஎண் வளமுந்தரலால்
ஓங்குமா நிதிக்கோ னெனவாழ்குவார்
பொழிந்த கல்விப்புலமை வளத்தினாற்
பொதிய மாமுனிபோல விளங்குவார்
செழுந்திருத் தொண்டைநாட்டின் வளம்யாஞ்
சேரவோதுந் திறமெங் ஙனமரோ!

நாட்டுச் சருக்கம் முற்றும்

(தொடரும்)

நமது தமிழகத்திலுள்ள சைவத் திருத்தலங்களுக்கும், ஸ்ரீவைணவத் திவ்விய தேசங்களுக்கும், பெருமையும் புகழும் அமைந்தமைக்குரிய காரணங்கள் பற்பலவற்றுள், அவ்வக்காலத்தில் இருந்த அருளாளர்களும், சிறந்த பெருங் கவிஞர்களும் பாடியருளிச் செய்துள்ள தலபுராணங்களும், தனிப் பெரும் சிறப்பிடம்பெறுகின்றன.

திருவாவடுதுறை ஆதீன மகாவித்வான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களும், அவ் ஆதீனத்தைச் சேர்ந்த மாதவச் சிவஞான சுவாமிகள், கச்சியப்ப முனிவர் முதலிய பெருங் கவிஞர்களும், ஞானிகளும் ஆகிய பற்பலர், எத்தனையோ பல அருமையான தலபுராணங்களை இயற்றியுள்ளனர். சொற்சுவை பொருட்சுவைகளிலும், கற்பனை நயங்களிலும் சிறந்து விளங்கி, நம் தமிழ்மொழியின் இலக்கிய வளர்ச்சிக்கும் செழிப்புக்கும், அத்தகைய தலபுராணங்கள் செய்துள்ள அரும்பெரும் பணிகள், அனைவரும் வியந்து போற்றுதற்குரியன.

தமிழிலக்கியச் செல்வங்களுள் ஒன்றாகத் திகழும் தலபுராண ரல்களை, அழியவிடாமல் போற்றிப் பாதுகாத்துப் பேணிப் பரப்ப வேண்டுவது, தமிழுணர்வும், சமய உணர்வும், கடவுட் பக்தி நெறிப் பண்பாடும் உடைய தக்கவர்கள் அனைவருக்கும், உரிய தலசிறந்த கடமையாகும்.

இப்பொறுப்பினை உர்ந்து, நமது ''திருக்கோனில்'' திங்கள் இதழில், சிறந்துயர்ந்த செவ்விய கவிதை நடையில், நமது முன்னோர்கள் இயற்றி அளித்துச் சென்ற அருமை பெருமைமிக்க தலபுராணங்களைத், தொடர்ந்து பகுதி பகுதியாக வெளியிட்டு வருதல், நலம் பயக்கும் எனக் கருதி, முதன் முதலாகத்தற்போது ''திருமயிலைப்புராணம்'' என்னும் தலபுராணத்தின் மூலம் மட்டும், செய்யுள்களின் சீர்-தளை-கடின சந்திகள் முதலியன பிரித்து, வெளியிடப் பெறுகின்றது.

—ஆசிரியர்

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept.

சங்க காலச் சைவம்

திரு. அ. மு. பரமசிவானந்தம், M.A.,M.Litt. அவர்கள்

சங்க காலம் :

தமிழ்நாட்டு வரலாறும் காலம் கடந்தது; சைவ சமய வரலாறும் காலம் கடந்தது. இரண்டையும் இணைத்துக் காலந்தோறும் சைவம் வளர்ந்த வரலாற்றை ஆராய்ந்துணர முற்படுங்கால், முதட்கண் நிற்பது சங்க காலம். சங்ககாலம் என்பது திட்டமாக வரையறுக்க இயலாவிடினும் பெரும்பாலான அறிஞர்கள், கிறித்து பிறப்பதற்குப் பின்னும் முன்னுமாக ஒருசில நூற்றாண்டுகளை அக்கால எல்லையுள் நிறுத்துவர். தமிழ்நாட்டுள் மூன்று சங்கங்கள் இருந்தன என அறிகிறோம். அவற்றுள் முதற் சங்கம் தென் மதுரையிலும், இடைச் சங்கம் கபாடபுரத்திலும் இருந்தனவாம். அந்த இரு இடங்களும் கடலால் கொள்ளப்பட்டன. கடைச்சங்கமே தற்காலத்திய மதுரையில் இருந்தது எனக் கொள்வர். நாம் இப்போது சங்ககாலம் எனக் கொள்வது அக்கடைச்சங்க காலத்தையேயாகும். அஃது இன்றைக்கு ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் ஏறக்குறைய நான்கு அல்லது ஐந்து நூற்றாண்டு புலவர்கள் பரவி விரவி வளர்த்த ஒரு காலத்தையே குறிப்பதாகும். எனவே நாம் சங்ககாலம் எனக்கொண்டது இன்றைக்கு 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஒன்றாகும். அத்துடன் சங்கம் மருவிய காலம் எனப் பெறும் சிலப்பதிகாரம் மணிமேகலை போன்ற காப்பியங்கள் தோன்றிய காலத்தையும் இதன் எல்லையிலேதான் கொள்ள வேண்டும். இக்காலத்துக்கும், அடுத்துத் தெளிவாகக் காணும் பல்லவர் காலத்துக்கும் இடையே தமிழக வரலாற்றிலேயே ஓர் இருண்ட காலம் உருவாகிறது. அந்த இருண்ட காலத் தொடக்கம் மூன்றாம் நூற்றாண்டு என்பர். எனவே நமது கால எல்லை கி.மு. மூன்றாம் நூற்றாண்டு தொடங்கிக் கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை அமைகின்றது எனக் கொள்ளலாம்.

'சிவம்' என்ற சொல்லுக்குப் பல பொருள்கள் உள்ளன. நன்மை என்பது ஒரு பொருள். முத்தி என்ற ஒரு பொருளும் உண்டு. செம்மை என்றும் சொல்லுவர். 'சிவன் எனும் நாமம் தனக்கே உரிய செம்மேனி அம்மான்' என்னும் இவனைப் பற்றிய அடியும் எண்ணத்தக்கது. எனவே, செம்மை என்பது எதுவோ, அனைத்துக்கும் அப்பாலாய் நின்று அனைத்தையும் ஆக்குவது எதுவோ, உலக உயிர்களுக்கு நன்மை தருவது எதுவோ, எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பது எதுவோ அது சிவம் எனப்படும். அச்சிவ சம்பந்தமுடையது சைவநெறி எனலாம்.

சங்ககாலச் சமயங்கள் :

சங்க காலத்திலே சைவமே தமிழ்நாட்டில் தலைசிறந்த சமயமாக இருந்தது. அதை அடுத்து வைணவம் சிறந்திருந்தது. பௌத்தமும் சமணமும் தமிழ்நாட்டில் அத்துணை விரிவடையவில்லை. சங்ககாலத்து இறுதியிலும் அதை ஒட்டிய காலத்திலுமே, பௌத்தமும் அதை அடுத்துச் சமணமும் தமிழ்நாட்டில் கால்கொள்ளத் தொடங்கின. எனவே, சங்க காலத் தமிழ்நாட்டின் சமயம் சைவம் என்று திட்டமாகக் கூறலாம். சிவனைப் பற்றியும் திருமாலைப் பற்றியும் பலவகையான கதைகளும் தோற்ற விளக்கங்களும் அக்காலத்தில் தமிழ்நாட்டில் பரவலாக நிறைந்திருந்தன. சங்க காலத்தில் சில சமயங்கள் வாழ்ந்தன என்றாலும், அவற்றுள் மாறுபாடு இல்லை. ஒற்றுமை அவற்றின் அடிப்படையில் சிறந்தது. எனவே, எந்தச் சமயத்தைச் சார்ந்து நின்ற போதிலும் அக்காலத்தில் அவர்கள் ஒற்றுமையாகவே வாழ்ந்தார்கள்.

திருமுருகாற்றுப்படையும் பரிபாடலும் :

சங்ககாலத்தில் சிவன் 'பிறவாயாக்கைப் பெரியோனாகி' முதலிடத்தில் வைத்துப்போற்றப்படுகிறான். அவனுடைய பல்வேறு சிறப்பியல்புகள் சங்க இலக்கியங்களில் நன்கு பேசப்படுகின்றன. ஆம் . சங்ககாலத்தை அறிவதற்கு அக்கால இலக்கியங்களை அன்றி வேறு சான்றுகள் நமக்குக் கிடையா. எனவே, அச்சான்றுகள் கொண்டே நாம் சங்ககாலச் சைவத்தைக் காணமுடிகின்றது. அச் சங்ககாலத்தில், பிற்காலத்தே இறைவனை முன்னிறுத்திப் பாடியதாக உள்ள தோத்திரப் பாடல்களைப்போன்ற பாடல்கள் இல்லை. திருமுருகாற்றுப்படையும் பரிபாடலில் முருகன், திருமால் ஆகிய இருவரைக் குறித்த பாடல்களும்தாம் அவ்வாறு இறைவனை முன்னிறுத்திப் பாடும் பாடல்களாக அமைகின்றன. அவற்றுள் முருகன் புகழும், திருமால் சிறப்பும் நன்கு விளக்கப்பெறுகின்றன. முருகன் தமிழ்நாட்டு ஆறுபடை வீடுகளில் தங்கியதோடன்றிக் குன்றுதோறுங் குமரனாய் 'அஞ்சல்' என்று அண்டிவருபவரை ஆதரிக்கும் வள்ளலாய்க் காட்சி தருகின்றான். பரிபாடலில் அவன்முன் நின்று அடியவர் வேண்டும் வரம், வையத்தை வாழவைக்கும் வரமாக அமைந்துள்ளது. திருமால் பரிபாடலில் ஆதி மூலமாக அனைத்தையும் தோற்றிப் படைத்துத் துடைக்கும் செல்வனாகப் போற்றப்படுகின்றான். இவ்விரு பெருங் கடவுளரையும் முன்னிறுத்தி அடியவர் வேண்டி விடுத்த விண்ணப்பங்கள் பல. நாம் ஈண்டு அவற்றையெல்லாம் ஆராயவேண்டா. திருமுருகாற்றுப்படை சைவ இலக்கியத்தொடர் வரிசையிலே பதினோராந் திருமுறையிலேயும் இடம் பெற்றுள்ளது. சைவ உலகம் அதை ஓதி உணர்ந்து உற்றதொரு பயன் கண்டுள்ளது. எனவே, இத்தகைய முன்னிறுத்திப்பாடும் இலக்கியங்களை விடுத்துப் பிற சங்க இலக்கியங்களின் வழி அக்காலச் சிவ வழிபாட்டைக் காண விழைகின்றேன்.

பிள்ளையார் :

சைவ சமயத்தைப் பற்றிப் போற்றுகின்ற அடியவர்கள் சிவன், அம்மை, முருகன், பிள்ளையார் ஆகியவர்களையே முக்கியமாகப் போற்றுவர். எனினும் பிள்ளையாரைப் பற்றிச் சங்க இலக்கியங்களில் எங்கும் குறிப்பே காணப்பெறவில்லை. ஏழாம் நூற்றாண்டில் பரஞ்சோதியாரின் வாதாபிப் படை எடுப்புக்குப் பின்பே அவர்வழிப் பிள்ளையார் வணக்கம் தமிழ்நாட்டில் நுழைந்தது என்பது ஆராய்ச்சியின் துணிபு. இலக்கியங்களிலும் முதன்முதல் ஞானசம்பந்தர் தேவாரமாகிய 'பிடியதன் உரு உமைகொள' என்ற பாட்டிலேதான் பிள்ளையார் பற்றிய குறிப்புக் காணப்படுகின்றது.

முருகப்பெருமான் :

சங்க இலக்கியங்களில் பிள்ளையார் பேசப்படவில்லையாயினும், முருகன் யாண்டும் நீக்கமற நிறைந்து காணப்படுகின்றான். திணை நிலத் தெய்வங்களுள் ஒன்றாகக் குறிஞ்சிக் கொற்றவனாக நின்று மிகப் பழங்காலத்திலேயே அவன் காட்சி வழங்குகின்றான். மஞ்சு சூழ் மலையின் இயற்கை எழில், அவன் காட்சியாக விளங்குகின்றது. மலைதொறும் மகிழ்ந்துறையும் நம் வள்ளிமணளன் அன்றே 'நம் செந்தில் மேயவள்ளி மணாளனாக' அலைவாய்க் கடற்கரையில் காட்சி தருகின்றான். எனவே, திணைநிலத் தெய்வமாக நிற்பதோடு அன்பர் மனநிறை தெய்வமாகவும் அவன் காட்சி தருகின்றான். மணவாழ்வில் புகும் பெண்டிர் தாம் விரும்பும் கணவரைப் பெற அவனடி போற்றி வணங்கியதைக் காண்கின்றோம்.

முருகன் அலைகடல் நடுவுள் பேருருக் கொண்டு நின்ற சூரனைக் கொன்றவன் என்பதையும் ,அவனைப் பெற்றவள் ஒப்பற்ற அன்னையாகிய சக்தி என்பதையும், உருத்திரங் கண்ணனார் பெரும்பாணாற்றுப்படையில் மிகவும் அழகுபடக் காட்டுகின்றார். அந்த அன்னையைச் சூழ்ந்து பூதகணங்கள் ஆடிப்பாடி அவள் புகழ்போற்றுவதையும், அதைப்போன்றே அடுத்துக் காஞ்சியில் வாழ்ந்த மன்னன் தொண்டைமான் இளந்திரையனைப்பாடினாற் பரிசு பெறலாம் எனவும் காட்டுகின்றார் அவர்.

இம்முருகன் சூரனைக் கொன்ற வரலாற்றைப் பதிற்றுப் பத்து காட்டுகின்றது. இம் முருகன் கரியமணமிக்க கடம்பமலர் அணிந்திருந்த சிறப்பைப் புறநானூறு எடுத்துக்காட்டுகின்றது. இம்முருகனைப் போற்றும் வழியறிந்து போற்றும் முறையே முருகாற்றுப்படையாகப் பின் உருப்பெற்றது என்ற உண்மையை அகநானூற்றில் 'வெறிபாடிய காமக் கண்ணியார்' அழகுபடக் காட்டுகின்றார். எனவே, முருகன் சங்ககாலத்தே கொற்றவையின் மைந்தனாக-வெற்றிவிளைக்கும் விறலோனாக விளங்கினான் என்பது நன்கு போதரும்.

சிவனும் திருமாலும் :

திருமால்வைணவசமயத்துக்குமுதற்பெருந் தெய்வமாகப் போற்றப் படினும் சிவத்தொடு இயைத்தே சைவர்கள் வழிபடுகிறார்கள். 'அரியலால் தேவி இல்லை' எனப் பிற்காலத்தே அப்பர் பாடினார். திருமலையில் உள்ள இறைவனைப் பாடிய ஆழ்வார் 'திரண்டருவி பாயும் திருமலை மேல் எந்தைக்கு இரண்டுருவும் ஒன்றாய் இயைந்து' இருந்ததென நலம் தோன்றக் காட்டுகின்றார். சைவர் கோயில்களில் திருமால் உருவமும் நிலைத்த இடம் பெற்றிருப்பதை இன்றும் காண்கிறோம். சங்க காலத்திலும் சிவனையும் திருமாலையும் சேர்த்துப் பிணைத்துப் பார்த்த பேரறிஞர்கள் வாழ்ந்திருக்கிறார்கள்.

மாலைக்காலம் மகிழ்ச்சிக்குரியது. செவ்வானம் கோடிட்டுக் கதிரவன் மறைந்த காட்சியை அழகுபடக் காட்டுகிறது. அதே வேளையில் கடல் தன் கரிய அலைகளை வீசுகின்றது. குமரிமுனையிலோ அன்றி மேலைக் கடலிலோ அமர்ந்து மாலையின் இன்பத் தோற்றத்தில் தன்னைப் பறிகொடுத்த புலவர் அதை நன்கு துய்த்து நிற்கின்றார். அப்போது அவர் உள்ளத்துச் சிவனும் திருமாலும் வந்து தோன்றுகின்றனர். செக்கர் வானம் சிவனுடைய தோற்றத்தை நினைப்பூட்டுகிறது. கரியகடல் நீலமேக நெடும்பொற்குன்றமாகிய திருமாலை நினைப்பூட்டுகிறது. இருவரும் இணைந்து நிற்கும் காட்சியும் அவருக்குத் தெரிகின்றது. இருவரும் அருந்திறல் பெற்ற கடவுளர். இருவரும் இணைந்தே உலகு புரக்கின்றனர். இத்தனையும் எண்ணிப் பார்க்கின்றார் மதுரைக் கண்ணத்தனார் என்ற பெரும் புலவர். அவர் வாய் பாடுகின்றது.

'வெருவரு கடுந்திறல் இருபெருந் தெய்வத்து
உருவுடன் இயைந்த தோற்றம் போல
அந்தி வானமொடு கடலணி கொளாஅ
வந்த மாலை'

என்றது அவர்வாய். இவ்வாறு இருபெருந் தெய்வத்தையும் இணைத்து ஒன்றிய சமய உண்மையைக் கைக்கொற்ண்டனர் சங்ககாலச் சைவர். இங்கு இருபெருந் தெய்வ நிலையைச் சத்தியும் சிவனும் இணைந்த நிலை என்று கொள்ளவும் இடமுண்டு, உமையும் கரியநிறம் உடைமையின். எனினும் கரிய உருவைத் திருமாலாகவே கொண்டு ஆழ்வார் காட்டியபடி 'இரண்டுருவம் ஒன்றாய் இயைந்து' நின்ற காட்சியைக் கொள்வதே சிறப்புடையதாகும். இவ்வாறு சிவனும் திருமாலும் இயைந்த நெறி சங்ககால நெறி.

இத் திருமால் கிடக்கும் நிலைகண்டு மேலே செல்வோம். அண்மையில் உள்ள காஞ்சியில் திருவெஃகாவில் திருமால் பள்ளி கொண்டுள்ளான். அதைக் காண்கிறார் புலவர். இயற்கையொடு கடவுள் வாழ்வு பின்னப் பெறுவது புலப்படுகிறது. பாம்புப் பாயலில் திருமால் கண் வளரும் காட்சி புலவருக்குக் கரிய மலையையும் அதன்மேல் துயிலும் யானையையும் நினைப்பூட்டுகிறது. மலைமீது காந்தள் நிறைந்துள்ளது. அந்த இயற்கை எழிலொடு திருவெஃகாவின் திருமால் காட்சியைப் புனைகின்றார். இதோ அவர் அடிகள்:

''காந்தளஞ் சிலம்பிற் களிறுபடிந் தாங்குப்
பாம்பணைப் பள்ளியுள் விமர்ந்தேன்.....''

என்றிவ்வாறு பல இடங்களில் திருமால் போற்றப்படுகின்ருர். இன்னோரனைய பல குறிப்புகளால், சங்க காலத்தில் சிவனும் திருமாலும் தமிழ் மக்களால் போற்றி வழிபடப் பற்று வந்தமை புலனாகின்றது. —தொடரும்.

திருவாசகத்தில் பக்திநெறி

டாக்டர் திரு. சோ. ந. கந்தசாமி, M.A., M.Litt., Ph.D,

(முற்றொடர்ச்சி)

பத்திநெறியில் முடிமணி :

ஈசனிடத்தில் நேசம் கொண்டவர்கள் ஆற்றும் எச்செயலும் அன்புச் செயல்களே ஆகும். உள்ளம் அன்புமயமாக உள்ள நிலையில், உயிர் எதைச் செய்தாலும் இறைவன் அதனைத் தவமாக ஏற்றுக் கொள்கிறான். சண்டீசர் செயலை இதற்கு எடுத்துக் காட்டுதல் மரபாகும். இத் திறனை, வாதவூரரும்,

'தீதில்லை மாணி சிவகருமம் சிதைத்தானைச்
சாதியும் வேதியன் தாதைதனைத் தாளிரண்டும்

சேதிப்ப ஈசன் திருவருளால் தேவர்தொழப்
பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம்'

எனவரும் திருவாசகப் பாடலில் எடுத்துரைக்கிறார். அடிகளார் அரசனுக்குரிய பொருளையெல்லாம் குதிரை வாங்காமல் திருப்பணியின் பொருட்டுச் செலவிட்டது, பொதுநிலையில் குற்றமாயினும், சித்தம் சிவமாகிய நிலையில் இறைவன் தவச் செயலாகவே ஏற்றுக் கொள்கிறான். இவ்வுண்மையினை,

'சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும்
அத்தன் கருணையினால் தோணோக்கம் ஆடாமோ'

எனவரும் திருவாசகப் பகுதி தெளிவுறுத்துகிறது. இப்பகுதிக்கு விளக்கம் தரும் வகையில் பட்டினத்துப் பிள்ளையார், ''இயன்ற பொழுதின் இட்டது மலராய்ச், சொன்னது மந்திரமாக, என்னையும் இடர்ப்பிறப் பிறப்பு எனும் இரண்டின் கடற்படாஅ வகை காத்தல்நின் கடனே'' என்று எழிலுறப் பாடுகின்றார்.

பத்தியால் பரகதி :

ஐயத்திற்கு இடமின்றி ஆண்டவனிடத்தில் அன்பினை ஒப்படைக்கும் சிலர் அனைவர்க்கும் இறைவன் வீடு பேறாகிய பரகதியைக் கொடுத்தருள்கிறான். இங்ஙனம் பத்தியின் பெருமையை மாணிக்கவாசகர் சுட்டு மிடங்களில் இரண்டினை இவண் காண்போம்.

1. ''பத்திசெய் அடியரைப் பரம்பரத் துய்ப்பவன்
(கீர்த்தி, 119).

2. ''முத்தனே முதல்வா முக்கணா முனிவா
மொட்டறா மலர்பறித் திறைஞ்சிப்
பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்
பரகதி கொடுத்தருள் செய்யும்
சித்தனே செல்வத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தம் மேவியசீர்
அத்தனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே'

இவ்வாறு பக்தர்கட்கு அருளை வைத்த பாங்கினைப் பாடிப் பரவசம் அடைகிறார் மாணிக்கவாசகர். அதனாலன்றோ அப்பர் பெருமான்,

'பத்தனாய்ப்பாட மாட்டேன் பரமனே பரமயோகீ
எத்தினால்பத்தி செய்தேன் என்னைநீயிகழ
வேண்டாம்'

என்று நெஞ்சம் கசிந்து நெக்குருகிப் பாடுகிறார். திருத்தொண்டர்களின் திறத்தினைப் பாடவந்த நம்பியாரூரர்,

'பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்'

என்று பத்திநெறியின் பாங்கினைப் பாரித்துப் பேசுகின்றார்.

ஞானமும் பக்தியும் :

வாதவூரர் சைவசித்தாந்தம் சுட்டும் நான்கு மார்க்கங்களில் ஞானநெறியில் நின்றவர். ஆனாலும் பத்திநெறியைத்தான் உய்யும் நெறியாக இறைவனே அறிவித்தானென்று கூறியுள்ள திறத்தினை முன்னர்க் குறிப்பிட்டோம். உண்மையான ஞானத்தின் விளைவு பத்தியாகத்தான் முடியும். பத்தியும் ஞானத்தைப் பயக்கும். எந்தவொரு செயலுக்கும் ஞானமும் பத்தியும் இன்றியமையாது வேண்டப்படும். ஆய்வாளர்க்குக்கூட Devotion, Dedication தேவை என்பர். வள்ளுவர் எவ்வளவு ஞானமிருந்தாலும் பத்தி இல்லையென்றால் பயனில்லையென்று சுட்டுகிறார்.

'கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்'

கீதையில், 'ஸ்ரத்தானாம் லபதே ஞானம்' என்று பரந்தாமன் பார்த்தனுக்குப் புகட்டியுள்ளார். சிரத்தை என்பது பத்தியாகும். பத்தியிலிருந்துதான் ஞானம் கிடைக்கிறது என்பதே கீதையின் சாரமாகும். தாயுமானவர் 'சிரத்தையெனும் வாளுதவி' என்று வினைப்பயனைக் களைவதற்குரிய கருவியாகப் பத்தியைச் சுட்டியுள்ளார். ஆனாலும் தாயுமானவர்,

'பத்திநெறி நிலைநின்று நவகண்டப் பூமிப்
பரப்பைவல மாக வந்தும்.....
சித்திசெய்தும் ஞானமலது கதிகூடுமோ
சித்தாந்த முத்தி முதலே'

என்று இயம்பியிருத்தலால், ஞானத்தோடு பொருந்திய பத்திநெறிதான் உய்திக்கு உதவும் என்ற உண்மை புலனாகும்.

இனி, புறச் சமயமாகிய பௌத்த நெறியில்கூட ஞானமும் பத்தியும் ஒரு நாணயத்தின்

இரண்டு பக்கத்தைப்போல்வன என்ற கருத்து காணப்படுகிறது. பௌத்தர்களுக்கு மூவகை வணக்க மரபு உண்டு: 1. புத்தசரணம், 2. தம்மசரணம், 3. சங்க சரணம், இவற்றைத் திரிசரணமென்பர். புத்தநெறியின் முதல்வ ராகிய புத்தர் பிரானையும், அவரைப்போலும் அருளாளர்களாகிய சங்கத்தாரையும் பத்தி மையால் பணிதல் இறைவனையும் அடியாரை யும் வணங்குவதற்கு ஒப்பாகும். பௌத்தத் தைத் தவிர எந்தவொரு நெறியிலும் கொள் கைக்கு வணக்கம் செய்வது என்ற கோட்பாடு காணப்பெறவில்லை. தம்மசரணம் என்பது கொள்கை வணக்கமே ஆகும். நாத்திக நெறி என்று வைதிகரால் எள்ளப்படும் புத்த நெறி யில்கூட, பத்தியின் சிறப்பு பரந்து காணப்படு கிறது. பௌத்தர்களின் வேத நூலாகக் கருதப் படும் திரிபிடகத்தில் நடுவாக உள்ளது சுத்த பிடகமாகும். சூத்திரப்பிடகம் என்பதுதான் சுத்தபிடகமாயிற்று. இப்பிடகத்தைப் பின் பற்றும் பௌத்தர்களைச் சௌத்திராந்திகர் என அழைத்தல் மரபு. இவர்களை அருணந்தி சிவனார், சிவஞானசித்தியார் பரபக்கத்தில் கண்டனம் செய்துள்ளார். பௌத்தர்களோடு வாதம் செய்தவராகக் கருதப்படும் வாதவூரடி கள், ''புத்தன் புரந்த ராதி அயன்மால் போற்றிசெயும் பித்தன்'' என்று இசைப்பதால், சிவநெறியின் பொதுநோக்கு புலப்படுகிறது. எனவே பத்திநெறி குறித்துப் புத்த நெறிக் குரிய சுத்தபிடகத்திலிருந்து ஒரு பகுதியை இங்குச் சுட்டுதல் பொருந்துவதாகும். மகா தேரர்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புக் களடங்கிய சுத்தபிடகத்தின் ஒரு பகுதியாகிய தேரகாதா என்னும் பாலி நூலில் ''இந்த அறங்களின் சிறப்பியல்புகளை அறிந்தவன் யாரோ அவனே ஞானியாகிறான். அவனே பத்திமான் என்ற பெயருக்கும் உரியவனாகி றான்'' என்று கூறப்பட்டுள்ளது. இதுகாறும் நோக்கியவற்றால் இந்தியநாட்டில் தோன்றிய அருட்செல்வர்கள் அனைவரும் பத்தியையும் ஞானத்தையும் ஒன்றனோடொன்று தொடர்பு உடையதாகவே கருதியுள்ளனர் என்பது புலனா கும்.

வெறுப்பின்மையும் அன்புடைமையும் :

''சீவபேதம் விசாரியாது எல்லா உயிர்களி டத்தும் வெறுப்பற்றவனாய் நட்புறவும் கரு ணையும் மிக்கவனே என்பத்தன்'' என்று கீதா சாரியன் பத்தனின் நல்லியல்பினை நவின்றுள் ளார். திருமுறை நூல்களின் சாரம் இதற்கு வேறுபட்டதன்று. சேக்கிழார், 'பூத பரம் பரை பொலிய' ஞானசம்பந்தர் அவதாரம் செய்த திறத்தினைப் பாடியிருத்தல் எண்ணத் தக்கது. சிவஞானசித்தியார்,

'ஈசனுக்கு அன்பில்லார் அடியவர்க்கு அன்பில்லார்
எவ்வுயிர்க்கும் அன்பில்லார் தமக்கும் அன்பில்லார்'

என்று தெளிவுறுத்துகிறது. திருவாசகம் இவ் வுண்மையின் அடித்தளத்தில் எழுப்பப் பெற்ற அருட்கோயிலே ஆகும். மேலும் இவ்வாச கத்தைப் பயிலும் அயல்நெறியினர்கூட அன்பு வசப்பட்டு ஆனந்த பரவசம் அடைகின்றனர் என்றால், இந்நூலின் பத்திச் சிறப்பிற்கு வேறு சான்றும் வேண்டுமோ?

இருவகைப் பற்றும் இன்மை :

எனது, யான் என்னும் இருவகைப் பற்றுக் களையும் களைந்தவனே என்னுடைய பக்தன் என்று கண்ணன் பகர்கிறான். இக்கருத்து எல்லாச் சமயங்களிலும் பரவலாகக் காணப்படு வதுதான். திருவள்ளுவர்கூட,

'யானெனது என்னும் செருக்கறுப்பான்வானோர்க்கு
உயர்ந்த உலகம்0புகும்'

என்று இயம்புதல் எண்ணத்தக்கது. 'யான் எனது' களைந்தவரே உண்மையான அன்பரா வார். இவ்விரண்டும் உள்ள இடத்தில் தன் னலமே குடிகொண்டிருக்கும். அது ஆன்மீக வளர்ச்சிக்குத் தடையாகும். எனவேதான், இவ்விரண்டையும் களைய வேண்டுமென்று நம்மவர்கள் கருதினார்கள். திருவாசகத்தில்,

'சாதிகுலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை அல்லலறுத் தாட்கொண்டு
பேதைகுணம் பிறருருவம் யானெனதென் னுரை
மாய்த்துக்
கோதிலமு தானானைக் குலாவுதில்லைக் கண்
டேனே'

'துன்பங் களைந்து துவந்துவங்கள் தூய்மைசெய்து'

எனவரும் பகுதிகளில் இவ்வுண்மை பதிந்திருத் தல் எண்ணத் தக்கது.

சமசித்தம் :

கீதையில், 'துன்பவின்பங்களைச் சமமாகப் பாவிக்கிறவன் என்பத்தன்' என்ற கருத்து காணப்படுகிறது. இப்பகுதியைத் துக்கத்தைச் சுகமாகப் பாவிக்கிறவன் என்னும் பொருள் செய்யலாம். துன்பத்தைக் கண்டுதான் மக்கள் துவண்டு போகிறார்கள். அதைத் தாங்கிக் கொள்ளும் வல்லமையோ அல்லது அதனை உலகியல்பு என்று நினைத்துப் பொறுத்துக் கொள்ளும் வீரமோ நம்மிடத்தில் இல்லை. யோக நூலாசிரியர்கள் 'உபேட்சாபாவனை' என்று குறிப்பிடும் சமசித்தத்தைப் பக்தர்க் குரிய இலக்கணமாகக் கீதைமொழிகிறது. பரி பாடல் உரையில் இதே பாவனையினை இகழ்ச் சியென்ற தூய தமிழ்ச் சொல்லினால் பரிமேலழ கர் சுட்டியுள்ளார். இகழ்ச்சியெனினும் பொருட்படுத்தாமை அல்லது மதியாமை எனி னும் ஒரு பொருளே. தமிழ் மறை தந்த வள்ளு வரும்,

'இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன்'

என்று அறிவுறுத்துதல் காணலாம். இருவினை ஒப்பிற்கு இத்தகைய சமசித்தம் வேண்டப்படும். மல பரிபாகத்தின்கண் இருவினையொப்பு எய்தித் திருவருட்பதிவு தோயப்பெற்ற மணி வாசகர்,

'உணக்கி லாததோர் வித்துமேல்
விளையா மல்என் வினைஒத்தபின்
கணக்கி லாத்திருக் கோலம்நீ
வந்து காட்டினாய் கழுக்குன்றிலே'

என்று பாடி இன்புறுகிறார்.

பொறுமையே பத்தியின் முடிமணி :

பொறிகளின் வயப்படாமல் பொறுமையை வளர்த்துக் கொண்ட ஒருவனே மேலான பக்தன் என்பது கீதாசாரியன் கருத்தாகும். போதிசத்துவர்க்கு உரியனவாகக் கூறப்பெற்ற பத்துவகைத் தகுதிகளில் சாந்தி பாரமிதை (பொறைநிரம்புதல்) ஒன்றாகும். தவம் என்னும் அதிகாரத்தில் வள்ளுவப் பெருந்தகை இவ்வருட் குணத்தைப் பாரித்துப் பகர்ந்துள்ளார். அரிமர்த்தனபாண்டியன் கொடுத்த தண்டனைகளைச் சகித்துக்கொண்ட மணிவாசகர் பொறையின் திருவுருவமாக விளங்குகிறார்.

மனநிறைவும் உறுதிப்பாடும் :

எப்பொழுதும் மனநிறைவு கொண்டவராயும், உறுதிபடைத்த உள்ளம் உடையவராயும் இருப்பவரே உண்மையான பக்தராவர் என்பது, கீதையின் முடிபாகும். மாணிக்க வாசகர் இவ்விலக்கணத்திற்கு முற்றிலும் பொருந்திய முதுஞானியாகத் திகழ்கிறார். திருவெம்பாவையில்,

'எங்கெழிலென் ஞாயிறு எமக்கு'
'யாமார்க்கும் குடியல்லோம் யாதும் அஞ்சோம்'

என்று வரும் பகுதிகள் இவ்வுண்மையை உறுதிப்படுத்தும். இத்தகைய பத்தரே சீவன் முத்தரெனப் போற்றத்தக்கவர்.

கரணங்களை ஒப்படைத்தல் :

'தன்னிடத்தில் மனம் புத்தியாகிய அந்தக் கரணங்களை ஒப்படைத்தவனே தனக்கு விருப்பமுடைய பக்தன்' என்று கீதாசாரியன் கூறுகிறான். குழைத்தபத்தில்,

'அன்றே யென்றன் ஆவியும்
உடலும்உடைமை யெல்லாமும்
குன்றே அனையாய் யென்னையாட்
கொண்டபோதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ
யெண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே'

என்று, மணிவாசகர் அகக் கரணம் புறக்கரணம் ஆகியவற்றுடன் ஆவியாகிய தன்னையும், தனக்குரியனவற்றையும் இறைவனுக்கே ஒப்படைத்த திறனைக் காண்கிறோம்.

ஆவி, உடல், உடைமை என்ற வரிசையில் முதலில் மிக மேம்பட்ட பொருளையும் பின் அடுத்தடுத்துப் புறத்தே உள்ள பொருள்களையும் ஒப்படைத்த அன்புத் திறத்தினைப் பார்க்கிறோம். எனவே மேலான பத்தராக இவர் விளங்குகின்றார். இவ்வனுபவத்தினைத் தாயுமானவரும் 'எல்லாமுன் னடிமையே எல்லாமுன் உடைமையே' என்று அருளியிருத்தலும் அறிந்து இன்புறத்தக்கது.

பாகவதம் தரும் விளக்கம் :

திருமாலின் சிறப்புக்களை விரித்துக்கூறும் வடமாழிப் புராண நூல்களில் பாகவதம் தலைமை சான்றது. இந்நூலில் ஆழ்வார்களைப் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. பக்தி தெற்கிலிருந்து தான் வடநாடு நோக்கிச் சென்றது என்னும் குறிப்பும் இந்நூலில் உண்டு. இன்னோரன்ன காரணங்களினால், பாகவதம் தென்னாட்டவரால் தான் எழுதப்பட்டிருத்தல் வேண்டும் என்று, இந்தியத் தத்துவ வரலாற்றுப் பேராசிரியர் எஸ்.என். தாஸ்குப்தா ஆராய்ந்து உணர்த்தியுள்ளார்.

—தொடரும்.

எங்ஙனே செயினும் ஏற்கும் உகந்து :

உண்மையான இறைவன் அடியார்கள், எவ்வளவு பெரிய பதவியையும் செல்வத்தையும் ஒரு பொருட்டாக மதிக்க மாட்டார்கள். பிரம்ம அண்டச் செல்வம் என்பது, நம் போன்ற உலக மக்களுக்கு மிகப் பெரியதாகத் தோன்றலாம். ஆனால் அடியவர்களோ, இவற்றையெல்லாம் மிகவும் அற்பமாகவே கருதிப் புறக்கணித்தொழிப்பார்கள். பிரம்ம அண்டச் செல்வமும், அடியவர்களின் உள்ளத்தை ஒருபோதும் ஆசைதோற்றிக் கலக்கவல்லதன்று. மிகப் பெரிய எல்லையற்ற கடலை, ஓர் அற்பமான எளிய மீன் எவ்வளவுதான் மேலும் கீழும் எழுந்து விழுந்து முயன்றாலும், கலக்குதல் இயலுமோ? ஒருபோதும் இயலாது. தத்துவ ஞானம் நிறைந்த அடியவர்களின் உள்ளமாகிய பெருங்கடலை, பிரம்மாண்டச் செல்வம் ஆகிய அற்பமான சிறிய மீன் எங்ஙனம் கலக்குதல் இயலும்?

புண்டரிகை கேள்வன் அடியார்அப், பூமிசையோன்
அண்டம் ஒருபொருளா ஆதரியார்:—மண்டி
மலங்க ஒரு மீன்புரண்ட மாத்திரத்தால், ஆர்த்துக்
கலங்கிடுமோ முந்நீர்க் கடல்?

—ஞானசாரம்.

[புண்டரிகம்—தாமரை. புண்டரிகை—தாமரை மலர்மேல் வீற்றிருக்கும் திருமகள். கேள்வன்-கணவன். பூமிசையோன்—பிரமன். ஆதரியார்—மதிக்கமாட்டார். முந்நீர்—ஆற்றுநீர் ஊற்றுநீர் மழைநீர் என்னும் மூன்று நீர்களையுடைய.]

—ஆசிரியர்.

தொண்டைநாட்டுத் திருமால் தலங்கள்

முன்னுரை :

நமது இந்தியப் பிரதேசம் உலகிலேயே மிகவும் ஒப்புயர்வற்ற சிறப்புடையது. பிற தேசங்களை நோக்க, நமது இந்தியப் பாரத நாடு மிகவும் புண்ணிய பூமியாகும். தொன்று தொட்டுப் பெரியவர்கள் பலரும் இதனை உணர்ந்து வற்புறுத்தியிருக்கின்றார்கள். வினைப் பயன்களை நுகரவும், இறையருளைப் பெறவும், பெருந்தகைமை, கொடைவண்மை, தூய்மை, அமைதி, உள்ளொளி, ஆன்மிகம் முதலிய உரிய குணநலங்களைப் பெறவும், இப் புண்ணிய பூமியிற் பிறப்பது பெருந்துணை புரிகின்றது. எனவே, தேவர்களும்கூட, இப்புண்ணிய பூமியில் வந்து பிறக்க விரும்புகின்றனர் என்கின்றார் மணிவாசகர். இங்ஙனம் விண்ணுலகத்துத் தேவர்களும் மண்ணுலகிற் போந்து வழிபட்டுள்ள தலங்கள் எண்ணில்லாத பல, நம் பாரத தேசத்திலும் தமிழ்நாட்டிலும் உள்ளன.

அத் தெய்வத் திருத்தலங்களின் பெருமையை அறிந்து கொள்ளவும், அங்கெல்லாம் சென்று கண்டு இறைவனைத் தரிசித்து வழிபட்டு உய்யவும், நாம் முயலுதல் வேண்டும். தெய்வத் திருத்தலங்களின் சிறப்பும், தல வழிபாட்டின் மேன்மையும் நாம் பெரிதும் உணர்ந்து போற்றுதற்குரியன. ஆழ்வார்களும், நாயன்மார்களும் தலயாத்திரை செய்து, தலங்கள் தோறும் சென்று, இறைவனைப் பாடிப் பரவி வழிபட்டு மகிழ்ந்திருக்கின்றனர். அத்தகைய அருளாளர்களும் ஞானிகளுமே, தலயாத்திரையையும், தல வழிபாட்டையும் இன்றியமையாப் பெருஞ்சிறப்பியற்கடமையாகக் கருதிக் கடைப்பிடித்திருக்கின்றனர் என்றால், நம்மனோர்க்கெல்லாம் தலவழிபாடு எவ்வளவு முதன்மை வாய்ந்தது என்பதனைச் சொல்ல வேண்டுவதில்லை.

தலயாத்திரை :

தலயாத்திரையும் வழிபாடும் மேற்கொள்ளுவதனால், நாம் எய்தும் நலங்களுக்கு அளவேயில்லை. துன்பமும் துயரமும் நிறைந்த இவ்வுலகில், நம்முடைய குறுகிய வாழ்நாளில் நாம் அடையக்கூடிய ஏதோ ஒரு சில இன்பங்களில் உண்மையானதும், உயர்ந்ததும், ஒப்புயர்வற்றதும் தலயாத்திரைகளால் பெறும் இன்பமே எனலாம். தலயாத்திரையால் நாம் நம் கவலைகளை மறக்கின்றோம். நம் மாசுகள் அகன்று ஓரளவேனும் புனிதம் அடைகின்றோம். காணாத இடங்களையும் காட்சிகளையும் கண்டுகளிக்கின்றோம். கேளாத செய்திகள் பலவும் கேட்டுணர்ந்து கிளர்ச்சியும் வளர்ச்சியும் பெறுகின்றோம்.

நாட்டின் பல பகுதிகளில் உள்ள பல மக்களைக்கண்டு பழகி, நாட்டு வளப்பங்களை அறிந்து கொள்ளுகின்றோம்.

இறைவழிபாட்டால் நம் உள்ளமும் உணர்வும் புத்துணர்ச்சியும் எழுச்சியும் பெறுகின்றன. நம் உள்ளம். விரிவடைகின்றது. உணர்வு பண்படுகின்றது. இறையருளும் பக்தியும் படிமுறையே நம்மிடம் வளர்ந்து ஓங்குகின்றன. நாம் நம் முன்னோர்களுடைய அருமை பெருமைகளையும், அழகிய வரலாறுகளையும், அரும்பெரும் செயல்களையும் கண்டும் உணர்ந்தும் களிப்புறுகின்றோம்.

மனிதன் ஒருவன் எய்துதற்காம்
　　வாழ்வின் இன்பம் பலவற்றுள்
புனித நமது பாரதத்திற்
　　பொலியும் திவ்விய தேசங்கள்
எனும்நற் றலங்கள் கண்டுதொழும்
　　இன்பிற் சிறந்த தொன்றில்லை;
நனிநன் றுயர்ந்த அப்பேற்றை
　　நலமே அடைய முயன்றுய்வோம்! (1)

பொங்குநற் பக்தி வெள்ளப்
　　புணரியில் திளைத்து மூழ்கி
நன்குயர் ஆழ்வார் கள்தாம்
　　நலமிகப் பணிந்தி றைஞ்சி
மங்களா சாச னம்செய்
　　வைணவத் தலங்கள் யாவும்
இங்குநாம் கண்டு போற்றல்
　　இனியநற் கடமை யாகும். (2)

ஆழ்வார்களும் நாயன்மார்களும் போன்ற அருட் சான்றோர்கள் பாடிய சிறந்த திருத்தலங்களுக்குச் சென்று தரிசிக்குங்கால், நமக்கும் அவர்களின் அருளாற்றால் ஓரளவு பதிகின்றது. காலமும் இடமும் வேறுபட்டுக் கடந்திருப்பினும், நாம் அவர்களோடு மானதத் தொடர்பு கொள்ளுகின்றோம். அவர்களை நாம் நேரே காண இயலாவிட்டாலும், அவர்களின் தொடர்பு பெற்ற தலங்களையும் கோயில்களை

யும் காணுகின்றபோது, ஒரு வகையில் அவர்களை நேரே காண்பது போன்ற உணர்ச்சியும் மகிழ்ச்சியும் நமக்கு ஏற்படுகின்றன.

திவ்விய தேச யாத்திரை செய்தலின் சிறப்பைத் திருமங்கையாழ்வார் ''பதியே பரவித்தொழும் தொண்டர் தமக்குக் கதியே'' என்பதனால் இனிது விளக்குகின்றார். ''கண்டியூர் அரங்கம் மெய்யம் கச்சிபேர் மல்லைஎன்று மண்டினார் உய்யலல்லால் மற்றையார்க்கு உய்யலாமே?'' என்பதனால் திவ்விய தேசங்களில் ஈடுபடாதவர்களுக்கு உய்யும் வழி இல்லை என்றும் அவ்வாழ்வார் அருளிச் செய்கின்றார்.

ஆதலின் பொய்கையாழ்வார் முதலாகத் திருமங்கையாழ்வார் முடிவாக உள்ள ஆழ்வார்கள் பதின்மரும், பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண் கொடியான ஆண்டாளும் பாடிய திவ்வியப் பிரபந்தங்களில் மங்களாசாசனம் செய்யப் பெற்றுள்ள நூற்றெட்டுத் திவ்விய தேசங்கள் பற்றிய சிலகுறிப்புகள், இங்கே தொகுத்துத் தரப்படுகின்றன.

தொண்டை நாடு :

(1) திருக்கச்சி அத்தியூர் :

இது செங்கற்பட்டு-அரக்கோணம் இருப்புப்பாதையில் உள்ள காஞ்சிபுரம் என்னும் நகரத்தின் ஒரு பகுதியாகிய, சிறிய காஞ்சிபுரத்தில் உள்ள வரதராசப்பெருமாள் கோயில். இங்கு உள்ள எம்பெருமானுக்குத் தேவராசன், தேவப்பெருமாள், பேரருளாளன் முதலிய பெயர்களும் வழங்கும். மேற்கே திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம். பெருந்தேவித் தாயார், புண்ணியகோடி விமானம். அனந்த தீர்த்தம், வேகவதி நதி. பிருகு, நாரதர், பிரம்மா, அனந்தாழ்வார், கஜேந்திரன் முதலியவர்களுக்குப் பிரத்தியட்சம். பாசுரங்களில் பொதுவாகக் கச்சி என்று குறிக்கப்படும் இடங்களில் இத்தலமே கொள்ளப்படும். கோயில் (திருவரங்கம்), திருமலை (திருவேங்கடம்), பெருமாள்கோயில் (அத்தியூர்) என்னும் முக்கிய வைணவத் தலங்கள் மூன்றனுள், இஃது ஒன்று. ஐராவதம் என்னும் யானையே மலை வடிவம் கொண்டு இங்குப் பெருமாளைத் தாங்கியதனால், இது அத்திகிரி என்றும், அத்தியூர் என்றும் பெயர் பெற்றது. இந்த அத்திகிரியை உத்தரவேதியாகக் கொண்டு பிரமதேவர் அசுவமேதயாகம் செய்ய, அதில் தோன்றிய புண்ணியகோடி விமானத்தில் பெருமாள் எழுந்தருளி வரம்கொடுத்தபடியால், வரதராசப் பெருமாள் என்ற சிறப்புக் காரணப் பெயர் ஏற்பட்டது. அத்திகிரியின் அடிவாரத்தில் அழகிய சிங்கப்பெருமாள் எழுந்தருளி இருக்கின்றார். மிகவும் சிறந்த பெரிய புகழ்பெற்ற கோயில்.

''அத்தியூ ரான்புள்ளை யூர்வான், அணிமணியின்
துத்திசேர் நாகத்தின் மேல்துயில்வான், —முத்தீ
மறையாவான், மாகடல்நஞ் சுண்டான் தனக்கும்
இறையாவான் எங்கள் பிரான்''—பூதத்தாழ்வார்.

''சிறந்தஎன் சிந்தையும் செங்கண் அரவும்
நிறைந்தசீர் நீள்கச்சி யுள்ளும் ,-உறைந்ததுவும்,
வேங்கடமும் வெஃகாவும் வேளுக்கைப் பாடியுமே
தாங்கடவார் தண்துழா யார்.
—பேயாழ்வார்.

(2) திருஅட்டபுயகரம் :

இது செங்கற்பட்டு-அரக்கோணம் கிளை இருப்புப்பாதையில், காஞ்சிபுரம் நிலையத்திலிருந்து ஒரு கல் தொலைவில், ஆடிசன்பேட்டைத் தேரடிக்கு அருகில் உள்ளது. ஆதிகேசவப்பெருமாள், மேற்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், அலர்மேல் மங்கைத் தாயார், ககன ஆகிருதிவிமானம், கஜேந்திர புஷ்கரிணி, சரபன் என்னும் அசுரனுடன் போர் செய்யப் பெருமாள் அட்ட புயங்களைத் தரித்தகோலம். கஜேந்திரனுக்குப் பிரத்தியட்சம். பேயாழ்வார், திருமங்கையாழ்வார் மங்களாசாசனம். அஷ்டபுஜம் ,அஷ்டபுயங்கம் எனவும் வழங்கும்.

தொட்ட படைஎட்டும் தோலாத வென்றியான்
அட்ட புயகரத்தான் அஞ்ஞான்று-குட்டத்துக்
கோள்முதலை துஞ்சக் குறித்தெறிந்த சக்கரத்தான்
தாள்முதலே நங்கட்குச் சார்வு.
—பேயாழ்வார்.

(3) திருத்தண்கா :

இது காஞ்சிபுரம் நிலையத்தில் இருந்து 2 கல் தொலைவில் உள்ளது. விளக்கொளிப் பெருமாள் கோயில் என வழங்கும், சிலர் 'விளக்கடிகோயில்' எனக் தவறாக வழங்குவர். விளக்கொளிப்பெருமாள், தீபப்பிரகாசன், திவ்வியப்பிரகாசன். மேற்கே திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம். மரகதவல்லித்தாயார், ஸ்ரீகரவிமானம், சரசுவதி தீர்த்தம். சரசுவதி தேவிக்குப் பிரத்தியட்சம். வேதாந்த தேசிகர் என்னும் வைணவ சமயப் பெருஞ் சான்றோர் திருவவதாரம் செய்த தலம்.

பொன்னை மாமணியை அணி ஆர்ந்ததோர்
மின்னை வேங்கடத் துச்சியிற் கண்டுபோய்
என்னை ஆளுடை ஈசனை எம்பிரான்
தன்னை, யாம் சென்று காண்டும் தண் காவிலே

(4) திருவேளுக்கை :

இது காஞ்சிபுரம் நிலையத்தில் இருந்து 2 கல் தொலைவில், ஓர் ஏரியின் நடுவில் பூசையின்றி, உள்ளது. ''வேள் இருக்கை'' என்னும் இரு சொற்கள் வேளுக்கை என்று மருவியது. வேள்-விருப்பம். இறைவன் விரும்பி எழுந்தருளி இருக்கும் இடம் என்பது பொருள். முகுந்தநாயகர் கோயில் என வழங்கும். கிழக்கே திருமுக மண்டலம். நின்ற திருக்கோலம். கனக விமானம், கனக தீர்த்தம். முசுகுந்த அரசனுக்கும் பிருகுமுனிவருக்கும் பிரத்தியட்சம். பேயாழ்வார், திருமங்கையாழ்வார் மங்களாசாசனம்.

''மன்னும் மதிட்கச்சி வேளுக்கை ஆளரியை
மன்னிய பாடகத்தெம் மைந்தனை''
—திருமங்கையாழ்வார்.

(5) திருப்பாடகம் :

இது காஞ்சிபுரத்தில் உள்ளது. பாண்டவ தூதர் கோயில் என வழங்கும். கண்ணபிரான் பாண்டவர்களின் பொருட்டுத் துரியோதன னிடம் அத்தினாபுரிக்குத் தூது சென்றபோது, அவன் வஞ்சகமாக அமைத்த ஆசனத்தில் இருந்து விசுவரூபம் எடுத்தநிலையில், மிகவும் பெருமை தோன்ற இருக்கும் தலம். பாடு-பெருமை, பாடு அகம்-பாடகம். பாண்டவ தூதர், கிழக்கே திருமுக மண்டலம், வீற்றிருக்கும் கோலம், உருக்குமிணி, சத்தியபாமை, பத்திர விமானம், மச்சதீர்த்தம், ஜனமேஜய மகா ராசனுக்கும், அரித மாமுனிக்கும் பிரத்தியட்சம், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசை யாழ்வார், திருமங்கையாழ்வார் மங்களாசாச னம்.

கல்லார் மதிள்சூழ் கச்சி
நகருள் நச்சிப் பாடகத்துள்
எல்லா உலகும் வணங்க
இருந்த அம்மான் இலங்கைக்கோன்
வல்லாள் ஆகம் வில்லால்
முனிந்த எந்தை விபீடணற்கு
நல்லா னுடைய நாமம்
சொல்லில் நமோநா ராயணமே
—திருமங்கையாழ்வார்.

(6) திருநீரகம் :

இது காஞ்சிபுரத்தில் உள்ளது. ஜகதீசப் பெருமாள் சந்நிதியென வழங்கும். ஜகதீசன், கிழக்கே திருமுக மண்டலம். நின்ற திருக்கோலம், நீலமங்கைவல்லி நாச்சியார், ஜகதீச விமானம், அக்ரூரதீர்த்தம், அக்ரூரர்க்குப் பிரத்தியட்சம். இது உலகளந்த பெருமாள் கோயிலின் உள்ளே உள்ள திவ்விய தேசங்க ளுள் ஒன்று. என்றும் பதினாறாக நீண்ட ஆயுள்பெற்ற மார்க்கண்டேயர் பிரளயக் காட்சியைக் காணவேண்டித் தவம் புரிந்து அவ்வாறே அருள் பெற்றது.

நீரகத்தாய்! நெடுவரையின் உச்சி மேலாய்!
நிலாத்திங்கள் துண்டத்தாய்! நிறைந்த கச்சி
ஊரகத்தாய்! ஒண்துறைநீர் வெஃகா உள்ளாய்!
உள்ளுவார் உள்ளத்தாய்! உலகம் ஏத்தும்
காரகத்தாய்! கார்வானத் துள்ளாய்! கள்வா!
காமருபூங் காவிரியின் தென்பால் மன்னும்
பேரகத்தாய்! பேராதென் நெஞ்சின் உள்ளாய்!
பெருமான்உன் திருவடியே பேணி னேனே!
—திருமங்கையாழ்வார்.

(7) நிலாத் திங்கள் துண்டம் :

இது காஞ்சிபுரம் ஏகாம்பரேசுவரர் கோயிலில் உள்ளது. 'நிலாத் திங்கள் துண்டத்தான்' எனத் திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்டுள்ளது. மேற்கே திருமுக மண்டலம். நின்ற திருக்கோலம், நேரொருவர் இல்லாவல்லித்தாயார், புருஷ சூக்த விமானம். சந்திர புஷ்கரிணி, சிவனுக்குப் பிரத்தியட்சம்.

(8) திருவூரகம் :

இது காஞ்சிபுரத்தில் உள்ளது. உலகளந்த பெருமாள் கோயில் என வழங்கும். மாவலிச் சக்கரவர்த்தியிடம் சென்று மூவடி நிலம்கேட்டுத் திரிவிக்கிரம அவதாரம் எடுத்து மூவுலகங்களையும் அளந்த நிலை. உலகளந்த பெருமாள்-மேற்கே திருமுக மண்டலம். நின்ற திருக்கோலம். அமுதவல்லி நாச்சியார், சார ஸ்ரீகர விமானம், சேட தீர்த்தம், உரகம் என்னும் ஆதிசேடனுக்குப் பிரத்தியட்சம். உரகம் என்னும் சொல் நீண்டு ஊரகம் என்று மருவியது. ஊரகம் என்னும் இந்த ஒரு திவ்விய தேசத்திலேயே திருநீரகம், திருக்காரகம், திருக்கார்வானம் என்னும், வேறுமூன்று திவ்வியதேசங்களும்கூட இருக்கின்றன. ''உரகம்'' என்னும்சொல், ஊரகம் என நீண்டது. உரகம்-பாம்பு. ஆதிசேடன் வழிபட்ட தலம். உரகம் வழிபட்டு அருள் பெற்றதனால், ஊரகம் என வழங்குகின்றது. இக்கோயிலிலேயே, திருக்குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகர், பட்டராக இருந்து பணிபுரிந்து வந்ததாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

(9) திருவெஃகா :

இது காஞ்சிபுரத்தில் உள்ளது. யதோக்த காரி சந்நிதி என வழங்கும். இத்தலத்து எம்பெருமானுக்கு வேகாஸேது என்று வடமொழியில் பெயர். அதன் ஒரு பகுதியாகிய ''வேகா'' என்பது ''வெஃகா'' என்று ஆயிற்று. பெருமாள் சரசுவதி தேவிக்குத் தாம் சொல்லியபடி அருள் செய்தமையினாலும், திருமழிசை யாழ்வாரின் சீடராகிய கணிகண்ணர் என்பவர் ''பைந்தநாகப்பாய் சுருட்டிக் கொள்'' என்று சொல்லிய வண்ணம் கேட்டு நடந்து அருள் புரிந்தமையினாலும், இவருக்குச் சொன்னவண்ணம் செய்த பெருமாள் எனப் பெயர் ஏற்பட்டது என்பர். பொய்கையாழ்வார் அவதரித்த தலம். பொய்கையாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார், மங்களாசாசனம்.

நின்றது எந்தை ஊரகத்து
இருந்தது எந்தை பாடகத்து,
அன்று வெஃகணைக் கிடந்தது
என் இலாத முன்எலாம்,
அன்றுநான் பிறந்திலேன்
பிறந்தபின் மறந்திலேன்,
நின்றதும் இருந்ததும்
கிடந்ததும் என் நெஞ்சுளே.

(10) திருக்காரகம் :

இது காஞ்சிபுரம் உலகளந்தபெருமாள் கோயிலின் தெற்குப் பிராகாரத்தில் உள்ள திவ்விய தேசம். கருணாகரன், தெற்கே திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம், பத்மாமணி நாச்சியார், வாமன விமானம், அக்ராயதீர்த்தம், காரகமுனிவர்க்குப் பிரத்தியட்சம். திருமங்கை யாழ்வார் மங்களாசாசனம்.

''காரகத்தாய்! கார்வானத்துள்ளாய்' கள்வா!''
(2059)

(11) திருக்கார்வானம் :

இதுவும் காஞ்சிபுரம் உலகளந்த பெருமாள் கோயிலுக்குள்ளே உள்ளது. நவநீத

சோரன். கமலவல்லி நாச்சியார். மேற்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், புஷ்பக விமானம், கௌரி தடாகம், பார்வதிக்கும், மகாபலி, அசுவத்தாமன் ஆகியோருக்கும் பிரத்தியட்சம். திருமங்கையாழ்வார் மங்களாசாசனம்.

''காரகத்தாய்! கார்வானத் துள்ளாய்! கள்வா''

(12) திருக்கள்வனூர் :

இது காஞ்சிபுரம் காமாட்சியம்மை கோயிலுக்குள் இருக்கின்றது. ஆதிவராகப் பெருமாள், மேற்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம். அபயநாயகி நாச்சியார், வாமன விமானம், நித்திய புஷ்கரிணி. அசுவத்த நாராயணனுக்குப் பிரத்தியட்சம். பூமியைச் சுருட்டிப் பாதாளத்துக்கு எடுத்துச் சென்ற இரணியாக்கனை வதைத்துப் பூமியை மீட்டருளிய நிலை. திருமங்கையாழ்வார் மங்களாசாசனம்.

''காரகத்தாய்! கார்வானத் தாய்! கள்வா!''

(13) திருப்பவளவண்ணம் :

பெரிய காஞ்சிபுரத்தில் உள்ளது. பவள வண்ணப் பெருமாள்-பவளவல்லிநாச்சியார், பிரவாள விமானம் - சக்கரதீர்த்தம்-மேற்கே திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம்-அசுவினி தேவர்களுக்குப் பிரத்தியட்சம். திருமங்கையாழ்வார் மங்களா சாசனம். இக்கோயிலுக்கு அருகில் பச்சைவண்ணர் கோயில் இருக்கின்றது.

பங்கயத்தாய்! பாற்கடலாய்! பாரின்மேலாய்!
பனிவரையின் உச்சியாய்! பவள வண்ணா!
எங்குற்றாய் எம்பெருமான்! உன்னை நாடி
ஏழையேன் இங்ஙனமே உழிதர் கேனே (2060)

(14) திருப்பரமேச்சுவர விண்ணகரம் :

இது காஞ்சிபுரத்தில் உள்ளது. வைகுண்ட பெருமாள் கோயில் என வழங்கும். பரமேச்சுவரவர்மன் என்னும் பல்லவ மன்னன் அமைத்த விஷ்ணு கோயில் ஆதலின், இதற்குப் பரமேச்சுவர விண்ணகரம் என்று பெயராயிற்று. விண்ணகரம் என்பது, விஷ்ணு கிரகம் என்பதன் மரூஉ ஆகும். இக்கோயிலில் பல்லவ வரலாற்றுச் சிற்பங்கள் நிரம்பிக் காணப்படுகின்றன. பரமபதநாதன் - மேற்கே திருமுகமண்டலம்-வீற்றிருந்த கோலம், வைகுந்த வல்லித்தாயார்-அமுதவிமானம், கயிரவ தீர்த்தம், மேல்தளத்தில் சயனக்கோலமும், அதற்குமேல் தளத்தில் நின்ற திருக்கோல உருவமும் உள்ளன. சனகாதிகளுடைய சாபம் அடைந்து, வைகுந்த உலகத்தில் துவாரபாலகர்களாகிய சயர், விசயர் என்னும் இருவரும், பல்லவன் வில்லவன் என்னும் அரச குமாரர்களாய் உதித்து அரசாட்சி செய்து வருங்கால், இங்கு மகாவிஷ்ணுவைப் பூசித்து அருள்பெற்றனர் என்பது வரலாறு. திருமங்கையாழ்வார் மங்களாசாசனம்.

பல்லவன் வில்லவன் என்றுலகில்
பலராய்ப்பல வேந்தர் வணங்குகழற்
பல்லவன் மல்லையர்கோன் பணிந்த
பரமேச்சுர விண்ணகரம் அதுவே (1128-1137)

(15) திருப்புட்குழி :

இது செங்கற்பட்டு-அரக்கோணம் கிளை இருப்புப்பாதையில், காஞ்சிபுரத்திற்கு 7 கல் தொலைவில் உள்ளது. விசயராகவன்-கிழக்கே திருமுகமண்டலம், வீற்றிருந்த திருக்கோலம்-மரகதவல்லித்தாயார். விசயகோடி விமானம். சடாயு தீர்த்தம். சீதாப்பிராட்டியை எடுத்துச் சென்ற இராவணனை எதிர்த்து, கழுகரசனாகிய சடாயு சிறகு இழந்து வருந்த, அவ்வழியே சீதையைத் தேடி வந்த இராமபிரான் சடாயுவினால் சீதையை இராவணன் தூக்கிச் சென்ற செய்தியை அறிந்து, சடாயுவைத் தன் கரத்தால், குழிதோண்டித் தகனம் செய்து முத்தியளித்த தலம். திருமங்கையாழ்வார் மங்களாசாசனம். 'திருப்புள்' என்பது இங்கு சடாயு என்னும் பறவையைக் குறித்தது.

'அலங்கெழு தடக்கை ஆயன்வாய் ஆம்பற்கு
அழியுமால் என்உள்ளம்! 'என்னும்
புலங்கெழு பொருநீர்ப் புட்குழி பாடும்
போதுமோ நீர்மலைக்கு என்னும்

(16) திருநின்றவூர் :

இது சென்னை-அரக்கோணம் இருப்புப் பாதையில் உள்ளது. 'தின்னனூர்' என்று வழங்குகின்றது. பக்தவத்சலம், வருணவரதன், பக்தர் ஆவிப்பெருமாள், கமலவல்லித்தாயார் என்னைப் பெயர் பெற்ற தாயார், ஸ்ரீநிவாச விமானம். பழைய பாலாறு நதி. கிழக்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், தருமத்துவசன் என்னும் சூரியகுலத்தரசன் பூசித்துத், தான் இழந்த நாட்டை மீளவும் பெற்றான். வருணதேவனுக்குப் பிரத்தியட்சம். திருமங்கையாழ்வார் மங்களாசாசனம்.

நீண்டஅத்தக் கருமுகிலை, எம்மான் தன்னை
நின்றவூர் நித்திலத்தைத் தொத்தார்சோலை
(1089)

நின்றவூர் நின்ற நித்திலத் தொத்தினை..
கண்ண மங்கையுட் கண்டுகொண்டனே (1642)

(17) திருஎவ்வுளூர்

சென்னை-அரக்கோணம் இருப்புப்பாதையில், 'திருவள்ளூர்' என வழங்கும் இடத்தில் உள்ள திவ்விய தேசம், வீரராகவப்பெருமாள், திருஎவ்வுள் கிடந்தான். கிழக்கே திருமுக மண்டலம், சயனத்திருக்கோலம். கனகவல்லித்தாயார் (வசுமதி), விசயகோடி விமானம், இருத்தாபநாசந தீர்த்தம். வீக்ஷாரண்யம், மக்ஷகாரண்யம் (ஈக்காடு). சாலிகோத்திர முனிவருக்குப் பிரத்தியட்சம். பிரத்தியும்நன் என்னும் அரசன் தவம்புரிந்து புத்திரப்பேறு அடைந்த தலம். சண்டாள சாங்கத்தியம் செய்த கவுசிகன் என்னும் அந்தணன், இந்தத் தலம் அடைந்து, இருத்தாபநாசநதீர்த்தத்தில் மூழ்கி, திருஎவ்வுட்கிடந்தானைச் சேவித்து, நாராயண தியானபரனாய் மரணம் அடைந்து பரமபதம் சேரப் பெற்றான். அருகில் உள்ள ஈக்காடு என்னும் இடத்தில் இருந்த தருமசேனன் என்னும் அரசனிடம் அவதரித்துக் கனகவல்லித் தாயார் என்று பெயரிடப் பெற்று

வளர்ந்த இலட்சுமிதேவியார், தக்க பருவம் அடைந்த போது அவ்வரசனால் வீரராகவப் பெருமாளுக்குச் சமர்ப்பிக்கப்பட்டாள். தை அமாவாசை இங்கு மிகவும் விசேடம். திரு மங்கையாழ்வார் மங்களாசாசனம். சாலி கோத்திர முனிவரை இறைவன் தாம் 'சயனிப் பதற்கு எவ்வுள்?' என்பது, திருவள்ளூர் என மருவியது.

நாகத் தணைக்குடந்தை, வெஃகா, திருஎவ்வுள்,
நாகத் தணையரங்கம் பேரன்பில்-நாகத்து
அணைப்பாற் கடல்கிடக்கும் ஆதி நெடுமால்
அணைப்பார் கருத்தன்ஆ வான் (3519)

என்னுடைய இன்னமுதை எவ்வுள் பெருமலையை (3815)

முன்ஓர் தூது வானரத்தின்
வாயில் மொழிந்து, அரக்கன்
மன்ஊர் தன்னை வாளியினால்
மாள முனிந்து, அவனே
பின்ஓர் தூது, ஆதிமன்னர்க்கு
ஆகிப் பெருநிலத்தார்
இன்னார் தூதன் எனநின்றான்
எவ்வுள் கிடந்தானே (1058-1067

(18) திருநீர்மலை :

சென்னை-தாம்பரம் இருப்புப் பாதையில் உள்ள, பல்லாவரம் என்னும் இடத்தில் இருந்து 3 கல் தொலைவில் உள்ளது. உந்தூர்தியுண்டு, மலையடிவாரத்தில் நீர்வண்ணர், நீலமுகில் வண்ணர். கிழக்கே திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம். அணிமாமலர்மங்கை நாச்சியார், மணிகர்ணிகைத் தீர்த்தம். தோயகிரி விமானம், மலையின் மேல் அரங்கநாதர், தெற்கே திரு முகமண்டலம், சயனத்திருக்கோலம், திருரங்க நாயகித்தாயார். தொண்டைமான் சக்கர வர்த்தி, பிருகுமுனிவர், மார்க்கண்டேயர் ஆகி யோர்க்குப் பிரத்தியட்சம். நின்றான் இருந் தான் கிடந்தான் சந்நிதிகளும் இங்கே உண்டு. பூதத்தாழ்வார் திருமங்கையாழ்வார் மங்களா சாசனம். இதற்குத் தென்மேற்கில் பிரகலா தாழ்வாருக்குப் பிரத்தியட்சமான சாந்த நர சிம்மசுவாமி வீற்றிருக்கும் மங்களகிரியும், அதற்குப் பக்கத்தில் வால்மீகி முனிவருக்குப் பிரத்தியட்சமான இராமசுவாமி வீற்றிருக்கும் பச்சை மலையும் இருக்கின்றன.

இன்றாயர் குலக்கொடியோடு, அணிமா
மலர்மங்கையொடு அன்பளவி, அவுணர்க்கு
என்றானும் இரக்கம் இலாதவனுக்கு
உறையும் இடமாவது, இரும்பொழில்சூழ்
நன்றாய புனல் நறையூர் திருவாலி
குடந்தை தடந்திகழ் கோவல்நகர்
நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தாற்கு
இடம்மாமலை யாவது நீர்மலையே
(1078-87).

(19) திருஇடஎந்தை :

இது 'திருவடந்தை' என மருவி வழங்கு கின்றது. தாம்பரத்திற்கு அடுத்த வண்டலூர் என்னும் நிலையத்தில் இருந்து, 16 கல்தொலை வில் உள்ளது. உந்தூர்தி உண்டு. சென்னை யிலிருந்து மாமல்லபுரம் செல்லும் பேருந்து மூலமாகவும் இத்திவ்விய தேசத்தை அடை லாம். நித்தியகலியாணப் பெருமாள், கோமள வல்லி நாச்சியார். கலியாணவிமானம். வராக தீர்த்தம், கலியாணதீர்த்தம். கிழக்கே திருமுக மண்டலம். நின்ற திருக்கோலம். மகாபலிச் சக்கரவர்த்தி தவம்செய்து பேறுபெற்ற தலம். மார்க்கண்டேயருக்குப் பிரத்தியட்சம். காலவ முனிவர் தன் பெண்கள் 360 பேரையும் தினம் ஒரு பெண்ணாக, யக்ஞவராகப் பெருமாளுக்குத் திருக்கல்யாணம் செய்து கொடுத்த தலம். அதனால் இப்பெருமாளுக்கு 'நித்திய கலியா ணர்' எனப் பெயர் ஏற்பட்டது. காலவ முனி வரின் பெண்கள்360பேரையும் சேர்த்து ஒருத்தி யாக்கி, அகிலவல்லிநாச்சியார் (பூமிதேவி) என்று தமது இடப்பாகத்தில் வைத்திருப்பதால் இத்தலம் இட எந்தை ஆயிற்று. மூலவர் வராகமூர்த்தியாக விளங்குகின்றார். திரு மழிசையாழ்வார் மங்களாசாசனம்.

திவளும் வெண்மதிபோல் திருமுகத்து அரிவை
செழுங்கடல் அமுதினிற் பிறந்த
அவளும் நின் ஆகத்து இருப்பதும் அறிந்ததும்,
ஆகிலும் ஆசை விடாளால்;
குவளையங் கண்ணி கொல்லியம் பாவை
சொல்லும் நின்தாள் நயந்திருந்த
இவளை, உன் மனத்தால் என்நினைந்து இருந்தாய்
இடஎந்தை எந்தை பிரானே. (1108-1117).

(20) திருக்கடல்மல்லை :

செங்கற்பட்டு என்னும் நிலையத்தில் இருந்து 18 கல். பட்சி தீர்த்தம் என்னும் திருக்கழுக்குன்றத்தில் இருந்து 9 கல். தல சயனப்பெருமாள், கிழக்கே திருமுகமண்டலம். சயனத் திருக்கோலம். நிலமங்கைநாச்சியார், ககன ஆகிருதி விமானம். கருடநதி, புண்ட ரீக முனிவருக்குப் பிரத்தியட்சம். பூதத்தாழ் வார் திருஅவதாரத் தலம். இங்குப் பல்லவர் காலத்துக் கருங்கற் சிற்ப வேலைகள் நிரம்ப உள்ளன. பஞ்சபாண்டவர் தேர்கள், கடற் கரைக்கோயில் முதலியன பார்க்கத்தக்கன. ஊர்க்கோயில் தலசயனம். கடற்கரைக்கோயில் சலசயனம். தலசயனப்பெருமாள் கோயிலுக்கு 1 கல் தொலைவில் ஞானப்பிரான் (வராக மூர்த்தி) கோயில் ஒன்று உள்ளது. பூதத்தாழ் வார், திருமங்கையாழ்வார் மங்களாசாசனம்.

புலன்கொள்நிதிக் குவையோடு
புழைக்கைம்மா களிற்றினமும்
நலங்கொள்நவ மணிக்குவையும்
சுமந்தெங்கும் நான்றொசிந்து
கலங்கள் இயங்கும் மல்லைக்
கடல்மல்லைத் தலசயனம்
வலங்கொள்மனத் தார்அவரை
வலங்கொள்என் மடநெஞ்சே
(1088-1107).

(21) திருவல்லிகேணி :

சென்னையின் ஒரு பகுதி. 'மயிலைத் திருவல்லிக்கேணி' என்று புகழப் பெற்றுள்ளது.

பார்த்தசாரதிப்பெருமாள். கிழக்கே திருமுக மண்டலம். நின்ற திருக்கோலம். வேதவல்லித்தாயார். உருக்குமிணிப்பிராட்டியாரோடும், அநிருத்தன் பிரத்தியும்நன் பலராமன் சாத்யகி ஆகிய தனது குடும்பத்தினரோடும், தொண்டைமான் சக்கரவர்த்தியின் பிரார்த்தனைக்கு இரங்கித் திருவேங்கடமுடையான் கண்ணபிரான் சேவை சாதித்த தலம். பிருந்தாரண்யம், ஆனந்த விமானம். இந்திர-சோம-மீன-விஷ்ணு-அக்கினி-தீர்த்தங்கள் ஐந்தும் சூழ்ந்த கைவிரணிசரஸ் (அல்லிக்கேணி). வியாசர் பிரதிட்டை செய்து ஆத்திரேயர் ஆராதித்த மூர்த்தி. சுமதி என்னும் அரசனுனுக்கு சித்திரை மாதத்தில் காட்சி கொடுத்துப் பெருவிழாக் கொண்டதலம். பிருகு அத்திரி மரீசி மார்க்கண்டர் சுமதி ஜாபாலி சப்தரோமர் என்னும் ஏழுமுனிவர்கள் தவம்புரிந்ததலம். இலட்சுமிதேவியார் இங்கே பிருந்தாரண்யத்தில் திருவவதாரம் செய்தருளி, பிருகு மகரிஷியால் வேதவல்லித் தாயார் என்று திருநாமம் இடப்பெற்று அவரது ஆச்சிரமத்தில் வளர்ந்து கிழக்கே திருமுக மண்டலமாய்ச் சயனத்திருக்கோலத்திலுள்ள மன்நாதப்பெருமானை மணம் புரிந்து கொண்ட தலம். அத்திரி முனிவர்க்கும், பிரகலாதனுக்கும், நரசிங்க உருவத்துடன் (தெள்ளிய சிங்கர்) மேற்கு முகமாய் வீற்றிருந்த கோலத்துடனும், மதுமந்தனுக்குச் சக்கரவர்த்தித் திருமகனாய்த் தெற்கே திருமுகமாக நின்ற கோலத்துடனும், சர்ப்பரோமனுக்குத் தேவப்பெருமாள் உருவமாய்க் கிழக்கு முகமாக வீற்றிருக்கும் கோலத்துடனும் சேவை சாதித்த தலம். முற்கல முனிவரால் கைரவிணி (அல்லிக்கேணி) தீர்த்தத்தில், மீன் இல்லாதிருக்கச் செய்யப்பெற்ற தலம். தொண்டைமான் சக்கரவர்த்திக்கும் பார்த்தனுக்கும் பிரத்தியட்சம். பேயாழ்வார், திருமழிசை யாழ்வார், திருமங்கையாழ்வார் மங்களாசாசனம். திருமழிசையாழ்வார், முதல் ஆழ்வார்களைச் சந்தித்த தலம்.

விற்பெரு விழவும் கஞ்சனும் மல்லும்
வேழமும் பாகனும் வீழச்
செற்றவன் தன்னைப், புரம்எரி செய்த
சிவன்உறு துயர்களை தேவைப்
பற்றலர் வீயக்கோல் கையில் கொண்டு,
பார்த்தன்றன் தேர்முன் நின்றானைச்
சிற்றவை பணியால் முடிதுறந் தானைத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே. (1)

பள்ளியில் ஓதிவந்த தன்சிறுவன்
வாயில்ஓர் ஆயிர நாமம்,
ஒள்ளிய ஆகிப் போத ஆங்கதனுக்கு
ஒன்றும்ஓர் பொறுப்பிலன் ஆகி,
பிள்ளையைச் சீறி வெகுண்டு தூண்புடைப்பப்
பிறைஎயிற்று அனல்விழிப் பேழ்வாய்த்
தெள்ளிய சிங்கம் ஆகியதேவைத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே. (2)

மீனமர் பொய்கை நாண்மலர் கொய்வான்
வேட்கையி னோடுசென் றிழிந்த
கானமர் வேழம்கைஎடுத்து அலறக்
கராஅதன் காலினைக் கதுவ
ஆணையின் துயரம் தீரப்புள் ஊர்ந்து
சென்றுநின்று ஆழி தொட்டானைத்
தேனமர் சோலை மாடமா மயிலைத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே. (3).

பரதனும் தம்பி சத்துருக் கனனும்
இலக்கும னோடு மைதிலியும்
இரவும்நன் பகலும் துதிசெய்ய நின்ற
இராவணாந் தகனை எம்மானை
குரவமே கமழும் குளிர்பொழில் ஊடு
குயிலொடு மயில்கள் நின்றால
இரவியின் கதிர்கள் நுழைதல் செய்தறியாத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே. (4)

(22) திருக்கடிகை :

இது சென்னை-அரக்கோணம் பெங்களூர் இருப்புப்பாதையில் சோளங்கிபுரம் (சோளசிங்கபுரம்) நிலையத்தில் இருந்து 2 கல்தொலைவில் உள்ளது. கடிகாசலம் எனவும் வழங்கும். யோக நரசிம்மர், கிழக்கே திருமுக மண்டலம். வீற்றிருக்கும் திருக்கோலம். தக்கான் (பக்த உசிதசுவாமி), அக்காரக்கனிப் பெருமாள். அமிர்தவல்லித்தாயார். சிம்ம கோஷ்ட ஆகிருதி விமானம், அமிர்த தீர்த்தம், தக்கான் குளம், சிறிய திருவடிக்குப் பிரத்தியட்சம். கோயில் சுமார் 400 அடி உயரமுள்ள மலையின் மேல் இருக்கின்றது. சந்நிதிக்கு எதிரில் மற்றொரு குன்றில் சிறியதொரு (ஆஞ்சநேயர்) கோயில் உள்ளது. தேவேந்திரனின் வேண்டுகோளின்படி பலராமன் தன் கலப்பை ஆயுதத்தை எறிந்து செருக்கு அடக்கிய பருவதம். இரணியனைக் கொன்று உருத்திர சொரூபமாக இருந்த நரசிம்ம சுவாமியைப் பிரகலாதாழ்வார் துதிசெய்து சாந்தப்படுத்திய தலம். கடிகை-நாழிகை. இத்தலத்தில் ஒரு நாழிகை நேரம் மட்டும் தங்கியிருந்து தியானித்தாலும் முத்தி சித்திக்கும். ஆதலால் இதற்குக் கடிகாசலம் என்று பெயர் வழங்குவதாயிற்று. பேயாழ்வார், திருமங்கையாழ்வார் மங்களாசாசனம்.

மிக்கானை மறையாய் விரிந்த
விளக்கை, என்னுள்
புக்கானைப் புகழ்சேர்
பொலிகின்ற பொன்மலையைத்
தக்கானைக் கடிகைத்
தடங்குன்றின் மிசையிருந்த
அக்காரக் கனியை
அடைந்துய்ந்து போனேனே! (1731).

பண்டெல்லாம் வேங்கடம், பாற்கடல் வைகுந்தம்
கொண்டங் குறைவார்க்குக் கோயில்போல், வண்டு
வளங்கிளரும் நீள்சோலை வண்பூங் கடிகை
இளங்குமரன் றன்விண் நகர் (3444).

ஆலய வழிபாட்டின் சிறப்பு

பேராசிரியர் திரு. மு. முத்துராமன், M.A., Ph.D.,

பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

பண்டைத் தமிழக வேந்தர் பெருமக்கள் இறைவழிபாட்டிற்கு முதலிடம் கொடுத்து, ஆண்டின் பன்னிரு திங்களிலும் விழா எடுத்தனர் என்று சங்க இலக்கியங்களிலே சான்றுகள் தரப்பட்டுள்ளன. எனவே, பண்டைத் தமிழர்களின் வாழ்வே சமய வாழ்வாக அமைந்திருந்ததென்று கூறினால் அது மிகையாகாது; சைவப் பெரியோர்களின் வாழ்க்கைச் சரிதம் அதற்கோர் உதாரணமாகும்.: 'எந்நாட்டவர்க்கும் இறைவன், தென் நாட்டவர்க்குச் சிவன்'. அவ்வாறு இறை வழிபாட்டையும், சமய வாழ்வையும் இணைக்கும் பாலமாக அமையப்பெற்றதே இயல், இசை, நாடகம். அவற்றைப் போற்றிக் காப்பதில் தமிழ் மன்னர்கள் எவ்வளவு ஆர்வம் காட்டினார்கள் என்பதனை நிரூபிக்கும் கலங்கரை விளக்குகளே தமிழ்நாட்டின் ஆலய அமைப்புகளாகும். தெய்வ ஆலயங்கள் இறை வழிபாட்டின் சிறப்பிடங்களாக மட்டுமல்லாமல், இயல், இசை, நாடகம் பொதுமக்களின் நன்மைக்காக நடத்தப்பெறும் திருத்தலங்களாகவும் விளங்கின என்பதும் குறிப்பிடத்தகும். எனவே, ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்பும் நம் பண்டைத் தமிழரின் பண்பையும், பழமையையும், புதுமையுடன் உலகத்திற்கு எடுத்துக்கூறும் உன்னதக் கலாசாரச் சின்னங்கள் தமிழக ஆலயங்களே. மக்களின் நல்வாழ்விற்கு ஆலய வழிபாடு இன்றியமையாதது என்பதனை வலியுறுத்தவே, ''கோயில் இல்லாத ஊர் பாழ்'' என்றும் கூறினர். இவ்வாறு பழங் கோயில்கள்ளைப் போற்றிக் காப்பதில் நாம் பெருமையடைகிறோம்.

சமய வாழ்வும், இறைவழிபாடும் ஒன்றிணைந்து மலரும்போது, மக்கள் சமுதாயத்திலே ஒற்றுமை உறுதியடைகிறது; அவ்வாறான உயர்ந்த பண்பாடுகளை உருவாக்கியது நம் பண்டைத் தமிழகம் என்ற பேருண்மையை இன்றைக்கும் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது தமிழ்மறை-திருவள்ளுவம், தமிழினத்திற்கு மட்டுமல்லாமல் மனித சமுதாயத்திற்கே எக்காலத்திற்கும் பயன்படும் பண்புகளைப் பகுத்தறிவுக்கு ஏற்ப வரையறுத்துக் கூறப்பட்டுள்ள உலக அறநெறி நூல்களுள் சிறந்தது திருக்குறள் என்பதனை அறிஞர் பெருமக்களே எடுத்துக்கூறிச் சிறப்பித்துள்ளார்கள். அதற்கு முக்கிய காரணம், மனித நல்வாழ்விற்குத் தேவையான அணிகலன்களாகிய அறம், பொருள், இன்பம் என்பதனைத் தெளிவாக எடுத்துக் கூறி, அவற்றிற்கும் அப்பாற்பட்ட தெய்வீக நிலையினையும் கோடிட்டுக் காட்டியுள்ளார். அதனாற்றான், வள்ளுவப் பெருந்தகையினை முப்பாலில் நாற்பால் மொழிந்தோன் என்றும் அழைப்பர். அப்பேர்ப்பட்ட பொய்யா மொழி புலவர், தமது நூலை அகரத்தில் ஆரம்பித்ததோடல்லாமல், அகரமே எவ்வாறு மொழிகளுக்கெல்லாம் முதன்மையாக உள்ளதோ, அதைப் போலவே, உலகத்திற்கும் ஓர் முதல்வன் என்பதனையும் தமிழ் மரபிற்கிணங்க, இயற்றி, இறை உண்மையையும் எடுத்துக் காட்டியுள்ளார். தெய்வப் புலவர் திருவள்ளுவர்.

''அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு''

கோயில்களைப் புதுப்பிப்பதும், விழாக்கள் எடுப்பதும் இறை உண்மையை மீண்டும் மீண்டும் வலியுறுத்தும் அறச் செயலாகும். இவ்வாறு வெளிப்படையாக நடத்தப்பெறும் நற்செயல்கள், அறியாமையில் உழன்று அமைதியின்றித் தவிக்கும் பெருவாரியான மானிடத்தவருக்கு நல்ல வழிகாட்டி, நலம்பெறச் செய்வதற்கே எல்லோரும் இன்புற்று வாழ்வதே தமிழ் மறை காட்டும் தன்னலமற்ற செந்நெறியாகும். அவ்வுன்னத வாழ்வின் சிறப்பினை உணருவதற்கு உள்ளங்கள் தூய்மைபெற வேண்டும்; அறியாமை நீங்க வேண்டும். அறியாமை இருள் நீங்கி அமர வாழ்வு பெறுவதற்கு இறைவனின் திருவடிகளே மனித வாழ்வின் நிலையான துணையாகும் என்பதனையே வலியுறுத்திக்கூறியுள்ளார், வள்ளுவப்பெருந்தகை:

''பிறவிப் பெருங்கடல் நீந்துவர், நீந்தார்
இறைவன் அடிசேரா தார்''.



சென்னை திருவல்லிக்கேணி அருள்மிகு பாரத்தசாரதிசுவாமி கோயில் சார்பில் கட்டப்பெறும் கல்யாண மண்டபத்திற்குத் திருமதி **பி. இராஜம்மாள் அவர்கள்,** அறநிலைய அமைச்சர் மாண்புமிகு **இராம. வீரப்பன்** அவர்களிடம் ரூ. **40,000/-** நன்கொடை நிதி வழங்குதல்

சென்னை திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயிலின் சார்பில் கட்டப் பெறும் கல்யாண மண்டபத் திற்கு, அறநிலைய அமைச்சர் மாண்புமிகு **இராம. வீரப்பன்** அவர்கள் கால்கோள் நிகழ்த்து தல்.

சென்னையில் 23.3.79 அன்று நடைபெற்ற தமிழ்நாடு ஆலய ஊழியர்கள் சங்கத்தின் 4-வது மாநில மாநாட்டில் தமிழக முதல்வர் மாண்புமிகு **எம். ஜி. இராமச்சந்திரன்** அவர்களை, சங்கத்தின் சிறப்புத் தலைவர் திரு துரை கோவிந்தராசன், எம்.எல்.ஏ. அவர்கள் மாலை அணிவித்து வரவேற்றல்.

தமிழ்நாடு ஆலய ஊழியர்கள் சங்கத்தின் 4-வது மாநில மாநாட்டில், தமிழக முதல்வர் மாண்புமிகு **எம். ஜி. இராமச்சந்திரன்**, அறநிலைய அமைச்சர் மாண்பு மிகு **இராம. வீரப்பன்**, அறநிலைய ஆணையர் திரு. யு. **சுப்ரமணியன்**, ஐ.ஏ.எஸ்., முதலிய பெருமக்கள் பலரும் கலந்து கொள்ளுதல் (23.3.79).

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600 034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ.எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.